
# பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும்



தொகுத்தவர் : மேமன்கவி





# பட்டம் மறுதலிப்பும் பல்வேறு சர்ச்சைகளும்

தொகுத்தளிப்பவர் :

- 'மேமன்கவி'

155/4B, 3ம் குறுக்குத் தெரு,
கொழும்பு -11.

டொமினிக் ஜீவா அவர்களின் பவள விழா ஆண்டு ஞாபகார்த்தமாக.......
இது ஒரு மல்லிகைப் பந்தல் வெளியீடு

முதற் பதிப்பு: டிசம்பர் - 2001.

அச்சிட்டோர்: யு. கே. பிரின்டர்ஸ்,
98 A, விவேகானந்த மேடு,
கொழும்பு - 13.
தொலைபேசி: 344046, 074-614153

கணினி அச்சமைப்பு: எஸ். சித்திராங்கனி

விலை: 100/=

ISBN: 955-8250-13-9

கிடைக்கும் இடம்:

மல்லிகைப்பந்தல்
201-1/1, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி: 320721
E-Mail: panthal@sltnet.lk

# மறுதலிப்புக்கான காரணம் ஆத்ம சுத்தம் தான்

*–மேமன் கவி*

யாழ்ப்பாணச் சமூகத்தின் பின் தங்கிய ஒடுக்கப்பட்ட ஒரு சமூகம் என உயர் சமூகத்தினர் எனத் - தங்களைச் சொல்லிக் கொள்பவர்களால் ஒதுக்கப்படும் ஒரு சமூகத்திலிருந்து, தோன்றி ஒரு தமிழ் எழுத்தாளனாகத் தன்னை இனங் காட்டிய டொமினிக் ஜீவாவை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வழங்கிய முதுகலைமாணிப் பட்டத்தை, அது கல்விசார் தகைமைப் பட்டம் என்ற காரணத்தால், அதனை ஏற்க மறுத்த டொமினிக் ஜீவாவை-

மேமன் சமூகத்திலிருந்து அதாவது, வியாபாரத்தைத் தவிர உயர்வு, தாழ்வு பற்றிய பிரக்ஞையே துளிகூட இல்லாத, பட்டங்கள், விருதுகள், பரிசுகள் பற்றிச் சிறிதும் அக்கறைப் படாத, ஒரு சமூகமான மேமன் சமூகத்திலிருந்து - தமிழ் எழுத்தாளனாக வளரத் துடிக்கும் ஒருவனாக இருக்கும் நான் - புரிந்து கொண்ட, அல்லது ஆழமாகத் தெரிந்து கொண்ட ஜீவாவை எடுத்துரைக்கும் ஒரு முக்கிய தேவையாக இம்முன்னுரையை நான் பயன் படுத்திக் கொள்கிறேன்.

கொழும்பு கொள்ளுப்பிட்டித் தேயிலை பிரசார சபை மண்டபம். 70-களின் மத்தியில் பெரும்பாலான இலக்கியக் கூட்டங்கள் அங்குதான் நடைபெறும். இம்மண்டபத்தில் வைத்துத்தான் நான் பெரிதும் மதிக்கும் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர், சிவத்தம்பி மற்றும் சில்லையூர் செல்வராசன், தலைவர் இளங்கீரன், எச். எம். பி. முஹைத்தீன், ஈழவாணன், எம். ஏ. நு்.மான், பிரேம்ஜி ஞானசுந்தரம், கே. எஸ். சிவகுமாரன், அந்தனி ஜீவா, இப்படியாக நீண்ட பட்டியலுக்குரிய இலங்கை எழுத்தாளர்களை நான் பரிச்சயமாக்கிக் கொண்டேன். டொமினிக் ஜீவாவையும் அங்குதான் முதல் முதலாகக் கண்டேன். அத்தனை எழுத்தாளர்களுக்கு மத்தியிலும், அன்றைய என் கண்களுக்கு மிகவும் வித்தியாசமாக அவர் தென்பட்டார்.

அன்றைய கால கட்டத்தைக் கடந்து வந்து, 1974-ம் ஆண்டு எனது முதலாவது கவிதை 'சுதந்திரன்' ஏட்டில் வெளிவந்தது. 1976-ம் ஆண்டு வரை, ஓரிரு கவிதைகள் மட்டுமே எழுதி இருந்த நிலையில், கொழும்பு இரண்டாம் குறுக்குத் தெருவில், மு. தளையசிங்கம் எழுதிய 'போர்ப்பறை' என்ற நூலுடன் நடந்து வந்து கொண்டிருந்த வேளை - ஜீவா அவர்களைச் சந்தித்தேன். தைரியமாக அவருடன் அன்றுதான் முதல் முதலாகப் பேசினேன். என் கைகளில் தளையசிங்கம் எழுதிய போர்பறையை வைத்து இருப்பதைக் கண்டு அவர் சற்று ஆச்சரியப்பட்டது போல் தெரிந்தது. என்னைப் பற்றிய அறிமுகம் செய்து கொண்டே, இன்றைய நாட்களில், யாழ்ப்பாணத்திலிருந்து அவர் கொழும்பு வந்தால், தங்கும் மலிபன் வீதியில் அமைந்து இருந்த ஓட்டப்பிடாரம் குருசுவாமி அண்ணாச்சி அவர்களின் கடை வரை அவருடன் நடந்து சென்று, விடை பெற்றுக் கொண்டேன். இது தான் டொமினிக் ஜீவாவை நான் சந்தித்த முதல் சந்திப்பு.

அன்று தொடங்கியது தான் ஜீவாவுடனான நேசம்.

அவரை முதல் முதலாகச் சந்தித்ததற்குப் பின்னர் வந்த மாதம் ஒன்றில் மல்லிகையை மிகவும் ஆவலுடன் எதிர்ப்பார்த்து, அவர் தங்கி இருந்த குருசுவாமி அண்ணாச்சி அவர்களின் மலிபன் வீதிக் கடைக்குச் சென்றேன். அன்று தான் குருசுவாமி அவர்களை எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தார் ஜீவா. ஜீவாவுடனான நேசத்தின் காரணமாக, எனக்கு அவர் செய்த முதல் பெரிய பயன் என்னவென்றால், இலக்கியத்தை மானசீகமாக நேசித்த குருசுவாமி ஐயாவை எனக்கு அறிமுகப்படுத்தியதுதான்!

அத்தோடு, அம்மாத மல்லிகை இதழையும் தந்து, என்னைப் பற்றி மேலும் விபரம் கேட்டு, எனது புகைப்படம் ஒன்றையும் கேட்டு எடுத்தார். அதன் விளைவாக 1976-ம் ஆண்டு ஜுலை மாத மல்லிகையில் 'இளந் தளிர்'1 என்ற தலைப்பிட்டு என்னைப் பற்றிய குறிப்பு வெளிவந்தது. அனறு வெளிவந்த அக்குறிப்பு என்னைப் பொறுத்தவரை நான் இலக்கியத் துறையில் வளரத் தூண்டிய ஒரு பெரிய ஊக்கமாகும். அன்றும் - இன்றும் மல்லிகை அட்டைப் படத்தில் ஒரு எழுத்தாளரின் படமும், அவரைப் பற்றிய குறிப்பும் வெளிவரும். அப்படியாக வெளிவரும் பொழுது அந்த எழுத்தாளருக்கு ஏற்படும் சந்தோஷமும், கிடைக்கப் பெறும் கௌரவமும், அதாவது அதனை எவ்வாறு பெரிய கௌரவமாக நினைப்பாரோ, அவ்வாறான மனோநிலையில்தான் நான் அன்று இருந்தேன். அந்த உணர்வே, இற்றைவரையிலான எனது வளர்ச்சிக்கான ஒரு பெரிய வித்தாக அமைந்தது எனலாம்.

மல்லிகையில் அக் குறிப்பு வெளிவந்த காலகட்டம், நான் ஒரு சில கவிதைகள் மட்டுமே எழுதி இருந்தேன். அக் காலகட்ட, எனது வேகத்தின்

காரணமாக, ஓர் ஆரம்ப கால எழுத்தாளன் மூழ்கக் கூடிய மூன்றாந் தர மயக்கங்களில் மூழ்காதவகையில், என்னை வெளிப்படுத்திக் காப்பாற்றி, அன்று இலங்கையில் மிக முக்கிய இலக்கிய இயக்கமாக இருந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் என்னை இணைய வைத்தது எனலாம். அதேவேளை எழுத வந்து இரண்டு வருடத்திற்குள் எனது முதல் நூலை, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது வெளியீடாக, எனது முதலாவது தொகுதியாக யுகராகங்களை வெளியிட வைத்தது. அவ்வாறு வெளியிட வைத்தது அல்ல ஜீவா செய்த சாதனை. முதல் நூலை வெளியிட்டு, அப்படி வெளியிட்ட மிதப்பில் மயங்கி, முடங்கிவிடாது, ரொம்பவும் நிதானமாகவும், மேலும் ஆழமாகவும் இயங்கினால்தான் சரியான வளர்ச்சியை அடைய முடியும் என்பதை எனக்கு உணர்த்தியதுதான் ஜீவாவின் நட்பு. எனக்குச் செய்த மிகப் பெரிய உதவி என்று சொல்வதுதான் சரியான வார்த்தையாகும். ஜீவாவுடனான இந்த இலக்கிய உறவின் காரணமாக யாழ்ப்பாணச் சமூகத்தின் உள்வட்ட அமைப்பைப் பற்றியும், அதன் உயர் சிறப்புக்களையும், சிந்தனைகளையும், பண்பாடுகளையும், குறைபாடுகளையும், பலவீனங்களையும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மிகவும் சரியாகச் சொல்வதானால், நினைவு இல்லாத வயதில் என் சித்தி ஒருத்தி வாழ்க்கைப் பட்ட யாழ்ப்பாணம் சென்று இருந்த நான் - நினைவு தெரிந்த நாளில், எனது முதலாவது தொகுதியான யுகராகங்கள் அறிமுக விழா, இன்று இல்லாத யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடந்த பொழுது, முதல் முதலாக யாழ்ப்பாணம் சென்றிருந்தேன். அவ்விழாவை ஜீவாதான் ஏற்பாடு செய்து இருந்தார். அவ்விழாவை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அன்று இருந்த பேராசிரியர் சிவதம்பி அவர்கள், மௌனகுரு போன்ற அறிஞர்கள் எனது தொகுதியினைப் பற்றித் தங்களது கருத்துரைகளை வழங்கினார்கள். அத்தோடு இலங்கையின் மதிக்கத் தக்க ஓர் இலக்கிய அறிஞரான ரசிகமணி கனக செந்திநாதனை அவர்களிடமிருந்து நான் ஆசி பெறவும் ஜீவா வழி வகுத்தார்.

தொடர்ந்து-

1982-ம் ஆண்டு தமிழக நர்மதா பதிப்பகம் ராமலிங்கம் அவர்களுடன் ஜீவா கொண்டிருந்த இலக்கிய ஈடுபாட்டின் காரணமாக எனது முகம் பார்த்திராத நிலையில், ஜீவாவுடனான தொடர்பின் காரணமாக எனது இரண்டாவது தொகுதியான ஹிரோசிமாவின் ஷீரோக்கள் நர்மதா வெளியீடாக வெளி வந்தது.

1983-ம் ஆண்டு ஜீவாவுடன் தமிழகம் சென்றேன். ஜீவாவுடனான அந்தப் பயணமும் எனக்கு மிகவும் பயன் தரக் கூடியதாக இருந்தது. நான் தனியாகச் சென்று இருந்தால் - சந்திக்க முடிந்திருக்காத நான் சந்திக்க விரும்பிய பல எழுத்தாளர்களை - (ஜெயகாந்தன் உட்பட) சந்திக்கச்

சந்தர்ப்பமும் ஜீவா மூலம் எனக்குக் கிடைத்தது. அப்பயணத்தில் எனது மூன்றாவது தொகுதியினை (யந்திரச் சூரியன்) நர்மதா வெளியீடாக வெளிவரக் கூடிய ஏற்பாடுகள் செய்யக் கூடியதாக இருந்ததுடன் - நர்மதா ராமலிங்கம் போன்ற நல்ல நேசமிக்க உள்ளத்துடன் உறவு ஏற்படவும் வழி பிறந்தது. அந்த உறவின் தொடர்ச்சியாக எனது நான்காவது தொகுதியாக 'நாளையை நோக்கிய இன்றில்' வெளிவந்தது. இத் தொகுதி நான் சாகித்திய மண்டலப் பரிசு பெறவும் வழி வகுத்தது.

90-களின் இறுதிவரை - ஜீவாவுடனான நேசம் இருந்தும், ஜீவாவின் உழைப்பில், உருவான மல்லிகைப் பந்தலின் வெளியீடாக, எனது ஒரு நூல் ஏனும் வெளிவராத நிலையில், மல்லிகைப் பந்தல் வெளியீடாக எனது நூல் வெளிவர வேண்டும் என்று ஜீவா செய்த தொடர்ச்சியான நச்சரிப்பும், மல்லிகைப் பந்தல் வெளியீடாக எனது நூல் ஒன்று வெளிவர வேண்டும் என்ற எனது ஆசையின் காரணமாகவும், 'மீண்டும் வசிப்பதற்காக' என்ற எனது ஐந்தாவது தொகுதி மல்லிகைப் பந்தல் வெளியீடாக வந்தது.

இவ்வாறாக எனது இலக்கியப் பயணத்தின் ஒவ்வொரு எட்டுகளிலும் ஜீவாவின் பங்கு முழுமையாக இருந்து வந்துள்ளது.

மிகவும் சரியாகச் சொல்வது என்றால் தமிழ் மொழியினைத் தாய் மொழியாய்க் கொள்ளாத வட இந்திய மொழியான மேமன் மொழியினை, அதுவும் வரிவடிவமற்ற ஒரு மொழியினைத் தாய் மொழியாகக் கொண்ட, வட இந்தியாவை மூதாதையராகக் கொண்ட மேமன் இனத்தைச் சேர்ந்த ஒருவனை மேமன் கவி என்ற பெயரில் தமிழ் கவிஞனாக்கி, தமிழ் மக்களை அங்கீகரிக்க வைத்த ஒரு சாதனையானது மல்லிகை மூலம் ஜீவா ஆற்றிய தமிழ்த் தொண்டுகளில் பெரியதும் முதன்மையானதும் என்று தான் சொல்ல வேண்டும்.

எந்தவொரு பல்கலைக் கழகங்கள் கூட, செய்திராத ஒரு பெரும் தமிழ் தொண்டு இது எனலாம்.

பல்கலைக் கழகங்கள் என்ன? இங்கும் சரி தமிழ் நாட்டிலும் சரி. வேற்று மொழிக்காரன் ஒருவனைத் திட்டமிட்டுத் தமிழ் இலக்கிய உலகில் வளர்த்தெடுத்த ஒரு தனிநபரும் கூட இல்லை. அந்த வகையில் தனிநபர் மட்டத்திலும் ஜீவாவுக்கு இதுவொரு சாதனையே இவ்விடத்தில், எனது இலக்கிய சகா, ப. ஆப்டீன் நினைவுக்கு வருகிறார். அவரது தாய் மொழி மலாய் மொழி, இன்று இலங்கை ஆக்க இலக்கியத்துறையில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்து இருக்கிறார். அவரும் ஜீவாவின் கண்டு பிடிப்புகளில் ஒருவராகவே இருக்கிறார்.

ஜீவாவுடனான இத்தகைய அனுபவங்கள் ஈழத்து இலக்கியப் பரப்பில்,

மல்லிகை என்ற இலக்கியப் பண்ணையில் உருவாக்கப்பட்ட, பல எழுத்தாளர்களிடம் இருக்கின்றன. அவ்வனுபவங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களாக வெளியிடப்படும் பொழுதுதான்-

கடந்த 36-வருட காலத்திற்கு மேலாக, தனி மனிதனாக நின்று, மல்லிகையையும், மல்லிகைப் பந்தலையும் நடத்தியதன் மூலம், தானே ஒரு நிறுவனத்திற்குரிய கனத்தையும் பெறுமதியையும் பெற்றுக் கொண்ட ஜீவா - தனி மனிதராக நின்று, தனிநபர் மட்டத்தில், அவர் ஆற்றி இருக்கும் பணிகளும், தமிழ்த் தொண்டும், அவை ஏற்படுத்தி இருக்கும் தாக்கமும் அறுவடைகளும் முழுமையாகத் தெரிய வரும். அவ்வாறு ஒரு தனிமனித நிறுவனமாகச் செயற்படும் ஜீவாவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அண்மையில், முதுகலைமாணிப் பட்டம் கொடுத்து கௌரவிப்பதாக அறிவித்தது. ஆனால் ஜீவாவோ அதுவொரு கல்வித் தகைமை சார் பட்டம் என்பதனால் அதனை ஏற்க மறுத்து விட்டார்.

இப்பிரச்சினையை மையமாக வைத்து நம் நாட்டுக் குறிப்பாக நம் ஊடகங்கள் பத்திரிகைகள் ஜீவா பட்டம் ஏற்க மறுத்த அச் செயலுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பன் முகத் தன்மைகளைக் கொண்ட பலதரப்பட்ட கருத்துக்களை, அபிப்பிராயங்களை வெளியிட்டன. அக்கருத்துக் குவியல்களில் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினரின் கருத்துக்களைக் காணக் கூடியதாக இருந்தது. அதே வேளை ஜீவாவின் உழைப்பில் உருவான மல்லிகை மூலம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்றவை ஊடாக மக்கள் மத்தியில் தங்களை அடையாளப் படுத்திக் கொண்ட, பெயர் பதித்துக் கொண்ட பல்கலைக் கழகங்கள் சார்ந்த எந்தவொரு அறிவு ஜீவியும் தனது கருத்துக்களை முன் வைத்திருக்காததையும் காணக் கூடியதாக இருந்தது. இச் செயல் அந்த அறிவுஜீவிகளின் தோழமையற்ற தன்மையையே எனக்கு எடுத்துக் காட்டியது. இவர்களின் பிரபலத்திற்காகத் தனது உழைப்பை நல்கினாரே இவர்! எனக் கோபம் தான் வந்தது. என்னைக் கேட்டால்-

எந்தவொரு நிறுவனமும் வழங்காத எந்தவொரு பட்டமும் விருதும், அந்த நிறுவனமும் சரி, அப்பட்டமும் சரி, எவ்வளவுதான் சமூக மட்டத்தில் பெறுமதியான ஒன்றாக இருப்பினும் கூட - அது ஜீவாவுக்கு ஏற்படும் நஷ்டமாக இல்லை. அதற்கு மாறர்க ஜீவாவின் உழைப்பின் மூலம், ஈழத்து இலக்கியப் பரப்பிற்கு ஏற்பட்டு இருக்கும் பயன்பாட்டின் விஸ்தீரணத்திற்கு முன்னால் அவ் விருதுகள், பட்டங்கள் பெறுமதி குறைவானதாகவே இருக்கும், என என்னளவில் நான் கருதுகிறேன்.

ஏனெனில், என்னைப் பொறுத்தவரை, பட்டங்கள், விருதுகள் ஒரு எழுத்தாளனுக்கு அவனது படைப்புத்திறன் வளர்ச்சிக்கு எந்த அளவுக்கு

உதவும் என்ற கேள்வி நீண்ட காலமாக எனக்குள் இருக்கிறது. அப்படிப் பெற்ற விருதுகள் - பட்டங்கள்தான் தன்னை எழுதத் தூண்டியது என்று யாராவது ஒரு எழுத்தாளர் சொல்லும் பட்சத்தில் அது அந்த எழுத்தாளனின் தனிமனித பலவீனம் என்று நான் ஏற்றுக் கொண்டாலும், என்னளவில் அவரது படைப்பாக்க நேர்மையில் எனக்கு சந்தேகம் வரச் செய்கிறது.

நல்லதொரு படைப்பாளியோ, சமூகத்திற்கு அளவான வழியில் சேவை செய்ய வேண்டும் என்று விரும்புகின்றவரோ இத்தகைய (பட்டங்கள் - விருதுகள்) விடயங்களில் ஆர்வமும் அக்கறையும் அற்றவராகத் தான் இருப்பார். எழுத்தும் சரி, சமூக சேவையும் சரி - உண்மையான அதன் நிலைத்த பயன் பாட்டு வாழ்வை பெறுவது என்பது, அதனை கைளாளுபவரின் ஆத்ம சுத்தத்தில்தான் இருக்கிறது.

அந்த ஆத்ம சுத்தம் ஜீவாவிடம் நிறையவே இருக்கிறது, என்பதனால் அவரது பணிகளின் நிலைத்த வாழ்வுக்கு முன்னால் பட்டங்கள் விருதுகளின் மதிப்பு இரண்டாம் பட்சமானவையாக, அவசியமற்றவையாக என் அளவில் தெரிகின்றன.

அதேவேளை - இன்றைய காலகட்டத்தில், எந்தவொரு, விருதும் பட்டமும் வழங்குவதில், ஏதோ வகையான 'அரசியல்' செயற்பட்டுக் கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். அவ்வாறான அரசியலுக்கு, எந்தவிதமான உள்நோக்க அரசியலும் (அதாவது சுயநல லாப அரசியல் இல்லாத) ஜீவாவின் விஸ்தீரணமான உழைப்பு நன்றிக்கடன் பட்டுவிடக் கூடாது என்பதும் எனது எதிர்ப்பார்ப்பு. கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஜீவாவுடன் நான் பழகிய காலத்தில், நான் அறிந்த வரை பல பட்டங்கள், விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், அப்பட்டங்களையோ, விருதுகளையோ அவர் எந்த இடத்திலும் பயன்படுத்தியதும் கிடையாது. சொன்னதும் கிடையாது. அவரது இப்பண்பை நானும் எனது இலக்கியப் பயணத்தில் தெரிந்து வைத்துள்ளேன். ஒரு எழுத்தாளனுக்கு விருதுகள் பட்டங்கள் முக்கியமானவை அல்ல. அவனது செயற்பாடுகளும், வெளிப்பாடுகளும் தான் முக்கியமானவை என்ற கருத்தை அவரது மேற்குறித்த நடத்தையினால் எனக்குப் புரிய வைத்தவர். இன்று விண்ணப்பம் போட்டு பட்டங்கள் வாங்கித் தமது பெயர்களுக்கு முன்னாலும் பின்னாலும் போட்டுத் திரிகின்ற சில எழுத்தாளர்களின் மத்தியில் ஜீவாவின் இப்பண்பு என்னை மிகவும் கவர்ந்தது.

இந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கொடுத்த கல்வித் தகைமைப் பட்டம் என்ற முறையில் ஜீவா ஏற்க மறுத்த நிலையில் வெகுசன ஊடகங்கள் வெளியிட்ட அக் கருத்துக்கள் வெறுமனே பத்திரிகை நறுக்குகளாகப் போய்விடக்கூடாது. எதிர்காலத்தில் தோன்றும் என்னைப் போன்ற இலக்கிய நேசகன் ஒருவன், ஒரு காலத்தில் ஒரு உயர் கல்வி

நிறுவனத்திற்கும், படைப்பாளிகளுக்கும் முரண்பாடான நிலை ஏற்பட்ட பொழுது யார் யார் எந்த எந்தப் பக்கம் நின்றார்கள் - எந்த எந்த பத்திரிகைகள் இது சம்பந்தமான கருத்துக்கள் வெளியிட்டன போன்ற விபரங்களை ஓர் ஆவணத் தொகுப்பாகக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த நூலைத் தொகுத்து இருக்கிறேன். அதேவேளை - நான் மேற்கொண்ட ஜீவாவுடனான உறவும், அதேவேளை அவரது பவள விழாவினை முன்னிட்டு, அமைக்கப் பட்ட குழுவின் அமைப்பாளர்களில் ஒருவன் என்ற வகையில் இந்த ஆண்டு அவரது பவளவிழா ஆண்டாக இருப்பதனால், இக்காலகட்டத்தில் இத்தொகுப்பு வெளிவர வேண்டும் என விரும்பியே இந்த நூலைத் தொகுத்து இருக்கிறேன்.

இவ்வேளை, அக்கருத்துகளை முன்வைத்த எல்லோருக்கும், அக்கருத்துக்களை வெளியிட்ட தினகரன், வீரகேசரி, தினக்குரல், இவ்விவாதத்தைத் தொடர்ந்து நடத்திய சுடர் ஒளி, மல்லிகை, ஆதவன், நவமணி, ஞானம் ஆகிய பத்திரிகை சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று சொல்லத் தோன்றுகிறது. பட்டம் பெற அழைக்கப்பட்ட ஜீவாவை விட, அப்பட்டத்தை மறுதலித்துவிட்டு எந்தவிதமான பரபரப்புமின்றி இயங்கிக் கொண்டிருக்கும் ஜீவா ரொம்ப ரொம்ப மதிக்கத்தக்கவராக என் மனசுக்குப் படுகிறார்.

இந்தப் பல்வேறுபட்ட சர்ச்சைகளுக்கு மத்தியிலும் ஒரு மகிழ்ச்சியான செய்தி. கிழக்குப் பல்கலைக் கழகம் நமது நாடகக் கலைஞர் குழந்தை சண்முகலிங்கம் அவர்களுக்குக் கௌரவ கலாநிதிப் பட்டமளித்துக் கலைத்துறையைக் கௌரவித்துள்ளது. இத்தகைய சாதனையை நடைமுறைப் படுத்திய கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தரையும் அதன் நிர்வாகத்தினரையும் மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

அட்டைக்குப் புகைப்படமெடுத்து உதவிய மாத்தளை ஜெயபால் அவர்களுக்கும், அச்சுப் படிகளை ஒப்பு நோக்கித் தந்த மா. பாலசிங்கம் அவர்களுக்கும், அழகாக அச்சியற்றித் தந்த யு. கே. அச்சகத்திற்கும் எனது நன்றிகள்.

My Number

Your Number

Telephone: Jaffna 22461 23826

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

P.O. Box 57,
Thirunelvely,
JAFFNA.

2001.08.27

திரு. டொமினிக் ஜீவா
"மல்லிகை"
201 1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு 13.

அன்புடையீர்,

கௌரவ முதுகலைமாணிப் பட்டம்

தங்கள் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் பணிகளை கௌரவிக்கும் பொருட்டு யாழ் பல்கலைக்கழக பேரவையானது, எதிர்வரும் ஐப்பசி மாதம் 06ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தங்களுக்கு கௌரவ முதுகலைமாணிப் பட்டத்தினை வழங்குவதெனத் தீர்மானித்துள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

மேற்படி பட்டமளிப்பு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இங்ஙனம்

24/8/2001

துணைவேந்தர்

Vice Chancellor
University of Jaffna
JAFFNA, SRI LANKA

**மல்லிகை** **Mallikai**

*Dominic Jeeva*

201-1/1, Sri Kathiresan Street, Colombo-13
234-B, KKS Road, Jaffna.
T.P:- 320721

DATE 17-09-2001.

கௌரவ முதுகலைமாணிப் பட்டம்

மாண்புமிகு துணைவேந்தர்
யாழ் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்.

தங்களது 27-08-2001 கடிதம் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

நான் கலை இலக்கியத் துறைக்கு ஆற்றி வரும் பணிக்காக என்னைக் கௌரவிக்கும் பொருட்டுத் தாங்கள் எனக்கு வழங்கவுள்ள கௌரவ முதுகலை மாணிப் பட்டம் கல்வித் தகைமை சார்பானதாக இருக்கிறது. இது எனக்கும் பலருக்கும் வியப்பை அளித்துள்ளது. பல வினாக்களையும் எழுப்புகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உருவாக எழுந்த இயக்கத்தில் என்னைப் போன்ற படைப்பாளிகளின் பங்களிப்பும் இருந்ததென்பது வரலாறு.

இந்த நிலைமைகளோடு தாங்கள் தரவுள்ள விருதினைப் பெற்றுக் கொள்ள இயலாத சூழ்நிலையில் உள்ளேன் என்பதைத் தங்களுக்கு அறியத் தருகிறேன். எவ்வாறாயினும் தங்களது அபிமானத்திற்கும் நல்லெண்ணத்திற்கும் எனது அன்பும் நன்றியும் உரியன.

வணக்கம்,
அன்புள்ள

Dominic Jeeva
201-1/1, Sri Kathiresan Street,
Colombo-13, Sri Lanka.

**Mallikai Pandhal**

# கௌரவப் பட்டம் வேண்டாம் என்கிறார் ஜீவா

மல்லிகை சஞ்சிகையின் ஆசிரியரும், இலங்கை வாழ் தமிழர்களால் மட்டுமின்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்களால் நன்கறியப் பட்டவருமான மல்லிகை ஜீவா என அழைக்கப்படும் டொமினிக் ஜீவா, யாழ். பல்கலைக் கழகத்தினால் தனக்கு அளிக்கப் பட்ட M.Lit என்ற கௌரவ முதுகலை மாணிப் பட்டத்தை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தான் ஏன் அவ்வாறான பட்டத்தை ஏற்க மறுப்புத் தெரிவிக்க நேரிட்டது என்பதை விளக்கி அவர் யாழ். பல்கலைக் கழக துணை வேந்தருக்குக் கடிதம் அனுப்பி இருக்கிறார். அக் கடிதம் இங்கே பிரசுரிக்கப் படுகிறது.

ஒரு மனிதர் எவ்வளவு நல்லவரும், சேவை மனப்பான்மை கொண்டவருமாக இருந்தாலும் - பார்வைகள் வித்தியாசப் படுவது இயல்பு. ஒரு மனிதன் என்ற வகையில் ஜீவாவுக்குப் பலவீனங்கள் இருக்கலாம். விமர்சனத்துக்குரிய கருத்துக்களைக் கொண்டவராக இருக்கலாம். ஆனால் முழுநேரப் பணியாக அவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு, குறிப்பிட்டுச் சொல்வதானால் யாழ்ப்பாண மக்களின் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு அவர் ஆற்றியிருக்கும் சேவை குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல, மறக்கப்படக் கூடிய ஒன்றுமல்ல.

யாழ் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டுமா? அல்லது திருமலையில் அமைய வேண்டுமா? என்ற அரசியல் ரீதியான சர்ச்சை எழுந்த போது, அப்பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில்தான் அமைய வேண்டும் என்பதில் மிக உறுதியக இருந்து, ஒரு ஆதரவாளர் வட்டத்தையும் அமைத்துப் போராடியவர் தான் டொமினிக் ஜீவா. இப்படிப்பட்டவருக்கு யாழ். பல்கலைக் கழகம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது என்பதையும் - பெறும் முதுகலைமாணி கௌரவம் அதற்கு ஈடானது அல்ல என்பதையும் - அக்காலகட்ட நடப்புகளை நன்கறிந்தவர்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர்.

இங்கே ஜீவாவின் கடிதத்தைப் பிரசுரிக்கிறோம். வாசகர்கள் இது பற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு துணைவேந்தர்,
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

தங்களது 27-08-2001 கடிதம் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

நான் கலை இலக்கியத் துறைக்கு ஆற்றிவரும் பணிக்காக என்னைக் கௌரவிக்கும் பொருட்டுத் தாங்கள் எனக்கு வழங்கவுள்ள கௌரவ முதுகலை மாணிப் பட்டம் கல்வித் தகைமை சார்பானதாக இருக்கிறது. இது எனக்கும் பலருக்கும் வியப்பை அளித்துள்ளது. பல வினாக்களையும் எழுப்புகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உருவாக எழுந்த இயக்கத்தில் என்னைப் போன்ற படைப்பாளிகளின் பங்களிப்பும் இருந்ததென்பது வரலாறு.

இந்த நினைவுகளோடு தாங்கள் தரவுள்ள விருதினைப் பெற்றுக் கொள்ள இயலாத சூழ் நிலையில் உள்ளேன் என்பதைத் தங்களுக்கு அறியத் தருகிறேன். எவ்வாறாயினும் தங்களது அபிமானத்திற்கும், நல்லெண்ணத்திற்கும் எனது அன்பும் நன்றியும் உரியன.

*அன்புள்ள*
*டொமினிக் ஜீவா*
*-தினகரன்*
*30-09-2001*

# ஜீவா ஏன் அகௌரவத்துக்கு உள்ளானார்?

யாழ்ப்பாணப் பலைகலைக் கழகம் எந்த முகாந்திரமும் இன்றி டொமினிக் ஜீவாவுக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கி உள்ளதாக அறிவித்தது. உலகில் எந்தப் பல்கலைக் கழகமுமே செய்யாத 'அருஞ்சாதனை'யை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் சாதித்ததை விநோதமாகப் பார்த்தனர் எல்லோரும்.முதுகலைமாணிப் பட்டம் கல்வித்தகைமை சார் பட்டம். இதற்கும் ஜீவாவுக்கும் என்ன தொடர்பு? ஒருவேளை எழுத்தாளர் ஜீவா யாருக்கும் தெரியாமலே இளங்கலைமாணிப் பட்டம் (B. A) பெற்று, பின்னர் முதுகலை மாணிப் பட்டம் (M. A.) பெறப் போகிறாரோ எனவும் சிலர் பேசினர்.

ஆனால் பிறகுதான் விஷயம் தெரியவந்தது. ஜீவாவின் இலக்கியப் பங்களிப்பைக் கருத்திற் கொண்டு, ஒரு எழுத்தாளனாய், பத்திரிகையாளனாய், பதிப்பாளனாய் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றும் ஜீவாவை கௌரவிக்க வேண்டும் என்று தீவெங்கும் எழுந்த வேண்டுதல்களை நிர்ப்பந்தமாக நினைத்து யாழ் பல்கலைக் கழக மூதவை டொமினிக் ஜீவாவுக்கு இந்த முதுகலை மாணிப் பட்டத்தை ''மனமுவந்து'' வழங்குகிறது என்று அறிய நேர்ந்தது.

வழமையாக இத்தகைய சாதனையாளர்களுக்கு ''இலக்கிய கலாநிதி'' (D. LiT) பட்டம் வழங்கப்படுவதே முறையாகும். இப்படித்தான் பல்கலைக் கழகங்கள் வழங்கி வருகின்றன.

கல்வித்தகைமை சார் பட்டமான முதுகலைமாணிப் பட்டம் (M. A.) பெற்ற பிறகு ஒருவர், வழி நடத்தும் பேராசிரியர் ஒருவரின் உதவியோடு கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை மேற் கொண்டு எழுதும் ஆய்வுக் கட்டுரை ஏற்றுக் கொள்ளப்பட்டதின் பிறகு அவருக்கு கலாநிதிப் பட்டம் (P. H. D) வழங்கப்படும், அப்படியானால் இந்த விதி முறையை மீறி எதற்காகக் கலாநிதிப் பட்டத்திற்கு கீழ்ப்பட்ட முதுகலைமாணிப் பட்டம் ஒரு படைப்பாளியான டொமினிக் ஜீவாவுக்கு வழங்கப்பட்டு அவருக்கு

அகௌரவம் உண்டாக்கப் பட்டிருக்கிறது? இந்த அகௌரவத்தினால் மனம் வருந்திய ஜீவா எனக்கு இந்தப் பட்டமே, வேண்டாமென்று மிகுந்த பண்போடு நிராகரித்திருக்கின்றார். இந்த நிகழ்வு தற்செயலானதா? நிச்சயமாக இல்லை. இந்த நிகழ்விற்கான வேரினைக் கண்டறிய நாங்கள் பல ஆண்டுகாலம் பின்னோக்கிப் போக வேண்டும். அதுவும் ஒரு அடையாளமே.

1960-களில் இலங்கையின் இலக்கிய வளர்ச்சியில் உன்னத தொடக்க காலமாக இருந்தது, மார்க்சிய சிந்தனை படைப்பாளிகளை ஆட்கொண்டது. இந்தத் தளம் சார்ந்த உலகப் படைப்பாளிகளின் நூல்கள் இவர்களின் சிந்தனையையும் எழுத்தையும் மெருகுபடுத்திற்று. அப்போது வாழ்வின் அடி மட்டத்திலிருந்து சாதி ஒடுக்கு முறைகளோடு போராடி எழுத்தையும் ஒரு ஆயுதமாகக் கொண்டு பல படைப்பாளிகள் முன்னணிக்கு வந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் கே. டானியல், டொமினிக் ஜீவா, என். கே. ரகுநாதன், கவிஞர் பசுபதி ஆகியோர், இவர்கள் ஒடுக்கப்பட்ட, அடிமட்ட மனிதரின் வாழ்வை யதார்த்த இலக்கியமாக்கினர். இவர்களின் மொழியிலே எழுதினர்.

மேல்சாதித் திமிர் கொண்டவர்களுக்கு இது 'இழிசனர்' எழுத்தாக்கப்பட்டது. இதைப் பற்றி பகிரங்கமாகப் பேசி, எழுதிச் செயற்பட்டார்கள் இவர்கள். ''நீங்கள் எல்லோரும் எங்களைப் போல எழுதவோ, சமமாக உட்காரவோ தகுதியற்றவர்கள்'' என்பதுவே இச்செயற்பாடுகளின் உள்ளார்ந்த கருத்தாக இருந்தது. ஆனாலும் இயக்கமயப் பட்ட இந்தப் படைப்பாளிகள் இதற்குச் சரியான, நியாயமான பதில் அடி கொடுத்தனர். முற்போக்கு இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட கல்விமான்கள், படைப்பாளிகள் பலரும் இதில் ஒன்றிணைந்தனர். ஆயினும் முற்போக்குப் படைப்பாளிகளான கே. டானியல், டொமினிக் ஜீவா போன்றோர் மேல் மட்ட அறிவாளிகள் கூட்டத்தினரால் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். அவமானப் படுத்தப் பட்டனர். எனினும் பொதுவுடமை இயக்கக் கேடயங்கள் இவர்களுக்குப் பலமும் வலிமையும் சேர்த்தன.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவப் பட முயற்சி எடுத்தவர்கள் பொதுவுடமை இயக்கத்தினர். அப்போது யாழ்ப்பாண மேல் தட்டு அறிவாளிகள் அதை மூர்க்கமாக எதிர்த்து, அது திருகோணமலையில் அமைய வேண்டுமென்று வலியுறுத்தினர். இந்த வேளையில் பொதுவுடமை இயக்கமும் டொமினிக் ஜீவா, கே. டானியல் போன்றவர்களும் உறுதியோடு உழைத்தனர். பேராசிரியர் கைலாசபதி இரவு பகலாக உழைத்து உருவாக்கிய பல்கலைக் கழகம் இது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்து, தமிழகத்திலும் ஜப்பானிலும் நன்கு அறியப் பட்ட கே. டானியலுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவப் பட்டம் வழங்கவேண்டுமென்ற தீர்மானத்தைப் பேராசிரியர்

சிவஞான சுந்தரம் (நந்தி) கொண்டுவந்தபோது, அது நிராகரிக்கப்பட்டது. விஷயம் வெளியே வராமல் மூடி மறைக்கப்பட்டது.

இன்று இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எந்தத் தமிழ்ப் பேராசிரியரையும் விட, ஈழத்தமிழ் வளர்ச்சிக்கு கே. டானியலும், டொமினிக் ஜீவாவும் செய்த பங்களிப்பு மேலானது. சிருஷ்டித் துறைப் பங்களிப்போடு பல புதிய எழுத்தாளர்கள் உருவாகவும் இவர்கள் காரணமாகியுள்ளனர். இதை விட, 'மல்லிகை'யில் எழுதிய அச்சுக்கட்டுரை நறுக்குகளையும், தொகுப்பு நூல்களையும் தமது பதவி உயர்வு நேர்காணல்களுக்குக் கொண்டு சென்று புள்ளிகள் பெற்ற பல்கலைக் கழக விரிவுரையாளர் பலபேர்.

இப்போது ஜீவாவுக்கு ஏன் இப்படி அகௌரவம் உண்டாக்கப் பட்டுள்ளது என்ற கேள்விக்கு விடை காணலாம். எல்லாத் தகைமைகள் இருந்தும் டொமினிக் ஜீவா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நிராகரிக்கப் பட்டமைக்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கிறது. அது 'இழிசனர்' நம்முடன் சமமாக இருப்பதா என்ற ஆதிக்க குணத்தின் முடிவு.

இலங்கை அரசியல் அமைப்பு, சாதி, மத, இனவேறுபாடு காட்டுவது தண்டனைக்குரிய குற்றம் என்று சொல்கிறது. அப்படியானால் 'இழிசனர்' இலக்கியக்காரர் நம்மோடு சமமாக உட்காரக் கூடாது என்று செயற்படும் பல்கலைக் கழக மூதவை எடுத்த முடிவு எத்தகையது? இதற்கான நடவடிக்கையைப் பல்கலைக் கழக மானியக் குழுவுக்கு படைப்பாளிகள் அறியப்படுத்தி நீதி கேட்கும் முயற்சியை மேற் கொள்வார்களா? மேற்கொள்ள வேண்டும்.

*சஞ்சயன்*

*ஆதவன்*

*07-10-01*

# முதுகலைமாணிப் பட்டம் சம்பந்தமாக எனது கருத்து

சமீபத்தில் எனக்கேற்பட்டுள்ள அநுபவம் விசித்திரமானது. இதன் மூலம் பலரது கவனம் என்மீது திருப்பப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனது இலக்கிய - தமிழ்ச் சேவைகளைப் பாராட்டி எனக்குக் கௌரவ முதுகலை மாணிப் பட்டம் தர முயன்று, அதற்கான அறிவித்தல் கடிதத்தையும் எனக்கு அனுப்பி வைத்திருந்தது.

இதைப் பற்றி நான் ஆழமாக யோசித்துப் பார்த்தேன். என் அறிவுக்கெட்டிய வரைக்கும் எம். ஏ. பட்டம் என்பது ஒரு கல்வி சார் பட்டம் என்பதே எனது கருத்தாகும். இதை நான் மனப்பூர்வமாக நம்பிய காரணத்தால் இந்தப் பட்ட விருதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது என மாண்புமிகு யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் அவர்களுக்கு வெகு கண்ணியத்துடனும், அடக்கத்துடனும் தெரிவித்து விட்டேன்.

தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பட்டமளிப்பு நிகழ்ச்சிகளில் கூட, எம். ஏ. பட்டம் கௌரவப் பட்டமாகக் கொடுக்கப்பட்டதில்லை என்ற உணர்வும், எதார்த்த நிலையும் எனது இந்த நிராகரிப்புக்குப் பின்புலமாக அமைந்துள்ளதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

அது தவிர, பல்வேறு கட்டங்களில் மல்லிகை ஆசிரியத் தலையங்களில் கூட, கௌரவ கலாநிதிப் பட்டங்களைத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வழங்கிக் கௌரவிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

எந்தக் கட்டத்திலுமே இப்படியான பட்டம் எனக்கு வழங்கப்பட வேண்டும் என யாசித்தவனல்ல, நான். மக்கள் ஏற்கனவே மனமுவந்தளித்த 'மல்லிகை ஜீவா' எனற பென்னாம் பெரிய விருதே எனக்குப் போதும் என்ற மன நிறைவுடன் வாழ்ந்து வந்தேன், நான்.

கடந்த காலங்களில் பண்டிதமணி அவர்களுக்கும் பேராசிரியர் வானமாமலை அவர்களுக்கும் யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டமளித்து அவர்கள் மூலம் கலை இலக்கியத் துறையைக் கனம் பண்ணிக் கௌரவித்ததைப் பாராட்டியிருக்கிறேன். எழுத்தில் எழுதிப் பதிய வைத்துள்ளேன். தமிழக இலக்கிய மேடைகளில் கூட, இந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி மன நிறைவு பெற்று மகிழ்ந்திருக்கிறேன்.

நாடு தழுவிய எனது இலக்கியப் பார்வை அது. கலை இலக்கியம் பற்றிய எனது நோக்கமது.

எந்தக் கட்டத்திலுமே பிரதேச உணர்வுடனோ குறுகிய பார்வையுடனோ இந்தப் பட்டமளிப்புச் சம்பவத்தை நான் நோக்கியதே கிடையாது.

எனது மொழி, எனது மக்கள், உலகம் பூராவாகக் கொண்டாடப் படவேண்டும், மதிப்புடன் கௌரவிக்கப்பட வேண்டும் என்பதே எனது தலையாய நோக்கமாக இதுவரை திகழ்ந்து வந்துள்ளது.

நான் இந்தப் பட்ட விருதை நிராகரித்தது எனக்காகவல்ல. எந்த விதமான வெளி ஆளுமைகளும் என்னை, எனது தனித்துவப் போக்கிலிருந்து தடம் புரள வைத்து விடக் கூடாது என வெகு ஜாக்கிரதையாகவே நான் இதுவரை நடந்து வந்துள்ளேன். சுருக்கமாகச் சொன்னால் நான் நானாக இருக்கவே விரும்பி உழைத்து வருபவன் நான்.

என்னைப் போன்று இலக்கியத் துறைகளில் அர்ப்பண உணர்வுடன் உழைத்து வரும் சக நண்பர்களுக்கு அவர்கள் வாழும் காலத்திலேயே அவர்களுக்குரிய தகுந்த கௌரவம் கிடைக்க வேண்டும். இது அவர்களுக்கு மாத்திரமல்ல, நான் உளமார நேசிக்கும், நமது மண்ணைப் பிரதிபலிக்கும் எமது சர்வ சொத்தான பல்கலைக் கழகத்திற்கும் பெருமை சேர்ப்பதொன்றாகும் என நெஞ்சார நம்புபவன், நான்.

நான் படைப்பாளி - தமிழ் ஊழியன் - என்கின்ற முறையில் கௌரவிக்கப் பட்டிருந்தால் - இந்த மண்ணில் மாத்திரமல்ல, தஞ்சை, மதுரை காமராஜர், பாண்டிச்சேரி, சென்னைப் பல்கலைக் கழக அறிவுத் துறையினரே ஆச்சரிய அதிர்ச்சியடைந்திருப்பார்கள். அங்கும் இதன் எதிரொலி கேட்டிருக்கும்.

'ஒரு அடி நிலைச் சமூகத்திலிருந்து முகிழ்ந்து எழும்பி, நிமிர்ந்து நிற்கும் ஒரு பாமரப் படைப்பாளியை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் கொடுத்துக் கௌரவித்துள்ளது. என, அவர்கள் மனமுவந்து பாராட்டுத் தெரிவித்திருப்பார்கள். - இது சர்வ நிச்சயம்!

ஏனெனில் தமிழகப் பல்கலைக் கழக அறிவு ஜீவிகள் மட்டத்தில் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருக்கு அடுத்தாக, இந்த மல்லிகை ஜீவாவைத் தான் அனேகர் அறிந்து வைத்துள்ளனர். அவர்கள்

இருவரும் விமரிசகர்கள் தான். ஆனால், நானோ படைப்பாளி. 36-ஆண்டு காலமாக சிற்றிலக்கிய ஏடொன்றைத் தொடர்ந்து நடத்தி வருபவன்.

இந்த முதுகலை மாணிப் பட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் இதுவரை காலமும் நான் எழுத்தில் எழுதிவந்த கௌரவ கலாநிதிப் பட்டமளிக்கும் கோரிக்கையை நானே எனக்கான வசதி கருதி நிராகரித்தவன் என்ற நியாயமான குற்றச் சாட்டுக்கு இலக்காகி விடுவேன்.

அத்துடன் நான் இந்த முதுகலை மாணிப் பட்டத்தை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், தொடர்ந்தும் இதே பட்டம் தகுதி வாய்ந்த எல்லாப் படைப்பாளிகளுக்குமே தரப்பட்டு அதுவே ஒரு மரபாகப் பேணப்பட்டு வரும்.

இதற்கு முன்னுதாரணமாகத் திகழ நான் அறவே விரும்பவில்லை. என்னைத் தொடர்ந்து இது தொடரக் கூடாது என மனதார நான் விரும்பிய காரணத்தால் தான் இந்த எம். ஏ. விருதை நான் ஏற்றுக் கொள்ள மறுத்தேன். நிராகரித்தேன்.

இந்தச் செய்கை மூலம் இந்த இக்கட்டிலிருந்து என்னை நானே விடுவித்துக் கொண்டேன். என்னைப் பொறுத்தவரை யாழ் பல்கலைக் கழகத்தை மிகப் பெரிய கல்விக் கலைக் கோட்டமாகவே கருதி வருகிறேன். ஒரு வெள்ளைத் தாளில் ‘யாழ் பல்கலைக் கழகம் உங்களது தமிழ்ச் சேவையின் அர்ப்பண உணர்வை மதித்துக் கௌரவிக்கின்றது!’ என ஒரு நாலு வரி எழுதி உபவேந்தர் கையெழுத்திட்டுத் தந்திருந்தாலே போதும். அதை எனது பிற்காலச் சந்ததிக்கு ஒரு ஆவணமாக விட்டுச் சென்றிருப்பேன். பிற்சந்ததி அதைப் போற்றிப் பாதுகாக்கும். ஏனெனில் காலாதி காலமாக மனித உரிமைகள் மாத்திரமல்ல, அடிப்படைக் கல்வி வசதிகளே திட்டமிட்டு மறுக்கப்பட்டு வந்த ‘பஞ்சமர்’ குலப் பரம்பரையில் வந்துதித்தவன் நான் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

எனவே தகுந்த தகைமை அடிப்படையில் எனக்கு இந்தக் கௌரவ விருது வழங்கப்படாத போது, அதை நான் மிகவும் மன நெகிழ்ச்சியுடன் தான் நிராகரிக்க முன்வந்தேன்.

இன்றும் கூடப் பல பாராட்டுக் கடிதங்கள் என் வசமுண்டு. இடையிடையே அவைகளை படித்துப் பார்ப்பது வழக்கம்.

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் அழகு சுப்பிரமணியம், வித்தி, இளங்கீரன், கார்த்திகேசன், பொன். கந்தையா தமிழக மக்கள் தலைவர் ஜீவானந்தம், கைலாசபதி, சில்லையூர், டானியல், ரஸிகமணி, தளையசிங்கம், முருகையன், நீலாவணன், இராசரத்தினம், தெளிவத்தை, சிவநாயகம், சி. வி. வேலுப்பிள்ளை, முருகபூபதி, தமிழகத்து க. நா. சு., லா. ச. ரா., எம். வி. வெங்கட்ராம், செல்லப்பா, தி. க. சி., வல்லிக்கண்ணன், பார்த்தசாரதி, மணியன், ஜெயகாந்தன், கலைமகள் ஜெகநாதன், ரகுநாதன்,

தி. ஜானகிராமன், ஓட்டப்பிடாரம் குருசுவாமி, வானமாமலை போன்றோர்களுடைய வாழ்த்துக் கடிதங்களையும் கையெழுத்துக்களையும் பேணிப் பாதுகாத்து வருகின்றேன்.

எனகுத் தெரியும் அந்தக் கையெழுத்துக்களின் மகிமை மிக்க பெறுமதி. அந்த வாழ்த்து வசனங்களின் மகத்துவம். சமீபத்தில் கூட, என்னையும், என்னால் உருவாக்கப் பட்டு வளர்த்து வரும் மல்லிகை சஞ்சிகை பற்றியும் எனது மதிப்புக்குரிய கௌரவ அஸ்வர் ஹாஜியார் அவர்கள் பாராளுமன்றத்தில் பாராட்டி உரை நிகழ்த்தி மகிழ்ந்தார். நானல்ல, எனது உழைப்பு, இன்று நாட்டின் உயர் மன்றங்களில் கூட, பேசப்படுகின்றது. விதந்து பாராட்டப் படுகின்றது.

இதில் அதிசயமென்னவென்றால் நான் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே வாழ்த்தப் படுகிறேன்.

இவைகள் அத்தனையுமே ஆவணப் பதிவுகளாகும். என்னை உயர் நிலையில் கௌரவிக்க வேண்டும் என நினைத்து அதற்கான முன் முயற்சி எடுத்தவர்கள் பேராசிரியர் சந்திரசேகரம், பேராசிரியர் சிற்றம்பலம். யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் ஆரம்பகாலம் தொட்டே என் மீதும், மல்லிகை மேலும் தனியான ஆர்வம் காட்டி வந்தவர். என்னை மதித்துப் பாராட்டியவர். மல்லிகையைப் பசளையிட்டு வளர்த்தவர்களில் யாழ். பல்கலைக் கழகத்தினர் குறிப்பிடத்தக்கவர்கள். பலர் மல்லிகையில் எழுதி உரமூட்டினார்கள்.

இவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

எனது விருது மறுப்புச் சம்பந்தமாக ஊடகங்கள், குறிப்பாகப் பத்திரிகைகள் - மக்களது மனக் கருத்தை வெளிக் கொணர ஆவன செய்துள்ளன. விவாதத்தை விரிவுபடுத்தின. மக்களிடமே கொண்டு சென்றன. அவைகளுக்கும் என் நன்றிகள்.

ஒரு விழிப்பான, ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு இத்தகைய செய்திப் பரிவர்த்தனைகள் மிக மிகத் தேவை என்பதைப் பொது மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தப் பரபரப்பான செய்திப் பரம்பல் காரணமாக எனக்குத் திடீர்ப் பிரபலம் ஏற்பட்டு விட்டது. பலர் தெருவோரங்களில் இடையிடையே மறித்து நிறுத்தி, இதைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டனர். இவைகளில் முன் பின் தெரியாதவர்கள் அநேகர்.

இதனால் நானொரு பிரபலம் வாய்ந்தவனாகக் கணிக்கப் பட்டேன். பார்க்கப் பட்டேன்.

உலகத்தின் நாலா திசைகளிலிருந்தெல்லாம் தொலை பேசி, ஈ-மெயில், கடிதங்கள் மூலம் தகவல்களைக் கேட்டறிந்தனர், பலர்.

ஒரு தமிழ் எழுத்தாளனைப் பற்றி - கொழும்பில் எங்கோ ஒரு மூலையில் - மேல் மாடியில் ஒதுங்கியிருந்து கொண்டு மனசுக்குப் பிடித்தமான ஆக்க வேலைகளை வெகு மௌனத்துடன் செய்து கொண்டிருந்த படைப்பாளியைப் பற்றி - உலகப் பூப்பந்தில் வாழும் தமிழர்கள் மத்தியில் இத்தனை ஆர்வமும் கரிசனையும் ஏற்படுத்தப் பட்டது - வரலாற்றில் ஒரு புதுமையாகவே திகழ்ந்தது.

இதை நினைத்துப் பார்க்கும் பொழுது மனசுக்கு நிறைவாக இருக்கின்றது. மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது.

எனக்குத் தெளிவாகவே தெரியும். பட்டங்களால் மாத்திரம் ஒருவனது ஆத்ம அர்ப்பணம் வரலாற்று ஏடுகளில் இடம் பெறப் போவதில்லை!

*மல்லிகை*
*அக்டோபர் – 2001*

# டொமினிக் ஜீவா விடயத்தில் யாழ் பல்கலைக் கழகம் அநீதி இழைத்து விட்டது.

தினகரன் வாரமஞ்சரியில், முதுகலை மாணிப் பட்ட நிராகரிப்புப் பற்றி டொமினிக் ஜீவா வெளியிட்ட அறிக்கை படித்தேன். அது குறித்த எனது கருத்துக்களைக் கீழே தருகிறேன்.

தமது அரிய பணிகளின் மூலம் செல்வாக்கைப் பெறும் பிரமுகர்களுக்குத் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் கௌரவப் பட்டமளிப்பது புதிய தகவலல்ல! வெளிநாடுகளே இந்த வழமையை பின் பற்றி வருகின்றன. சேர், நைட் ஆகிய பட்டங்கள் இத்தகைய தகைமைகளைச் சார்ந்தே வழங்கப்படுகின்றன.

இந்த வகையில் டொன் பிரட்மன், சோபேர்ஸ், ஆர்தர் சி. கிளார்க் ஆகியோர் கௌரவம் பெற்றிருக்கின்றனர்.

தென்னிந்திய தமிழக அரசு கூட இதே தடத்தில் சென்று பேராசிரியர், டாக்டர் ஆகிய பட்டங்களைச் சமூகத்தில் சிறப்புப் பணி செய்தோருக்கு வழங்கி இருக்கின்றது.

கல்கி, கலைஞர் மு. கருணாநிதி, எம். ஜி. ராமச்சந்திரன் ஆகியோர் சங்கைப்படுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் ஏற்கெனவே துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, மில்க்வைற் அதிபர் கனகராசா ஆகியோருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

இந்த வகையில்தான் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா மீதும் யாழ். பல்கலைக் கழகத்தின் கவனம் விழுந்துள்ளது.

ஆனால், ஏதோவொருவகையில் வித்தியாசப் பட்டிருக்கின்றது. எனவே, டொமினிக் ஜீவா அதை ஏற்க மறுத்து நிராகரித்ததற்கு தனது பக்க நியாயங்களை முன் வைக்கலாம்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு முதுகலைமாணிப் பட்டம் கொடுத்திருப்பதாகப் பத்திரிகைகள் தகவல் தந்தன. இப்பட்டியலில் ஒருவருக்குக் 'கௌரவ முதுகலைமாணிப்' பட்டமென்றும் ஜீவாவுக்கு வெறும்

'முதுகலைமாணிப்' பட்டமெனவும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மறுப்புக் கடிதத்தில் டொமினிக் ஜீவா இந்தப் பட்டம் தனக்குப் பொருத்தமற்றதெனவும், இது கல்விசார் பல்கலைக் கழக மாணவருக்கே உரியதெனவும் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த காலப் பட்டமளிப்புகளும் இதை உறுதிப் படுத்துகின்றன. சம்பந்தப்பட்ட பல்கலைக் கழக நிருவாகம் பல்கலைக் கழக மாணவரல்லாதோருக்குக் கடந்த காலத்தில் வழங்கிய பட்டங்களை உசாத்துணையாகக் கொண்டால் இது புலப்படும். கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லையே! எனவே மல்லிகை ஆசிரியர் பழிவாங்கப் பட்டிருப்பதை எந்தவொரு நேர்மை, தன்மானமுள்ள நெஞ்சமும் ஒத்துக் கொள்ளும். உரிய பட்டத்திற்கு ஜீவா ஏன் தகுதியற்றவரானார்?

இன்று - உயிர் தமிழுக்கு - எனக் கோஷிக்கும் தமிழர்கள் மத்தியில், தனது முழு நேரத்தையும் தமிழ் இலக்கியத்திற்கு அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டிருப்பவர் ஜீவா. அவரது மல்லிகை சஞ்சிகை 36-ஆண்டு காலமாக இந்நாட்டின் இலக்கியத்தைத் தனது கையில் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறது. மல்லிகை மூலம் வளர்க்கப்பட்ட இளந்தலை முறைப் படைப்பாளிகள் ஏராளம்.

இன, மத, பேதமற்று, சகல இலக்கியவாதிகளுக்கும் களம் கொடுத்து, தனது சம நீதியை மல்லிகை நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றது. கைலாசபதியிலிருந்து பல்கலைக் கழக மாணவி சிவாணி வரை தமது ஆக்கங்களை மல்லிகையில் வெளியிட்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் உச்சமாக மல்லிகையையும் அதன் ஆசிரியர் ஜீவாவையும் தங்களது பட்டங்களுக்காக ஆய்வு செய்து, கட்டுரைகள் சமர்ப்பித்துப் பல பல்கலைக் கழக மாணவ மாணவிகள் பட்டங்களைப் பெற்றிருக்கின்றன.

சமூகங்கள் சார்ந்த டொமினிக் ஜீவாவின் சேவை நாடறிந்ததே. அவரது எழுத்தில் மக்களின் குரல் கேட்கும். இலங்கை சாகித்திய மண்டலத்தின் சிறு கதைக்கான முதல் பரிசைப் பெற்ற படைப்பாளி.

மூதறிஞர் என்ற பட்டத்தைக் கம்பன் கழகம் சூட்டி இவரைச் சகலருக்கும் பொதுவானவராக்கியுள்ளது.

இவை பல்கலைக் கழகக் கல்வி மான்கள் அறியாதவையல்ல! இருந்தும் சூப்பிய எலும்பை முன்னுக்குக் காத்து நிற்கும் நாய்க்கு எறிவது போல் வீசினால் சுய கௌரவம் காக்கும் ஜீவா ஏற்றுக் கொள்வாரா! இளைய தலைமுறைதான் சகித்துக் கொள்ளுமா? இத் தடம் பிறழ்தலுக்குள் ஜீவா சுருண்டு, முது கலைமாணிப் பட்டத்தை ஏற்றிருந்தால், நிச்சயம், வரப்போகும் சந்ததி திட்டும். இந்த விஷயத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியவரென்ற அவச்சொல் கூறப்படும். எனவே டொமினிக் ஜீவாவின் அபிமானிகள் அவரது தீர்மானத்தைச் சரியென ஏற்கின்றனர். யாழ். பல்கலைக்

கழகத்தை உருவாக்க அரும்பாடு பட்ட ஜீவாவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. பண்பாட்டு நாவலாசியிர் கே. டானியலுக்குக் கௌரவக் கலாநிதிப் பட்டமொன்று வழங்கப்பட வேண்டுமென்று தமிழ் இலக்கிய வட்டாரத்தில் உரத்த கோஷமொன்று எழுந்தது. இதற்கு அனுசரணையாகப் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (எழுத்தாளர் நந்தி) முன்னின்று பாடுபட்டார். டானியல் இறந்த பின்னர் கூட, படித்த மேதைகள் புகழாரம் தொடுத்தனர். தென்னிந்திய எழுத்தாளர் அம்பையும் டானியலோடு ஒரு தேநீர் குடித்துச் சம்பாஷிக்கும் வாய்ப்புத் தனக்குக் கிட்டவில்லையேயென ஆதங்கப்பட்டார். இருந்தும், எல்லாமே - பேச்சோடு வெறும் பேச்சாகிவிட்டது. இன்றுவரை எந்தப் பல்கலைக்கழகமும் கே. டானியலின் இலக்கிய ஆளுமையை மேன்மை செய்து கலாநிதிப் பட்டம் கொடுக்கவில்லை டானியலுக்கு! இந்த நியாயங்களெல்லாம் யாழ். பல்கலைக் கழகத்தால் உரிய முறையில் கணிக்கப்படாததை நோக்கும் பொழுது குறிப்பிட்ட சில சமூகங்கள் - மேல் தட்டிற்கு மிதந்து மேன்மைப் படுவதை இந்தப் பல்கலைக் கழகமும் அங்கீகரிக்க வில்லையென்றே எண்ணத் தோன்றுகிறது.

எனவே, டொமினிக் ஜீவாவிற்குக் கொடுத்த முதுகலைமாணிப் பட்டம் அவரைப் பாராட்டவல்ல. பரிசு கெடுக்கவே கொடுக்கப்பட்டதென ஊகிக்க முடிகிறது.

இதன் மூலம் யாழ். பல்கலைக்கழகம் இந்த 21-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு கறை படிந்த அத்தியாயத்தை தனக்குத்தானே ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஓரவஞ்சகத்திலிருந்து விலகிப் பொது நிறுவனமென்ற சிந்தையோடு சகல சமூகங்களையும் அரவணைப்பதன் மூலம் யாழ் பல்கலைக்கழகத்தினால் - சமூக வரலாற்றை செழுமைப்படுத்த முடியும்.

*க. அருள்நேசன்*
*வத்தளை*
*தினகரன்*
*07-10-01*

# யாழ் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு இலக்கிய கர்த்தாக்களை இப்படி அவமதிப்பதா?

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் நீண்டகால இலக்கியப் பணிக்காக அவருக்கு முதுகலை மாணிப் பட்டம் அளித்து அவரைக் கௌரவிக்க யாழ் பல்கலைக் கழகம் முன் வந்தது.

· முதுகலை மாணிப்பட்டம் கல்விசார் பட்டம். இலக்கியப் பணியாளர்களுக்கு உரியதல்ல, அந்தப் பட்டம். அவர்களுக்கு முதுகலைமாணிப் பட்டத்தை விட உயர்ந்ததான இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்படுவதுதான் வழக்கம்.

வழக்கத்துக்கு மாறாக வழங்க முன்வந்த முதுகலைமாணிப்பட்டத்தைத் தம்மால் ஏற்க முடியாது என்று டொமினிக் ஜீவா பல்கலைக் கழகத்துக்கு அறிவித்து விட்டார்.

இது பற்றி டொமினிக் ஜீவாவிடம் சுடர் ஒளி கேட்டபோது ஜீவா 'பொருத்தமில்லாத கௌரவப் பட்டத்தை எப்படி ஏற்பது? அது அகௌரவம்' என்றார்.

''நல்ல எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் இலக்கியப் பணியாளர்கள் ஆகியோரைப் பல்கலைக் கழகங்கள் பட்டமளித்துக் கௌரவிக்காமல் இருப்பது வேறு விஷயம். அவர்களை ஒருக்காலும் அவமதிக்கக் கூடாது. தமிழையும் தமிழ்ப் பணி செய்பவர்களையும் நெஞ்சார நேசிப்பவன் நான். அவர்கள் அவமதிக்கப் படுவதை என்னால் பொறுக்க முடியாது'' என்று ஆவேசமாகக் கூறினார்.

''தயவு செய்து எவரேனும் இனிமேல் அந்தக் கைங்கரியத்தில் இறங்கக் கூடாது'' என்று டொமினிக் ஜீவா வேண்டுகோளும் விடுத்தார்.

தமிழ்ச் சமூகத்தின் அடக்கி ஒடுக்கப் பட்ட அடி மட்டத்திலிருந்து வந்தவர் டொமினிக் ஜீவா.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னரே சமூக நீதிக்காகப் போராடப் பேனாவை ஆயுதமாகக் கொண்டு எழுத்துத் துறையில் புகுந்தவர்.

இலட்சிய வெறியோடு கம்யூனிஸ சிந்தனைகளுடன் எழுதித் தம்மைச் சிறந்த எழுத்தாளனாகவும். படைப்பாளியாகவும் ஆக்கிக் கொண்டவர்.

தணியாத இலக்கியத் தாகத்தால் மல்லிகை சஞ்சிகையை ஆரம்பித்து 36-வருடங்களாக நடத்தி வருபவர்.

எழுத்தார்வம் உள்ளவர்களுக்கு மல்லிகையில் களம் அமைத்துக் கொடுத்து, அதன் மூலம் நல்ல தமிழ் எழுத்தாளர்கள், படைப்பாளிகள், இலக்கியக் கர்த்தாக்கள் ஆகியோரைப் பெரும் எண்ணிக்கையில் நாட்டுக்குத் தந்து கொண்டிருப்பவர்.

மல்லிகைப் பந்தல் பதிப்பகம் வைத்துத் தம்முடைய ஆக்கங்களையும் மற்ற எழுத்தாளர்களின் படைப்பகளையும் நூலுருவில் கொண்டு வருபவர்.

இலக்கியப் பணிக்காகவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்து அயராது இலக்கியத் தொண்டு ஆற்றி வருபவர். அதனால் இலங்கையில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் தமிழ் பேசும் மக்கள் வாழும் எல்லா நாடுகளிலும் உலகம் முழுவதிலும் அறிமுகமாகி இருப்பவர்.

சாகித்திய மண்டலத்தில் சிறுகதைக்கான முதல் பரிசைப் பெற்றவர்.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தால் மூதறிஞர் என்று பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

தமிழ், அதனை நம்பியவர்களையும் நேசிப்பவர்களையும் வாழவைக்கும். நாம் தமிழைச் செழுமைப் படுத்த வேண்டும் என்ற வைராக்கியத்துடன் இறுதி மூச்சுவரை தமிழ் இலக்கியத் தொண்டாற்ற உறுதி பூண்டுள்ள உணர்ச்சிப் பேர்வழி தான் டொமினிக் ஜீவா.

சிறந்த தமிழ்ப் பேச்சாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், பதிப்பாளர், இலக்கியகர்த்தா என்று பல்வேறு படித்துறைகளிலும் டொமினிக் ஜீவா இன்று பரிமளித்தாலும் அது பற்றி மகிழ்ச்சியும் பெருமையும் அடையும் மனப்பக்குவம் நம்மவரில் ஒரு சாராரிடம் இல்லை.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் அறிவு ஜீவிகளாகவும் உயர் மட்டக்காரர்களாகவும் தம்மைக் காட்டிக் கொண்டு இருப்பவர்கள்.

கே. டானியல், டொமினிக் ஜீவா, என். கே. ரகுநாதன், கவிஞர் பசுபதி போன்றோரின் ஆக்கங்களை ஆரம்ப காலங்களிலே ‘‘இழிசனர்” இலக்கியம் என்று அருவருப்போடு பார்த்தவர்கள் இன்றும் அந்தக் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

இவர்களின் எழுத்துகளிலேயே ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உரிமைக் குரல் பலமாக ஒலிப்பதைக் கேட்டு இவர்களால் சகிக்க முடிவதில்லை.

சாதிப் பாகுபாடு, ஒடுக்குமுறைத் திரைகள் இவர்களின் கண்களை மறைக்கின்றன.

''இழிசனர்'' என்று இழிவாகக் கருதி ஒதுக்கப்பட்டவர்கள் கால மாற்றத்தில் இன்று ''எழில் சனர்'' ஆக மாறிவிட்டனர்.

தாம் உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொண்டிருந்த ''உயர்சனர்'' இன்று ''விசர்சனர்'' ஆகிவிட்டனர்.

அப்படியில்லாவிட்டால்இலக்கிய கர்த்தாவான டொமினிக் ஜீவாவுக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை வழங்குவதற்குப் பதிலாக முதுகலை மாணிப் பட்டத்தை வழங்கி அவரை அவமதிக்கத் துணிவார்களா?

முன்னர் கே. டானியலுக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. பல்கலைக் கழக வித்தர்கள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கே. டானியல் மறைந்து விட்டார். பட்டமளித்து அவரைக் கௌரவிப்பதும் முடிந்த கதையாகி விட்டது.

ஆனால் டொமினிக் ஜீவாவுக்குப் பட்டமளித்து அவரைக் கௌரவிக்க வேண்டும் என்ற கோரிக்கை மிகப் பலமாக எழுந்தது. அதைத் தட்டிக் கழிக்க முடியவில்லை.

1960-களில் யாழ் பல்கலைக் கழகம் திருகோணமலையில் அமைய வேண்டும் என்று ''உயர்சனர்கள்'' ஒற்றைக் காலில் நின்ற போது குழு ஒன்றை அமைத்து யாழ் பல்கலைக் கழகம் யாழ்ப்பாண மண்ணில் தான் அமைய வேண்டும் என்று போராட்டம் நடத்தியவர்களில் டொமினிக் ஜீவா குறிப்பிடத்தக்கவர்.

அதனால் அவருடைய இலக்கியப் பணி எப்படி இருந்தாலும் அதை முன்னிறுத்தி நன்றிக் கடனாகவேனும் யாழ் பல்கலைக் கழகம் அவருக்குப் பட்டமளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

ஜீவா எமக்குச் சமதையாக வருவதா? அவருக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்குவதா என்று பொறுப்பானவர்களுக்குத் தயக்கம்.

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, மில்க்வைற் கனகராசா ஆகியோருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியவர்களுக்கு அந்தப் பட்டத்தை ஜீவாவுக்கு வழங்க மனம் இசையவில்லை.

விரும்பாமல் செய்த காரியம் அதனால் பொருந்தாத முதுகலைமாணிப் பட்டத்தை அவருக்கு விட்டெறிந்து இருக்கிறார்கள்.

அதை ஏற்றுக் கொள்வதற்கு டொமினிக் ஜீவா என்ன விஷயம்

அறியாதவரா? சுயமரியாதை அற்றவரா? பட்டம் எதுவாக இருந்தாலும் அதற்காகக் கையேந்தும் அற்பனா அவர்,

"எனக்கு ஒவ்வாத பட்டம் வேண்டாம்" என்று ஏற்க மறுத்து விட்டார்.

முதுகலைமாணிப் பட்டம் தம்மைக் கௌரவிப்பதற்கான பட்டம் அல்ல. அது தம்மை அவமதிக்கும் பட்டம் என்பது ஜீவாவின் கருத்து.

"என்னுடைய விஷயம் என்னோடு போகட்டும். எழுத்தாளர்களைப் பத்திரிகையாளர்களைக் கௌரவிக்க விரும்பா விட்டால் விட்டு விடுங்கள், பரவாயில்லை. தயவுசெய்து அவர்களை அவமதிக்காதீர்கள். இதுவே அனைவருக்கும் எனது வேண்டுகோள்" என்றார் டொமினிக் ஜீவா.

யாழ் பல்கலைக் கழகத்தில் கௌரவப் பட்டத்துக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்படுவதில் பல தில்லுமுல்லுகள் நடை பெறுகின்றன என்று புகார் கூறப்படுகிறது.

கௌரவப் பட்டத்துக்கு உரியவர்களைச் சிபார்சு செய்யுமாறு பீடாதிபதிகளை (Deans) துணை வேந்தர் கேட்டுக் கொள்கிறார்.

பேராசிரியர்களையும் அழைத்து துறைசார் கூட்டத்தை (Faculty Meeting) பீடாதிபதிகள் நடத்துகிறார்கள்.

துறைசார் கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் பெயர்கள் செனட் முன் வைக்கப் படுகின்றன.

செனட்டின் துணைவேந்தர், பீடாதிபதிகள், சிரேஷ்ட பேராசிரியர்கள், கணக்காளர்கள் எனக் கல்விசார் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். கௌரவப் பட்டங்களுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க செனட் ஒரு குழுவை நியமிக்கிறது.

இந்தக் குழு கௌரவப் பட்டங்களுக்கு உரியவர்களின் பெயர்களைக் கவுன்சிலுக்குச் சமர்ப்பிக்கிறது.

கவுன்சிலில் துணைவேந்தர், பீடாதிபதிகள் 6-பேர், வவுனியா வளாகப் பிரதிநிதிகள் 2-பேர், சிரேஷ்ட பேராசிரியர்களின் பிரதிநிதிகள் 2-பேர் மற்றும் கணக்காளர் ஆக மொத்தம் 12 உள் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆக கவுன்சில் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 25 ஆகும்.

வெளி உறுப்பினர்கள் 13 பேர் என்ற வகையில் உள் உறுப்பினர்களை விட அவர்கள் பெரும்பான்மையினர். அதனால் அவர்களின் குரலே ஒலிக்கும், அவர்கள் விருப்பப்படியே காரியங்கள் நடக்கும். கௌரவப் பட்டம் பெறுவோர் அவர்களால் தீர்மானிக்கப் பட்டு விடுவர் என்று உள் உறுப்பினர்களுக்கு ஒரே புழுக்கும்.

இம்முறை நடைபெற்ற கவுன்சில் கூட்டத்துக்கு வெளி உறுப்பினர்கள்

மூவர் சமூகமளிக்கவில்லை. அதனால் உள் உறுப்பினர்களின் விருப்பப்படியே கௌரவப் பட்டங்களுக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

யாழ் பல்கலைக் கழகக் கவுன்சில் கூட்டத்துக்கு வெளி உறுப்பினர்கள் மூவர் சமூகமளிக்கவில்லை. அதனால் உள் உறுப்பினர்களின் விருப்பப்படியே கௌரவப் பட்டங்களுக்கு உரியவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

யாழ் பல்கலைக் கழகக் கவுன்சில் கூட்டங்களில் இப்படியும் நடந்திருக்கிறது.

ஒரு பீடாதிபதியின் மனைவி வெளிநாடு ஒன்றுக்குச் சென்று அந்த நாட்டு மொழியில் தேர்ச்சி பெற்றுத் திரும்பினார்.

அவருடைய தகுதிக்குப் பொருத்தமான பதவி ஒன்றைப் பல்கலைக் கழகத்தில் உருவாக்க கவுன்சிலின் அனுமதி கோரப்பட்டது.

உடனே வெளி உறுப்பினர் ஒருவர் பீடாதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு, ''என்ன உமது மனைவிக்குப் பதவி தயார்படுத்துகிறீரா?" என்று நேரடியாகவே கேட்டார். அத்துடன் அந்தப் பதவியை உருவாக்கும் கோரிக்கை நிராகரிக்கப் பட்டது.

கவுன்சில், செனட் தொடர்ான இன்னொரு சம்பவமும் பல்கலைக் கழக வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஒரு விரிவுரையாளர் பதவிக்கு வந்த விண்ணப்பங்களில் சில கவுன்சிலிடம் சமர்ப்பிக்கப் பட்டன.

அப்போது ஒரு அதிகாரக் குரல் பின்வருமாறு ஒலித்தது.

புதிதாகப் பட்டம் பெற்ற இளைய தலைமுறை விரிவுரையாளர் தான் வேண்டும்.

புவியியல் துறை மூத்த அறிஞர் ஒருவரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் நிலையில் மேற்படி அதிகாரக் குரல் ஒலித்ததால் அந்த விண்ணப்பத்தை கவுன்சில் நிராகரித்தது. இளைஞர்களின் விண்ணப்பங்களை எடுத்தது.

மீண்டும் அந்தக் குரல்: இங்கேயே பட்டம் பெற்றவரானால் நல்ல ஒத்துழைப்புக் கிடைக்கும்.

உடனே எத்தனையோ இளைஞர்களின் விண்ணப்பங்களைக் கவுன்சில் நிராகரித்தது.

குரல் மூன்றாம் முறையாகவும் ஒலித்தது: குடா நட்டில் கடல் வளம் அதிகம் இருக்கிறது. விண்ணப்பதாரி மீன் வளம் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்திருந்தால் நல்லது.

கவுன்சில் தேடுகிறது. ஆச்சரியம். ஒரேயொரு விண்ணப்பதாரி அந்தத்

தகுதி உடையவராக இருந்தார். அவர் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

இதில் இன்னொரு ஆச்சரியம் என்ன தெரியுமோ? தெரிவு செய்யப்பட்ட விரிவுரையாளர் அடுத்தடுத்து ஒலித்த குரல்களுக்கு உரியவரின் சகலன் முறையானவர்.

யாழ் பல்கலைக் கழகத்தில் எப்படிக் காரியங்கள் நடக்கின்றன என்பதற்கு இவை சில சாம்பிள்கள.

எல்லா வகைகளிலும் தாமே உயர்ந்தவர்கள் என்று கருதும் ஒரு குழுவினர் மேல் இடத்துக்குக் காக்காய் பிடித்த வண்ணம் இருந்து கொண்டு மற்றவர்கள் தம்மை மிஞ்ச விட்டு விடக் கூடாது என்ற உணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர் என்று புகார் கூறப்படுகின்றது.

டொமினிக் ஜீவா விஷயத்தில் நடந்ததும் அதுதான் என்று பல்கலைக் கழக வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இப்படிப்பட்டவர்களிடம் கல்வி கற்கும் மாணவர்களின் கதி என்ன ஆகுமோ என்ற அச்சம் பலரையும் வாட்டுகிறது.

*சுடர் ஒளி*
*ஒக்டோபர் - 14-2001*

# பல்கலை பட்டம் பெறும் தகுதி மல்லிகை ஜீவாவுக்கு உண்டா?

–க. குனா
முறக்கொட்டாஞ்சேனை

*கொள்கை வேறு செய்கை வேறாக இருக்கக் கூடாது. இரண்டும் ஒன்றாகவே இருக்க வேண்டும். அதுதான் உண்மையான எழுத்துக்கும் நேர்மையான எழுத்தாளனுக்கும் அழகு. ஜீவாவுக்குப் பட்டம் வழங்க யாழ் பல்கலைக் கழகம் தீர்மானிப்பதற்கு முன்னர் ஜீவாவின் தகைமைகள் நியாயத் தராசில் போட்டுப் பார்க்கப்பட்டனவா?*

யாழ். பல்கலைக் கழகம் டொமினிக் ஜீவாவக்குப் பட்டமளிப்பது என்று எடுத்த தீர்மானம் சரியானதா? டொமினிக் ஜீவா பட்டத்தை ஏற்க மறுத்தது சரியானதா? இவையல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். இலக்கியத்தின் நியாயத் தராசு கவிழ்ந்து விடாமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் குறிக்கோள். வோறொன்றுமில்லை.

யாழ் பல்கலைக் கழகத்தின் பட்டத்தினை ஏற்க மறுத்து டொமினிக் ஜீவா கூறிய கருத்துக்களிலிருந்தும் இந்த விஷயம் பற்றி பத்திரிகையில் எழுதிய கட்டுரையாளர்களின் கருத்துக்களிலிருந்தும் பெறப்படுபவை இவை:-

- பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு அரும் பாடுபட்டு உழைத்தவர் ஜீவா.
- முதுகலை மாணிப் பட்டம் பொருத்தமற்றது அல்லது குறைவானது, கலாநிதிப் பட்டமே தகுதியானது.
- முதுகலைமாணிப் பட்டம் என்பது கௌரவப் பட்டம் அல்ல, கல்விசார் பட்டமே. தாழ்ந்த சாதிக்காரனுக்கு கலாநிதிப் பட்டம் வழங்குவதற்கு பல்கலைக் கழகம் தயங்குகிறது.

விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மல்லிகையில் எழுதியமையினால் பதவி உயர்வு பெற்றார்கள்.

இப்படித்தான் அந்தக் கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

ஒரு பல்கலைக் கழகத்தினால் அல்லது ஓர் அமைப்பினால் அல்லது ஓர் அமைப்பினால் வழங்கப்படும் கௌரவப் பட்டங்களைத் தீர்மானிப்பதும், யார் பட்டங்களைப் பெறுவதற்குத் தகுதியானவர் என்பதனை முடிவு செய்வதும் பல்கலைக் கழகக் குழுவே ஆகும்.

பட்டத்தினை ஏற்றுக் கொள்ளுவது அல்லது ஏற்றக் கொள்ளாமல் விடுவது பட்டத்தைப் பெறுபவரின் உரிமை ஆகும்.

இதனை விடுத்து இந்தப் பட்டம் தான் வேண்டும் என்று அடம் பிடிப்பது நாகரிகமாகாது. பட்டம், தானே தேடி வரவேண்டுமேயொழிய, பட்டத்தை நாம் தேடிச் செல்லக் கூடாது.

இதனால் தானே என்னவோ முன்னாளில், உயிருடன் இருக்கும் போது இப்படிப் பட்டங்கள் வழங்கப்படுவதில்லை. இது போதாது அது போதாது என்று கூறுவார்கள் என்பதற்காகவோ என்னவோ இறந்த பின்பே கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

ஒரு பட்டத்தினை வழங்கும் பொழுது - அதுவும் பல்கலைக் கழகப் பட்டத்தினை வழங்கும் பொழுது - அந்தப் பட்டத்தினைப் பெறுபவரின் தகைமைகளைப் பணியினால் கிடைத்த நன்மை தீமைகளை - நியாயத் தராசில் போட்டுப் பார்க்க வேண்டியது அவசியம்.

இந்த நியாயத் தராசில் ஜீவாவின் தகைமைகள் போட்டுப் பார்க்கப் பட்டனவா? சிந்திக்க வேண்டி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் யாழ். பல்கலைக் கழகம் அமைக்கப் பட வேண்டும் என்று அரும்பாடு பட்டவர் ஜீவா என்பது உண்மைதான். அந்த உண்மைக்கும் கசப்பான ஒரு வரலாறு உண்டு.

இந்தப் பல்கலைக் கழகத்தைத் திருகோணமலையில் அமைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் பல்கலைக் கழகம் திருகோணமலையில் அமையக் கூடாது யாழ்ப்பாணத்து மண்ணிலே தான் அமைய வேண்டுமென டொமினிக் ஜீவா உட்படப் பல கொம்யூனிஸ்ட்டுகள் அப்பொழுது கூறினார்கள்.

யாழ்ப்பாண மண்மட்டுந்தான் தமிழ்மண், யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுந்தான் கல்வியான்கள் முளைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்தார்கள்.

இந்தப் பல்கலைக் கழகத்தை அறிவுஜீவிகள் திட்டமிட்டபடி

திருகோணமலையில் நிறுவியிருந்தால் திருகோணமலையை அண்டிய பகுதிகளில் அறிவு ஜீவிகளும், தமிழர்களும் கூடுதலாக குடியேறியிருப்பார்கள். இதனால் திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கம் திட்டமிட்டு நடத்திய சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்திருக்க முடியும். திருமலை மண்ணைப் பறி கொடுத்து விட்டு பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலை இன்று ஏற்பட்டிருக்காது.

மொத்தத்தில் பார்க்கும் பொழுது இந்தப் பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவியமை ஏனைய பிரதேச மக்களுக்குச் செய்த 'பச்சைத் துரோகம்' ஆகும்.

அன்று யாழ்ப்பாணச் செம்பாட்டு மண்ணையும் மக்களையும் நேசித்த ஜீவா இன்று அந்த மக்களை மறந்து, அந்த மண்ணிலேயே காலடி வைக்க முடியாமல் கொழும்பில் சீவியம் நடத்துவதும் நியாயந்தானா?

கொள்கை வேறு செய்கை வேறாக இருக்கக் கூடாது. கொள்கையும் செய்கையும் ஒன்றாகவே இருக்க வேண்டும். அதுதான் உண்மையான எழுத்தாளனுக்கு அழகு.

ஜீவா நீண்டகாலம் ''மல்லிகை'' என்ற சஞ்சிகையை நடத்துகிறார் என்பது உண்மைதான். இதனை எவராலும் மறுக்க முடியாது. ஆனால் முதலாளி எதிர்ப்புக் கொள்கை கொண்ட கொம்யூனிஸ்ட்டான ஜீவா முதலாளிகளைத் திட்டித் திட்டி முதலாளிகளைக் கொண்டே பத்திரிகை நடத்தியதே வேடிக்கைதான்! வர்த்தக விளம்பரத்தில் தான் மல்லிகை ஓடியது. அந்த விளம்பரங்களுக்குச் சொந்தக்காரர்கள் யார்? எல்லோரும் முதலாளிகளே!

சிரித்திரன் சஞ்சிகையின் மூலம் அமரர் சி. சிவஞானசுந்தரம் பிரபல எழுத்தாளர்கள் என்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு செங்கை ஆழியான், சுதாரஜ், கனகசுகுமார், இரத்தினவேலோன், அகளங்கன், பொன். பூலோகசிங்கம், சுபாசர்மா, திக்கவயல் தர்மகுலசிங்கம் போன்றோர்களை உருவாக்கினார். ஜீவாவினால் உருவாகிய பிரபல எழுத்தாளர்கள் எத்தனை பேர்? தொழிலாளர்களுக்கான சஞ்சிகை எந்தப் பாமரனைச் சென்றடைந்தது? எத்தனை பாமர எழுத்தாளர்களை உருவாக்கியது? கைலாசபதி, சிவத்தம்பி, மௌனகுரு என்று பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்குக் களமமைத்துக் கொடுத்ததே தவிர, பாமர எழுத்தாளர்களுக்குக் கள்மமைத்துக் கொடுக்கவில்லை என்பது தான் உண்மை. படித்தவர்களால் கூட வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத பேராசிரியர்களின் கட்டுரைகளை பாமர மக்கள் வாசித்து விளங்கியிருப்பார்களா? என்பது கேள்விக்குறியே!

மல்லிகையில் எழுதிய கட்டுரைகளின் நறுக்குகளைக் கொண்டு விரிவுரையாளர்கள் பதவியுயர்வு பெற்றிருக்கலாம். அதில் தப்பு

ஒன்றுமில்லையே. கட்டுரைக்குச் சொந்தக்காரர்கள் அவர்கள்தானே!

மல்லிகையில் எழுதிய கட்டுரைகளை வைத்து பதவியுயர்வு பெற்றிருந்தாலும், நன்றிக் கடனாக ஒரு பட்டத்தை அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

சரி, போனால் போகுது என்று ஒரு முதுமாணிப்பட்டத்தைத் தந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை? முதுமாணிப் பட்டம் கல்விசார் பட்டமா? கல்விசார் பட்டம் என்று யார் சொன்னது? அப்படியென்றால் இந்திய பல்கலைக் கழகம் நடிகர் பாக்கியராஜுக்குக் கௌரவ முதுமாணிப்பட்டம் கொடுத்தது தெரியவில்லைப் போலும்!

இன்று மலையகத்தைப் பற்றி மலையக எழுத்தாளரைப் பற்றி ஓகோ என்று கதைத்திருக்கிறார் ஜீவா.

80-களுக்கு முதல் சிரித்திரனில் 'ஒய்யயப்பன் கங்காணி', 'லயத்தில கேட்டேனுங்க' போன்ற தொடர்கள் வந்தது போல - எத்தனை பிரபல மலையக எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு மல்லிகையில் களமமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது!

இவை எல்லாவற்றையும் விட, இந்திய அமைதி காக்கும் படை ஈழ மண்ணில் நிலை கொண்டிருந்த வேளையில், ஈழ நாடு பத்திரிகைக் காரியாலயம் குண்டு போட்டுத் தகர்க்கப்பட்டது. முரசொலிப் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். உதயன் காரியாலயம் செல்லடிக்கு இரையானது.

அப்பொழுது எல்லாப் பத்திரிகையாளர்களையும் இந்திய அமைதி காக்கம் படை அதிகாரிகள் அழைத்து வட்ட மேசை மாநாடு நடத்தினார்கள். எங்களின் உடன் படிக்கைக்கு அடி பணிந்து தான் பத்திரிகை நடத்த வேண்டும் என்று கேட்டனர். அப்போது, சிரித்திரன் சுந்தர் போன்றவர்கள் அடிமையாகப் பத்திரிகை நடத்த மாட்டோம் என்று கூறி மாநாட்டிலிருந்து வெளி நடப்புச் செய்தனர். அடிமைச் சாசனத்தை ஏற்றுக் கொண்டு பத்திரிகைத் தர்மத்தையே விலைபேசி விற்றுச் சஞ்சிகை அடித்து விற்றவர்தான் ஜீவா. அவருக்குக் கலாநிதிப் பட்டம் தேவைதான்!

தமிழ் பிரதேசத்திலே முதன் முதலாக 1974-இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழா மலரை தமிழை மறந்து ஆங்கிலத்தில் கொணர்ந்த போது மாமனிதன் குமார் பொன்னம்பலத்தின் குரலுக்குப் பயந்து அதனைக் கப்பலோடு அமிழவிட்ட பல்கலைக் கழகம், யாருக்கு என்ன பட்டத்தைக் கொடுத்தாலும் எங்களுக்கென்ன!

*சுடர் ஒளி -*

# சொன்னாற் போல பட்டங்களும் விருதுகளும் யாருக்காக?

*கே. எஸ். சிவகுமாரன்*

'மல்லிகை' என்ற சிற்றேட்டையும், அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவாவையும் உங்களிற் பலர் அறிந்திருப்பீர்கள். படித்திருப்பீர்கள். சிலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். வேறு சிலர் அவர் பேச்சுக்களைக் கேட்டிருப்பீர்கள். அவரைப் பற்றியும் அவர் ஆக்கங்கள் பற்றியும், அவர் நடத்திவரும் 'மல்லிகை' என்ற சிற்றேட்டைத் தருவித்துப் படித்துப் பயன் பெறவும் அவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 201 1/1, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13. மல்லிகை 274-வது இதழும் வந்து விட்டது.

வயதிலும், அனுபவத்திலும், அறிவிலும் முதிர்ந்த இந்த எழுத்தாளர் தோற்றத்தில் இளைஞர். ஆத்திரமாகச் சில வேளைகளில் மேடையில் பேசுவார். ஆயினும், உள்ளத்தால் பொதுவாக எல்லோரையும் நேசிப்பவர். பல நூல்களின் ஆசிரியர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பென்று சொல்லப் படும் ஒரு பிரிவிலிருந்து உதித்த இந்த ஆற்றல் மிகு எழுத்தாளர் தனது அயராத உழைப்பினாலும், சுறு சுறுப்பினாலும் பயன்தரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

இலக்கிய உலகில் தனது 'மல்லிகை' மூலமும் பெரும் பங்களிப்புகளைச் செய்துவரும் டொமினிக் ஜீவாவைக் காலம் கடந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவிக்க முன்வந்துள்ளது. ஒரு விதத்தில் இது வரவேற்கத்தக்கது. இலங்கையின் தெற்கிலுள்ள பல்கலைக் கழகங்கள் பலருக்குக் கௌரவப் பட்டங்களை அளித்துள்ளன என்பதால், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றும் ஜீவாவைப் பாராட்டுவது விரும்பத்தக்கதுதான்.

இருந்த போதிலும், பல்கலைக் கழகப் பட்டம் பெறக் கல்வி சார்ந்த புலமை தேவை. எம். ஏ. பட்டம் பெற ஜீவா எந்த ஆய்வுக் கட்டுரையையும்

சமர்ப்பித்ததாகத் தெரியவில்லை. இந்தப் பட்டம் தனக்கு வேண்டாமென்று டொமினிக் ஜீவா நிராகரித்திருப்பதாக அறிகிறோம்.

இது தொடர்பான தர்க்க விளக்கத்தை 07-10-2001 'ஆதவன்' வாரப் பத்திரிகையில் சஞ்சயன் என்பவர் (செ. யோகநாதன்) எழுதியிருக்கிறார்.அவர் கூறுவது போலDoctor of Literature (D. lit) பட்டம் வழங்கப் பட்டிருப்பின் பொருத்தமாய் இருந்திருக்கும்.

நிற்க, இந்தப் பட்டங்களுக்குப் பெறுமதியில்லாமற் போய்விடுகிறது. எத்தனையோ அமைப்புகள், எத்தனையோ பேருக்குத் தாராளமாகப் பட்டங்களை வழங்கி வருகின்றன. தாரதம்மிய மற்ற வகையில் இவை வழங்கப்பட்டுள்ளன. எனக்கு இவ்விதமான பட்டங்கள் எதுவும் ('தமிழ்மணி' என்ற ஒன்றைத் தவிர) எனக்குக் கிடைக்காததனால் காழ்ப்புணர்ச்சியில் இதனை நான் குறிப்பிடவில்லை. ஆனால், பட்டத்தைப் பெற, பெறுபவர் சாதனைகளைக் குறிப்பிட்ட துறையில் செய்திருக்க வேண்டும். டொமினிக் ஜீவாவின் சாதனைகள் உயர்கல்விப் பாங்கானது. (Academic) அல்ல என்பதே இங்கு விவாதம். நமது டொமினிக் ஜீவதவுக்கு வடகிழக்கு மாகாண ஆழுனர் விருது வழங்கப் பட்டதென்று நினைக்கிறேன். அது பெரிய காரியந்தான்.

வடகிழக்கு மாகாண ஆளுநர் விருதுக்கு இரண்டு செய்தியாளர்களை நியமித்ததாகவும், நியமித்த பின் அவ்விருதுகள் கொடுக்கப்படக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம். கொடுத்ததைத் திருப்பிப் பெறல் அநாகரிகமானது.

*தினக்குரல்*
*15-10-2001*

# ஜீவாவுக்கு பட்டமேன்?

திருமலை சந்திரன்

கொள்ளைக்காரன் ஆனாலும்
கொடுமைக்காரன் என்றாலும்
உள்ளஉவப்புடனே கலா
நிதியாய் போற்றிடலாம்.........?

சாதிக்காரன் என்றாலே
தகுதியது வந்திடுமோ?
நீதிகெட்டார் இருள்மனத்தார்
தரும்பட்டம் ஏன் ஐயா?

மல்லிகைக்கு விளம்பரமேன்
ஜீவாவிற்கு பட்டமேன்?
பல்கலையின் மஞ்சரிநீ
நடமாடும் இலக்கியம் நீ
நவஈழ இலக்கியத்தின்
உயிர்மூச்சும் நீயேதான்
எவர்வயிறு எரிந்தாலும்
உண்மையும் அதுவேதான்!

கள்ளர்தம்குகையாக
பல்கலைக் கழகம்
விளங்கையிலே
அள்ளும்முடி திருத்தும் கூடம்
தமிழ்மன்றாய் மாற்றினையே!
ஓடியோடி நீயுழைத்தாய்
அகந்தையரை வேரறுத்தாய்!
மூடிதிறந்த பேனா முனையால்
புரட்சித்தீ நீ வளர்த்தாய்!

தம் சந்ததியை வேரறுத்து
வெளிக்கொணர்ந்த காரணத்தால்
சிந்தையிலே தீப்பிடித்தார்
உன் புகழை விரும்பலையே!
காலம் காலமாய்
மணக்கும் மல்லிகை நீ!
ஆழக்குழி வெட்டுபவரோ
அதற்கள்ளே மறைந்திடுவார்!
தென்னிலங்கை இனவெறியர்
நல்லோராய் ஆக்குமிவர்
என்னென்று யாருக்காய்
உரிமைக்குரல் எழுப்புகிறார்.

சுடர் ஒளி
25-10-2001

# ஜீவாவுக்கு யாழ் பல்கலைப் பட்டம்: தமிழுக்கு அவமதிப்பு!

*எம். என். பால-கண்ணதாசன்*

முழுநேர இலக்கியப் பணியாளரான மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு யாழ் பல்கலைக் கழகம் முதுகலைமாணிப் பட்டம் வழங்க முன்வந்தது.

அந்தப் பட்டம் தமக்குப் பொருத்தமற்றது என்று கூறிப் பட்டத்தை ஏற்க மறுத்து விட்டார் ஜீவா.

இலக்கிய வாதிகளை அவமதிப்பதா என்று ஆவேசக் குரலும் எழுப்பினார். அதுபற்றி வாசகர்களின் கருத்து என்ன? படித்துப் பாருங்கள்.

தமிழில் தோய்ந்து தமிழைக் கட்டிக் காத்த புரவலர்களுக்குத் தமது சமஸ்தானத்தையே பரிசாக அளித்த அரசர்கள் அந்தக் காலத்திலே இருந்திருக்கிறார்கள். அன்று அவர்கள் தமது அரியணையைக் கூடத் தமிழ் அறிஞர்களுக்குக் கொடுத்துத் தமிழையும், தமிழ்த் தொண்டு ஆற்றியவர்களையும் பெருமைப் படுத்தினார்கள். அதனால் தமிழ் செழித்து வளர்ந்து திக்கெட்டும் பரவியது. ஆனால் இன்றைய நிலை......?

அருந்தமிழ்ப் பணியாற்றும் தகைசான்றோருக்கு தரமான பட்டத்தைத் தரமுடியாது என்கிறது பல்கலைக் கழகம்.

முப்பத்தாறு வருடங்களாக மல்லிகை எனும் தரமான இலக்கிய இதழை வெளியிட்டும் சிறந்த படைப்புகளைத் தந்தும் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்தும் தமிழை வளர்த்து வருகிறார் ஜீவா. அவருக்கு கலாநிதிப் பட்டத்தைத் தர யாழ் பல்கலைக் கழகம் முன்வரவில்லை.

மாறாக இலக்கிய வாதிகளுக்கு உரித்தல்லாத பட்டத்தை வழங்கி அவரைக் கேவலப்படுத்த முனைந்தது. இதை எந்தவொரு தன் மானத் தமிழனாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது தமிழுக்கு நேர்ந்த அவமதிப்பு ஆகும்.

யாராக இருப்பினும் ஒருவனது திறமைகளை மதித்து அவனுக்கு கௌரவமும் ஊக்கமும் அளிப்பது தமிழினத்தின் தனிச்சிறப்பு. இங்கு ஓர் தமிழனுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகமே ஊக்கமளிக்காமல் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. ஒவ்வொரு தமிழனும் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம். அது வன்மையாகக் கண்டிக்க வேண்டியதும் கூட.

ஒரு நாட்டின் வளர்ச்சியை அந்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களைப் பார்த்து அறிந்து கொள்ளலாம் என்பார்கள். யாழ். பல்கலைக் கழகத்தைப் பார்த்தால் என்ன தெரிகிறது. தவறுகள் திருத்தப்பட வேண்டியவை. அவற்றைத் தொடர விடக் கூடாது.

*சுடர் ஒளி*
*25-10-2001*

# இது பிற்போக்குத் தனம் என்று பலத்த கண்டனம்

*வேலணை வேணியன்*

யாழ் பல்கலைக் கழகம் தம்மை அவமதிப்பதாகக் கருதி மூத்த முதுபெரும் எழுத்தாளரான டொமினிக் ஜீவா பல்கலைக் கழகம் தமக்கு வழங்க முன்வந்த முதுகலை மாணிப் பட்டத்தை ஏற்க மறுத்து விட்டார். அது வரவேற்கத்தக்கது.

யாழ். பல்கலைக் கழகத்தினரை வன்மையாகக் கண்டிக்கிறோம். நான் அறிந்தவரையில் டொமினிக் ஜீவாவின் மல்லிகைச் சஞ்சிகை 30 வருடங்களுக்கு மேல் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்து வருகிறது. தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் மல்லிகையை அச்சிட்டுப் பின்னர் கொழும்புக்குக் கொண்டு வந்தார்.

நடை நடையாகச் சென்று மல்லிகை இதழ்களை வாசகர்களுக்கு விநியோகித்து எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில் வெற்றி கண்டவர் டொமினிக் ஜீவா. இன்றும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் மல்லிகை சஞ்சிகை மூலமாக இலக்கியப் பணியாற்றிப் பெரும் புகழை ஈட்டிக் கொண்டவர் டொமினிக் ஜீவா. அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த - பின் தங்கிய சமூகத்தைச் சார்ந்தவர் டொமினிக் ஜீவா. அவர் தனது மல்லிகைச் சஞ்சிகை மற்றும் மல்லிகைப் பந்தல் பதிப்பகம் மூலம் பல எழுத்தாளர்களின் ஆற்றலை வளர்த்தார். பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களை உயர்த்தி வைத்த பெருமையும் டொமினிக் ஜீவாவைச் சேரும்.

தமிழ் இலக்கியத்தை வளர்க்க வேண்டும் என்பது அவரது தணியாத தாகம். அதில் குறிப்பிடத்தக்களவு வெற்றி கண்டும் அவர் ஓய்ந்து விடவில்லை.

அவரது இடதுசாரிப் போக்கினால் காழ்ப்புணர்ச்சி கொண்ட சில அறிஞர்கள் கூட்டம் அவரை இன்றும் வெறுக்கின்றது. அது அவர்களுடைய உளத்தூய்மையின்மையையே எடுத்துக் காட்டுகின்றது.

யாழ் பல்கலைக் கழகம் ஜீவாவுக்கு இன்றும் இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை வழங்கியிருந்தால் இலங்கை எழுத்தாளர்கள் மத்தியிலிருந்து மட்டுமல்ல புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களிடமிருந்தும் பல்கலைக் கழகத்துக்குப் பாராட்டுக் கிடைத்திருக்கும்.

யாழ் பல்கலைக் கழகத்தின் பிற்போக்குத் தன்மையினால் இன்று டொமினிக் ஜீவா எழுத்தாளர்களிடமிருந்து மட்டுமல்ல, பல அறிஞர்களிடமிருந்தும் பன்மடங்கு மதிப்பைப் பெற்றுள்ளார். யாழ். பல்கலைக் கழக நிர்வாகம் இன்று அதனை நன்கு உணர்ந்திருக்கும்.

*சுடர் ஒளி*
*25-10-2001*

# ஜீவாவுக்கு வழங்கப்பட்ட முதுகலைமாணிப் பட்டம் அவருக்கு செய்யப்பட்ட அகௌரவமே

*செ. யோகநாதன்*

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் - படைப்பாளியும், பத்திரிகையாளரும், பதிப்பாளருமான டொமினிக் ஜீவாவுக்கு அவரது தமிழ்ப் பணிகளைப் பாராட்டி கௌரவம் அளிக்க உள்ளதாக செய்தி அடிப்பட்டபோது மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். இந்தக் கௌரவம் ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் வழங்கப்படுகிறதென்ற நினைவே இந்த மகிழ்ச்சியின் ஆதார சுருதியாக இருந்தது.

ஆனால் பின்னர் முதுகலை மாணிப்பட்டமே ஜீவாவுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிய நேர்ந்தபோது எரிச்சலும், ஏமாற்றமும் உண்டாயிற்று. ஒரு கல்வித்தகைமை சார் பட்டம் எதற்காக ஒரு இலக்கிய கௌரவமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை முதலில் விளங்கிக் கொள்ள முடியவே இல்லை. இலக்கியப் பணியைப் பாராட்டி வழங்கப்படும் இலக்கிய கலாநிதிப் பட்டமே உலகமெங்கும் வழங்கப்பட்டு வருவது வழக்கமாக உள்ளது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமோ அதற்கு மாறான ஒரு முறையை எதற்காகக் கைக்கொண்டது. இதன் பின்னணிக் காரணம் என்ன என்பதையும் நாம் பல படைப்பாளிகளுடன் இணைந்து ஆழ்ந்து சிந்தித்தோம். அப்போதுதான் இந்த முறைகேட்டிற்கான காரணத்தை வெகு துலக்கமாக எங்களால் அறிய முடிந்தது. இது ஒரு தனி மனிதப் பிரச்சினையல்ல. அடிப்படையில் படைப்பாளிகளையும், பின் ஒட்டு மொத்தமான மனுக்குலம் முழுவதையுமே கேவலப்படுத்துகின்ற, அவமானப்படுத்துகிற செய்கை என அறிந்து கொண்டோம்.

இந்த நடவடிக்கைக்கான காரண வேரினைத் தேடிப் பார்ப்போம்.

1960-களில் எழுத்துத் துறைக்கு நான் வந்தேன். அது ஆரோக்கியமான இலக்கிய காலமாய் உதயங் காட்டிக் கொண்டிருந்த காலம். பொதுவுடமைச் சித்தாந்தம் அரசியலிலும் இலக்கியத்திலும் சமூக வாழ்விலேயும் தெளிவும் உறுதியும் கொண்டிருந்த காலம். அழுத்தமான நிலப் பிரபுத்துவக்

கட்டுமானங்களுக்கு எதிராக முற்போக்கு எழுத்தாளர்கள் போராடிக் கொண்டிருந்த காலம். முறைப்படி பயின்ற உயர்மட்ட பண்டித குழுவினரே தமிழை வளர்க்க ஏகபோக உரிமை பெற்றிருந்த வேளை இந்தச் சூழலிலேதான் பொதுவுடமை இயக்கங்களின் பிற்பலம் சார்ந்து ஒடுக்கப்பட்டவர்கள் எனக் கூறப்பட்டிருந்த கே. டானியல், டொமினிக் ஜீவா என். கே. ரகுநாதன், கவிஞர் பசுபதி ஆகியோர் மோசமான அடக்குமுறைகளுக்கு எதிராக எழுத்தையே தமது ஆயுதமாக்கிக் கொண்டனர்.

இவர்களில் கே. டானியலும், ஜீவாவும் வாழ்வின் அடி மட்டத்திலிருந்து வந்தவர்கள். மார்க்சிய சித்தாந்தமும் அனுபவசாரமும் மக்கள் மீதிருந்த அடிப்படை நேயமுமே இவர்களின் கல்வித் தகைமையாயிருந்தன. மக்களிடம் கற்று, அதைச் செழுமைப்படுத்தி அந்த மக்களின் மொழியிலேயே இதை அவர்களிடம் திருப்பிக் கொடுத்தனர் மக்கள் இலக்கியமாக.

இலங்கை சாகித்திய மண்டலம் அமைக்கப்பட்டு, அதன் முதல் விருதுகள் வழங்கப்பட்டபோது, டொமினிக் ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்' அந்த கௌரவத்தினைப் பெற்றது. முற்போக்கு மக்கள் கலை இலக்கியத்திற்குக் கிடைத்த பெரும் மதிப்பாக இது கருதப்பட்டது. ஆயினும் இதற்கு எதிரான கருத்துக்கள் மேல்பட்ட அறிஞர்களால் முன்வைக்கப் பட்டன. இதுவே ஒரு இலக்கியக் கருதுகோளாகவும் முன்வைக்கப் பட்டது. அதுவே 'இழிசனர் இலக்கியம்' என்ற கருதுகோள்.

கே. டானியல், டொமினிக் ஜீவா உட்பட முற்போக்கு இலக்கியக்காரரின் எழுத்துக்களை ''இழிசனர் இலக்கியம்'' என்று பிரகடனப் படுத்தியபோது சரியான எதிர்விளைவு உண்டாயிற்று. முற்போக்கு எழுத்தாளர்கள் இலக்கியப் பிரவாகமாயினர். பின்னர் வடக்கை உலுக்கிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டம், இலக்கியத்தில் கொந்தளிப்பையும் தெளிவையும் உண்டாக்கிற்று. முற்போக்குப் படைப்பாளிகள் மட்டுமே தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகச் சொல்லாலும் எழுத்தாலும் செயலாலும் இயங்கினர். அப்போது இந்த இழிசனர் இலக்கியக் குரல் தலையைப் புதைத்துக் கொண்டது.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்று பொதுவுடமை இயக்கமே பாடுபட்டது. இதற்குப் பின்னணியில் டொமினிக் ஜீவா போன்றோரின் பங்களிப்பு இருந்தது. யாழ்ப்பாண மேல்மட்ட அறிவாளிகள் பலர் இதற்கு எதிராக நின்றனர். பேராசிரியர் கைலாசபதியின் இரவு பகலான களைப்பறியா உழைப்பினால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பலமான அத்திவாரத்தோடு செயற்பட ஆரம்பித்தது. புதிய தொடக்கங்களை உண்டாக்கிற்று. வகைமாதிரிப் பல்கலைக் கழகம் ஆயிற்று.

இதே பல்கலைக் கழகம் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் அறியப்பட்டவரும், தமிழின் பெருமையை, யாழ்ப்பாணத்துக் கலாசாரப் போக்கை ஜப்பான் மொழிக்கு அறியத் தந்தவருமான படைப்பாளி கே. டானியலுக்கு கௌரவப்பட்டம் வழங்க வேண்டுமென்ற பேராசிரியர் சிவஞான சுந்தரத்தின் (நந்தி) முன்மொழிதலை நிராகரித்ததாக அறிய வருகின்றது. இது எவ்வித எதிர்க் குரலுமின்றிப் பல்கலைக் கழக அறிவாளிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மாபெருஞ் சோகம்.

பின்னர் இன்னொரு செய்தி வந்தது. பட்ட மேற்படிப்பு ஆய்வினை ஆங்கிலத்தில் எழுதுமாறு பல்கலைக் கழக மாணவர்கள் நெறிப்படுத்தப்பட்டனர். இதை மேற்கொள்ள முடியாமற் பல மாணவர்கள் பல்கலைக் கழகத்தை விட்டே வெளியேறினர். இதை முன்னாள் - இதே பல்கலைக் கழகப் பதிவாளரும், எழுத்தாளருமான செங்கை ஆழியான் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். இது சாதாரண தர மாணவர்களையே பாதிக்கும் என்பதை எவராலும் அறிந்து கொள்ள முடியும்.

இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உபவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, நெருக்கடியான நிலைமையூடாக இப் பல்கலைக் கழகத்தை நிர்வகித்து வருபவர். நாங்கள் இருவரும் ஒரு பாடசாலை மாணவர்கள்.

தமிழ் மொழி மூலம் கல்வி கற்றுப் பட்டம் பெற்றதில் பெருமை கொண்டவர்கள். இன்று பல்கலைக் கழக பீடாதிபதி, விரிவுரையாளர், பேராசிரியர்களில் 96% ஆனோர் தமிழ் மொழியில் பயின்றவர்கள். அது மட்டுமல்ல சாதாரண குடும்பங்களில் இருந்து கஷ்டப்பட்டு இந்த நிலைக்கு வந்தவர்கள். பேராசிரியர் கைலாசபதி போன்ற பெருமனம் படைத்தவர்களால் பாரபட்சமின்றித் தூக்கிவிடப்பட்டவர்கள்.

பல்கலைக் கழகப் பேராசிரியரான கைலாசபதி, சிவத்தம்பி, எம். ஏ. நு்.மான், சி. மௌனகுரு, சுபா, ஜெயராஜா, செ. யோகராஜா, இ. கிருஷ்ணராஜா, இரா. சிவச்சந்திரன், நா. சுப்பிரமணியம் போன்ற பலர் ‘மல்லிகை’யில் தமது சிறந்த கட்டுரைகளை எழுதியுள்ளனர். இவர்களில் பலர் இக்கட்டுரை உதவியால் புள்ளிகள் பெற்றவர். இதைப் பெருமையாகவும் சொல்பவர்.

உலகின் பல பல்கலைக் கழகங்களும், அதன் அறிவாளிகளும் மக்களிடமிருந்து விலகி ஒரு சிறிய கூட்டினுள் நிற்பதாய் கூறப்படுகிறது. அதனோடு இவர்கள் பழமைவாத, உயர் வகுப்பு குணாம்சத்தையும் பெற்று விடுகிறார்களாம். மேற்கூறிய கருத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கும் பொருந்துகிறதா என்ற கேள்வி தற்போது மேலெழும்புகிறது. டொமினிக் ஜீவாவுக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கப் பல்கலைக் கழக மூதறிஞர்கள் எடுத்துள்ள முடிவுக்கு இந்த இழிசனர் கருதுகோள்தான் காரணமா?

இதுவரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் அளித்த எவரையும் விட டொமினிக் ஜீவாவின் தமிழ்ப் பணி எந்த விதத்திலும் குறைவானதல்ல. ஐம்பது ஆண்டு கால தமிழ் எழுத்தாளன் - 36-ஆண்டு காலமாய் 'மல்லிகை' இதழாசிரியன், பல ஆய்வாளர்கள் படைப்பாளர்கள் உருவாக இதன் மூலம் தளம் அமைத்தவன். 'மல்லிகைப் பந்தல்' மூலம் சிரமமான பதிப்புத்துறையூடாகப் படைப்பாளிகளின் தொகுதியை வெளியிட்டு வரும் ஆர்வமுள்ள பதிப்பாளன். தமிழ் இலக்கிய வரலாறு மௌனமாய் விலகிச் செல்லாமல் அழுத்தமாகப் பதித்துச் செல்லுகின்ற படைப்பாளி. முற்போக்கு இயக்கத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட மனிதன்.

விருது ஒரு படைப்பாளிக்குப் பெரும் மகிமை தருவதில்லை. ஆனால் டொமினிக் ஜீவா என்ற படைப்பாளிக்கு வழங்கப்பட்ட முதுகலை மாணிப் பட்டம் ஒரு அகௌரவமென்றே படைப்பாளிகளால் கருதப்படுகிறது.

இம்முடிவை எடுத்த மூதவையினரே, இதுதான் காரணமெனில் நீங்கள் ஒரு படைப்பாளியின் அடிப்படை உரிமையையும், இலங்கை அரசியலமைப்பு ஒரு மனிதனை இன, மொழி, சாதி என ஒதுக்குவது தண்டனைக்குரிய குற்றம் என்று சொல்வதையும் நிராகரிக்கிறீர்கள். இதை நினைத்துப் பாருங்கள் அறிவாளியென்ற தகுதியை வைத்து, கலைமாணியில் சிறப்புப் பட்டம் பெறாதவரை பேராசிரியராக உயர்த்திய மரபு நம்முடையது. மூன்றாம் வகுப்புப் படித்த கு. ராஜநாராயணனை புதுச்சேரியில் பல்கலைக் கழகம் அவரது நாட்டுப்புறவியல் அறிவை மதித்து வருகைப் பேராசிரியராக நியமித்தது. பத்தாம் வகுப்புவரை படித்த எழுத்தாளர் பிரபஞ்சனை வருகைப் பேராசிரியனாக நியமிக்கத் தீர்மானித்தது. இதை நமது மரபாக்குங்கள்.

ஒரு படைப்பாளி மேலான சிருஷ்டியாளன். ஒரு மொழியை வளம்படுத்தும் ஆற்றலுள்ளவன். இலங்கை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய கே. டானியல், டொமினிக் ஜீவா போன்றோரை நீங்கள் கௌரவித்திருந்தால் மிகுந்த கௌரவத்தை இன்றும், நாளையும் பெற்றிருப்பீர்கள். இனிவரும் தலைமுறை உங்களைப் பாராட்டியிருக்கும்.

பல்கலைக் கழகங்களில் இந்தப் பணிபுரியும் விரிந்த பார்வையுள்ள அனைவரும் இந்த வரலாறு பற்றிச் சிந்திக்குமாறு படைப்பாளிகள் சார்பில் வேண்டுகின்றேன்.

*தினகரன்*
*28-10-2001*

# மல்லிகை ஜீவாவின் மறு புரட்சி

*கம்பவாரிதி இ. ஜெயராஜ்*

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா யாழ். பல்கலைக் கழகம் தனக்கு வழங்க முன்வந்த முதுகலைமாணிப் பட்டத்தினை நிராகரித்ததன் மூலம் மீண்டும் ஒரு முறை புரட்சியாளராய் இலக்கிய உலகில் தன் பெயரைப் பதிவு செய்துள்ளார்.

பட்டங்களுக்கும், பதவிகளுக்கும் இலட்சியங்களை விற்றுப் பிழைக்கும் பலர் மத்தியில், இலட்சியத்திற்காகத் தனக்குக் கிடைத்த அதியுயர் கௌரவத்தினை நிராகரித்துச் சரித்திரத்தில் தன் பெயரைப் பதித்துக் கொண்டார் அவர். ஒரு பல்கலைக் கழகம் வழங்கும் பாராட்டு என்பது அறிவுறுத்துறை சார்ந்தோர்க்குக் கிடைக்கக் கூடிய அதியுயர் கௌரவம் என்பதில் ஐயமில்லை. இப்பாராட்டுக்கு ஆட்படாதவர் எவரும் இலர்.

இலட்சியங்கள் பேசிய பல பெரிய மனிதர்கள் கூட இப்பாராட்டை உச்சிமேற் கொண்டு உவந்தது வரலாறு. அவ்வரலாற்றை மாற்றித் தன் தனித்துவம் பேணியிருக்கும் ஜீவாவை தமிழுலகு வியந்து பாராட்டுகிறது.

ஆரம்ப காலம் தொட்டு யாழ். பல்கலைக் கழகம் சார்ந்த அறிவாளிகள் பலர் மண்ணில் கால் பதிக்க மறுத்தே வந்தனர். அறிவுலகின் உயர் பீடம் என்பதால் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சில ஜனநாயகம் மீறிய அதிகாரங்கள் அங்கு தொடர்ந்து தவறுதலாய்ப் பயன்படுத்தப்பட்டன.

அதியுயர் அறிவாளிகள் அறத்தின் வழி நிற்பர் எனும் நம்பிக்கையால், கட்டுப்பாடின்றி வழங்கப்பட்ட சில அதிகாரங்கள் பெரும்பாலும் யாழ். பல்கலைக் கழக அறிவாளிகளாற் பிழையாகவே பயன்படுத்தப்பட்டன.

கௌரவப்பட்டங்கள் மட்டுமின்றிக் கல்விப் பட்டங்கள் கூட பல்கலைக் கழகக் கல்வியாளர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களிலேயே தங்கியிருந்தது வருத்தத்திற்குரிய வரலாறு. அவ்வறிவாளிகளை வழிமொழியத் தெரியாது போனதால், ஆற்றலிருந்தும் தகுதியிழந்த மாணவர் பெயர்களை வரிசையாய்ப் பட்டியலிடலாம்.

பாதிக்கப் பட்ட மாணவர்கள் அவ்வறிவாளிகளின் பின்னிருந்த ''பல்கலைக் கழகச் சமூகம்'' எனும் பெரும் பலத்தை எதிர்க்க முடியாது, கண்ணீரோடு கலைந்த கதைகள் பல. தம் இச்சைகளுக்கு ஆட்படா மாணவர்களை அறமற்றுப் பழிவாங்கி, கல்வியுலகில் 'பண்ணையார்களாய்த் திகழ்ந்த பல்கலைக் கழக அறிவாளிகள், சமூகத்தையும் அதே கண்ணோட்டத்துடன் தான் கவனிக்கத் தலைப்பட்டனர். அதன் விளைவாய்ப் பல்கலைக் கழகம் ஓர் சமூக நிறுவனமாய் அன்றி, அங்கு பணிபுரியும் ஒரு சிலரின் தனிச் சொத்தாய் கருதப்படும் அவலநிலை தோன்றியது.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் தாம் எனும் அவ்வறிவாளிகள் தாம் ஆணவப் போக்கு, இயல்பாற்றலோடு இருந்த சமூகப் பெரியார்களைக் கௌரவிக்க மறந்தது. மறுத்தது. பல்கலைக் கழகம், சமூகம் சார்ந்தாரைக் கௌரவித்தால் அங்ஙனம் கௌரவிக்கப் பட்டவர் தமக்குச் சமமாகி விடுவார் எனும் தேவையற்ற அச்சத்தால், ஆற்றல் மிகுந்த மூத்தோர் பலரை இனங்கண்டு, தகுதியோடு கௌரவிக்கப் பல்கலைக் கழகம் தவறியது.

கௌரவப் பட்டங்களுக்கும் கல்விப் பட்டங்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் அவ்வறிவாளிகளில் ஒரு சிலர், மூதவைக்கு, கௌரவத்திற்காகச் சிபாரிசு செய்யப்பட்டோரை ''இவர் எத்தனை புத்தகம் எழுதினார்?'' எனக் கேள்வி கேட்டு அறிவீனமாய் நிராகரித்தனர்.

இவ்வறிவீனச் செயற்பாடுகள் கடந்து, வழங்கப்பட்ட ஒரு சில பட்டங்களும், பல்கலைக் கழகத்தின் கௌரவத்தையோ விருது பெற்றவதுகளின் கௌரவத்தையோ முழுமையுறச் செய்யாத வண்ணம் எவ்வித வரிசையும் பேணப்படாது வழங்கப்பட்டன. அங்ஙனம் வழங்கப்பட்ட கௌரவங்களைப் பெற்றவர்களும் பல்கலைக் கழகம் தரும் கௌரவம் எனப் பார்த்தார்களே அன்றி, அந்தக் கௌரவங்கள் தக்கபடி வழங்கப் படுகின்றனவா எனும் தகுதியைப் பார்த்தார்களில்லை. அவர்களது பணிவு பல்கலைக் கழக அறிவாளிகளை மேலும் பலப்படுத்தியது.

தட்டிக் கேட்பார் எவரும் இல்லாது போனதால், பல்கலைக் கழக அறிவாளிகள் சுண்டல் கொடுக்கும் கோயில் மணியகாரார்போல, தம்மால் விரும்பப்பட்டார்க்கு விரும்பியபடி பட்டங்களை எவ்வித நெறிமுறையும்

பேணாது வழங்கத் தலைப்பட்டனர். மண்ணுக்காய்ப் பாடுபட்ட பல அறிஞர்களின் பெயர்கள் பல்கலைக் கழகக் கௌரவத்திற்காய்ச் சிபாரிசு செய்யப்பட்டபோது, சிபாரிசு செய்யப்பட்டவரையும், செய்தவரையும் நையாண்டி செய்து புறந்தள்ளவும் அவர்கள் தயங்கவில்லை.

இங்ஙனம் மண்ணோடு ஒட்டாமல் இருந்த பல்கலைக் கழகத்தைத் தன் தலைமையால் சிறிது மாற்றமுறச் செய்து, சமூகம் சார்ந்த பலரையும் கௌரவிக்க, தற்போதைய துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை வழிவகுத்தார். அதற்காக அவர் பாராட்டுக்குரியவர் ஆகிறார்.

ஆனாலும் கடந்த சில ஆண்டுகளாக எவ்வித வரையறையும் இல்லாமல் வழங்கப்பட்ட பட்டங்களும், பாராட்டுக்களும் அவரது நல்லெண்ணத்தைப் பயனற்றதாக்கியது.

இந்நிலையில் பத்தோடு பதினொன்றாக மேற்சொன்னபடி எவ்வித வரிசையும் பேணப் படாமல், மல்லிகை ஆசிரியர் ஜீவாவுக்கு யாழ் பல்கலைக் கழகம் முதுகலைமாணிப் பட்டமளிக்க முன்வந்தது.

முதுகலைமாணிப் பட்டம் கல்விப் பட்டமே அன்றி, கௌரவப் பட்டமில்லை என அறிவித்து, துணிந்து அப்பட்டத்தினை நிராகரித்துத் தன் தகுதியை நிலைநிறுத்தியதோடு, பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் அறிவு நிலைப்பட்டவையா எனும் ஐயத்தை உருவாக்கும் வண்ணம் செயற்பட்டிருக்கிறார் மல்லிகை ஜீவா.

ஜீவா பல்கலைக் கழக கௌரவத்தினை நிராகரித்தது சரியா? பிழையா? என்ற சர்ச்சை இன்று அறிவுலகின் முதற்பிரச்சினையாய் ஆகியிருக்கிறது. தமக்கு வருங்காலத்தில் கிடைக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் நோக்கிப் பல்கலைக் கழகத்திற்காகத் தாளம் போடுவோர் கூட்டம், அவர் செயலைத் தவறென்கிறது. நீதிநிலை நின்று சிந்திப்பார் கூட்டம் ஜீவாவின் செயலைச் சரியென்கிறது.

எது எப்படியிருப்பினும் ஜீவாவின் நிராகரிப்புப் பல்கலைக் கழகம் நோக்கிப் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. அக்கேள்விகள் வருமாறு.

இலக்கண வித்தகர், சித்தாந்த வித்தகர் போன்ற பட்டங்கள் ஆதீனங்களினாலும் தனிப் பட்ட சங்கங்களாலும் வழங்கப்படுவனவே அன்றி,

பல்கலைக் கழகங்களால் வழங்கப்படுதல் இயல்பா? யாழ். பல்கலைக் கழகம் அல்லாத வேறு பல்கலைக் கழகங்கள் ஏதேனும் இத்தகைய ''தனித்தொடர்களை" (Title) கௌரவப் பட்டங்களாய் வழங்கியுள்ளனவா?

ஓர் பல்கலைக் கழகம் கௌரவிக்க நினைக்கும் பெரியார்க்கு, கௌரவ கலாநிதிப் பட்டமன்றி முதுகலைமாணி (M.A.) போன்ற பட்டங்களையும் வழங்குதல் மரபா? அது மரபாயின் கலைமாணி (B. A.) போன்ற பட்டங்களையும் கௌரவப் பட்டங்களாய் வழங்க முடியுமா?

யாழ் பல்கலைக் கழகம் இதுவரை இலக்கிய கலாநிதி, இலக்கண வித்தகர், சித்தாந்த வித்தகர், கலாநிதி, முதுகலைமாணி போன்ற பட்டங்களை வழங்கியிருக்கிறது. இப்பட்டங்கள் ஏதேனும் ஒரு வரையறை செய்யப்பட்ட நியதியை வைத்து, குறித்த நபர்களுக்கு வழங்கப்பட்டனவா? அல்லது பல்கலைக் கழக அறிவாளிகள் சிலரின் விருப்புவெறுப்பே இப்பட்டங்களுக்கான தகுதிகளாக ஆயினவா?

நவீன தமிழிலக்கிய வாதிகளின் களமாய்க் கருதப்பட்டது யாழ். பல்கலைக் கழகம், பேராசிரியர் கைலாசபதி, சிவத்தம்பி போன்ற விரிந்த புகழ் கொண்ட நவீன இலக்கிய ஆளுமையாளர்களால் நெறிப்படுத்தப்பட்ட யாழ். பல்கலைக் கழகம், இதுவரை நவீன இலக்கிய வாதிகள் எவரையும் கௌரவிக்க முன்வராதது ஏன்? மரபிலக்கிய வாதிகளை கௌரவித்த யாழ். பல்கலைக் கழகம் நவீன இலக்கிய வாதிகளைக் கௌரவிக்க முன்வராததன் மூலம் நவீன இலக்கியத்தை அங்கீகரிக்க மறுப்பதாய் அறிவிக்கின்றதா?

சென்ற ஆண்டு மறைவிற்குப் பின்னான கௌரவ விருது மில்க்வைற் அதிபர் அமரர் கனகராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் மறைவுக்குப் பின்னான விருதுகள் யாழ் பல்கலைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை அறியப்படுகிறது. அங்ஙனமாயின் தலித்திலக்கியத்தின் முன்னோடி எனத் தமிழுலகால் ஏற்கப்படும் டானியலுக்கோ கவிதைத்துறையில் தனித்துவத்தோடு இம்மண்ணில் ஆழமாய்ப் பெயர் பதித்த 'மகாகவிக்கோ' இப்பட்டம் வழங்கப்படாதது ஏன்?

அமரர் கனகராஜாவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. மல்லிகை ஜீவவுக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கப்பட இருந்தது. என்ன அடிப்படையில் இவ்விருவர்க்கான பட்டங்களிற் பேதம் உருவாக்கப்பட்டது?இவ்விருவரில் ஒருவரைவிட மற்றொருவர் என்ன அடிப்படையில் உயர்கிறார்? அறிவுலுக, சமூக செயற்பாடுகளில் மல்லிகை ஜீவா எந்த அடிப்படையில் மில்க்வைற் அதிபரை விடப் பின் நிற்பதாய்க் கருதி அவருக்கான பட்டத்தின் தகுதி குறைக்கப்பட்டது?

இக்கேள்விகளுக்குப் பதிலுரைத்து சமூகத்தில் எழுந்துள்ள ஐயங்களைத் தீர்க்க வேண்டியது யாழ். பல்கலைக் கழகத்தின் கடன். பல்கலைக் கழகத்தைச் சமூகத்தோடு இணைப்பதற்கே மூதவை உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். அறிவுத்துறை சார்ந்தார் கருத்துக்களை ஆமோதிப்பது மட்டுமே அவர்கள் வேலையல்ல. நடுநிலையான சிந்தனையோடு, அறவழிப்பட்டுப் பல்கலைக் கழகத்தை வழிப்படுத்துவதே அவர்தம் தொழிலாய் இருக்க வேண்டும்.

முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் பேரறிஞர் சிவபாதசுந்தரம் அவர்கள், மூதவை உறுப்பினர்க்கான இலக்கணத்தைத் தன்செயற் பாடுகளாற் தெளிவுபட வரையறை செய்தார். இன்று அந்த நிமிர்வோடும் தெளிவோடும் யாழ். பல்கலைக் கழக மூதவையில் சமூகப் பிரதி நிதிகள் இல்லையோ என எண்ணத்தோன்றுகிறது. அறிவுலகத்தில் ஏற்படும் நெறிப்பிறழ்வு நம் இனத்தையே பாதிக்கும் என்பது உறுதி.

ஜீவாவின் மறுதலிப்பைப் பகையாய்க் கொள்ளாமல், பல்கலைக் கழகம் தன் செயற்பாடுகளை மீள் பரிசோதனைக்குள்ளாக்கி, தெளிவுற வேண்டுமென அறிவுலகம் விரும்புகிறது. எவ்வித வரையறைகளுமின்றி, வரிசை பேணாது வழங்கப்பட்ட பட்டத்தினை மல்லிகை ஆசிரியர் ஜீவா நிராகரித்தது மிகச்சரியான செயலே. பல்கலைக் கழகத்தாரை நெறிப்படுத்தியுள்ள ஜீவாவின் செயற்பாடு யாழ். பல்கலைக் கழக வரலாற்றில் ஒரு மைற்கல்லாய்ப் பதிவாகும் என்பதில் ஐயமில்லை.

*வீரகேசரி*
*28-10-2001*

## ஜீவா உங்களை மன்னிப்பாராக!

வெலி. யே. ச.

பட்டங்கள்
அங்கீகரிப்பின் அடையாளம் தான்;
அவமதிப்பதற்கல்ல.

மாலைகள்
கௌரவப் படுத்துவதற்குத்தான்;
கழுத்தை நெரிப்பதற்கல்ல.
விருதுகள்
போற்றுவதற்குத்தான்;
புறந்தள்ளுவதற்கல்ல.

இந்த
எளிமையின் வலிமையை
புரியாத (யாழ்) பல்கலைக் கழகமே
எங்கள் ஜீவாவையா
அங்கீகரிப்பதாய்
அழைப்பு விடுத்தாய்?

நீ
ஆராத்தி எடுப்பதாய்
பாசாங்கு காட்டி
சூடத்தால் அல்லவா
சுட்டெரிக்கிறாய்.

அவர்
வரம்புகளை உடைத்து
இலக்கியவாதியானவர்தான்
வரம்புகளை மீறி
பட்டம் பெற விழைபவரல்ல.

சுயம் தேடி வாழும் - ஒரு
சோஷலி சவாதி
சோரம் போவாரா?

அவர்
உலகம் விசாலமானது!
வானமே கூரை

பூமியே தலை
சக மனிதர்களெல்லாம்
நண்பர்கள்!

மனிதத்தை நேசிக்கும் - அந்த
மானிடனா - உன்
கலைமாணிப் பட்டத்தால்
கர்வப்படப் போகிறார்?

ஒரு மல்லிகைக்கு
மாலை சூட்ட
அரளிப்பூவையல்லவா
ஆய்கிறார்கள்

எழுதப்படாத கவிதைகளையும்
வரையப்படாத சித்திரங்களையும்
வரைந்த மனிதனுக்கு
வஞ்சனை செய்கிறீர்கள்?

புத்தி ஜீவிகள் என
பிரகடனப் படுத்திக் கொள்ளும்
பல்கலைக் கழகத்து
ஜாம்பவான்களே - எதைக்
குத்திக் காட்ட - இந்த
'மலிவு' முயற்சி?

எப்படி முடிகிறது
ஈழத்து படைப்பாளிகளின்
இதயங்களில் வாழும்
''இலக்கிய கலாநிதியை''
முது கலைமாணி என
முள் முடி சூட்ட........?

ஜீவா -
உங்களை மன்னிப்பாராக.

# எழுத்தாளர்கள் அவதார புருஷர்களா?

*மாவை – வரோதயன்*

யாழ் பல்கலைக் கழகம் தனது 2001-ம் ஆண்டுக் கான பட்டமளிப்பு விழாவில் மூத்த எழுத்தாளரும், பத்திரிகையாளரும், வெளியீட்டாளரும். பிரபல இலக்கிய வாதியுமான திரு. டொமினிக ஜீவா அவர்களுக்கு கௌரவ முதுகலை மாணி (M. A.) பட்டம் வழங்கிக் கௌரவிக்க முனைந்தது. எழுத்தாளர் டொமினிக் ஜீவா அவர்கள் அதனை நிராகரித்து விட்டார்கள். அது நியாயமானதே!

அந்த அலையோடு இன்றைய தமிழ் இலக்கியப் பரப்பில் அடிக்கடி, அதிகம் பேசப்படும் இலக்கியகாரனாக திரு. டொமினிக் ஜீவா அவர்கள் திகழ்கின்றார்கள். இலங்கை வானொலி தமிழ்ச் சேவைக்கும் புது உற்சாகம் பிறந்துள்ளது. அண்மையில் புதிதாக மூன்று புதிய நிகழ்ச்சிகளைத் - தேசிய சேவையில் அறிமுகம் செய்துள்ளது. அவற்றில் புதன் கிழமைகளில் இரவு 7 மணிக்கு ஒலிபரப்பாகும் ''நினைவுகள்'' நிகழ்ச்சி காலப் பொருத்தமும் கனதியும் உடையது.

அந்நிகழ்ச்சியின் முதல் நிகழ்ச்சி திரு. டொமினிக் ஜீவா அவர்களின் ''நினைவுகளுடன்'' கடந்த 10-10-2001 அன்று ஆரம்பமானது. டொமினிக் ஜீவா அவர்களின் கருத்துக்களோடு அவர் பற்றிய ஏனைய பிரமுகர்களின் கருத்துக்களும் ஒலி அலைகளால் கோர்க்கப்படும் ஓர் நல்ல நிகழ்ச்சி.

நிகழ்ச்சி முடியும் தறுவாயில் ஒலிபரப்பாளர் ஒரு கேள்வியை திரு. டொமினிக் ஜீவா அவர்களிடம் கேட்கிறார். ஒரு படைப்பாளி எப்படி வெளிவருகின்றான். அறிவு சார்ந்தா, புத்தி ஜீவித்தனம் சார்ந்தா? என்பது

கேள்வி. டொமினிக் ஜீவா அவர்கள், ''படைப்பு என்பது ஒரு கொடை'' என்று பதில் கொடுக்கின்றார்.

இது எந்த அடிப்படையில் என்பது ஒரு சாதாரண வானொலி நேயனுக்குள் எழும் கேள்வி. டொமினிக் ஜீவா அவர்கள் தமது அறிவு முதிர்ச்சி, அனுபவ முதிர்ச்சி என்பவற்றின் ஊடு ஆன்மீகத் தளத்துக்கு வந்து விட்டாரா?

அல்லது அவருடன் அதிகமாகத் தற்போது நெருக்கமாக இருப்பவர்கள் ஆன்மீகக்காரர்களும், அத்துறை சார்ந்தவர்களுமாக இருப்பதால் அந்த சகவாச தோசமா, அல்லது தனது இலக்கிய ஆளுமை, பத்திரிகைத் துறை ஆளுமை, என்பவற்றின் ஊடாக ஒரு விஞ்ஞான ரீதியான ஆய்வைச் செய்து விடத் தவறி விட்டாரா?

அல்லது அந்த ஆளுமைக்குக் காரணம் யாவரும் நம்பும் ஒரு மேலான சக்தி அல்லது இறைவன் என்பதை ஏற்றுக் கொள்கின்றாரா? என்பது பெரும் குழப்பமாக உள்ளது.

டொமினிக் ஜீவா அவர்களின் பேட்டியில் முதலில் இருந்து அவர் தாம் கடந்து வந்த பாதையினை தமது உடலும், உள்ளமும் பட்ட காயங்களை, வேதனைகளை, விழுப்புண்களை, எல்லாம் பட்டியல் இடுகின்றார். ஆனால் பொதுவான படைப்பாளி என்று வரும்போது மட்டும் ஏன் கொடையாளியிடம் சரணடைய வேண்டும். அல்லது படைப்பாளி விடயத்தில் கொடையாளியின் தேர்வு எத்தகையது?

அதுவும் அல்லாமல் டொமினிக் ஜீவா அவர்கள் பரம்பரை இயல் காரணிகளையும் நிராகரிக்கின்றார். அவர் எந்த வகையான படைப்பாளிகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு இக்கூற்றை முன்மொழிந்தார் என்பது தெரிய வில்லை.

சாதாரணமாக எந்த ஒரு படைப்பாளியையும், எழுத்தாளனையும், அவனது பின்னணியையும் நோக்கும் போது பின்வரும் தகவல்கள் வெளிப்படும்.

அதீதமான ஈடுபாட்டுடனான வாசிப்பு ஒடுக்குமுறைக்குள்ளான, அல்லது ஏதோ ஒரு வகை நெருடலுக்கு உள்ளான சமூகப் பின்னணி வாசிப்பின் மூலம் வரும் ஆழ்ந்த கிரகிப்பு, அது போல் தன் புற உணர்வுகளை, அனுபவங்களை வெளிப்படுத்தும் உந்தல் அதற்கான ஊடகத் தேர்வு வடிவத் தேர்வு, இவற்றுடன் கல்வி நிலைமை, அறிவு மட்டம் சார்ந்த துறை. பயிற்சி, விடாமுயற்சி என்பன ஒன்றில் ஒன்று கலந்து ஒரு

எழுத்தாளனை, படைப்பாளியை வெளிக் கொணர்கின்றன. இதில் சுமாரான பங்களிப்பைப் பரம்பரையில் சார்ந்து வரும் காரணிகள் செய்கின்றன. அது போலவே அந்தப் படைப்பாளி சார்ந்த சமூகப் பின்னணியின் பாதிப்பும் சமபங்கை வகிக்கின்றது எனலாம்.

டொமினிக் ஜீவா அவாகளது இலக்கிய வளர்ச்சிப் பாதையில் குறுக்கிடும் இடறல்கள், தணிக்கைகள் போலவே அவருக்குள்ளாலும் அவை வெளிப்பட்டு வேறு படைப்பாளிகளைப் பாதித்திருப்பதையும் நமது தமிழ் இலக்கியச் சூழல் அறிந்திருக்கின்றது.

சாதனைகள் மதிக்கப்படும் பொழுது சபலங்கள் மறைந்து விடுவது இயல்புதான். ஆனால் எந்த ஒரு படைப்பாளிக்கும் சுய பரிசீலணை, சுய தேடல் அவசியமானது. அது உண்மையின் தளத்தில் எழுந்து நிறக வேண்டும். சக படைப்பாளிகளை கேவலப் படுத்துவதாக அமைந்து விடக் கூடாது.

*ஆதவன்*
*04 – 11 – 2001*

# ஜீவாவும் முதுகலை மாணிப் பட்டமும்

**பல்கலைக் கழகம் விடும் தவறுகள் சுட்டிக் காட்டப்பட வேண்டும்.**

*குழந்தை வடிவேலன்*

கால் நூற்றாண்டிற்கும் மேலாக தனியொருவராக நின்று எவ்வித இன்னல் வந்தபோதும் 'மல்லிகை' என்ற சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிட்டு வந்திருக்கிறார் மல்லிகை ஜீவா. மேலும் ஈழத்து இலக்கிய வரலாற்றைப் புரட்டும் போது ஜீவாவை மறந்துவிட முடியாது. அந்த அளவிற்கு ஈழத்து இலக்கியத் துறையில் அவரது பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. தனது மன உறுதியினாலும், விடாமுயற்சியினாலும் தனிமனிதனாகச் சாதனைப் படைத்துக் கொண்டிருக்கும் ஜீவாவைக் காலம் கடந்தாவது கௌரவிக்க வேண்டுமென யாழ். பல்கலைக் கழகம் விரும்பியது பாராட்டப் படவேண்டியதாகும். சமூக சேவையில் ஈடுபட்டுப் பொது வாழ்விற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டோரை சமூகம் கௌரவிக்கும் போதுதான் அது ஓர் உந்து சக்தியாக அமைந்து அவர்களது சமூகப்பணியை மேலும் சிறப்பாகச் செய்யத் தூண்டுகின்றது.

ஆனால், இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் ஜீவாவிற்கு வழங்கப்பட்ட கௌரவமாகும். அவருக்கு அளிக்கப் பட்ட இலக்கியப் பணிக்கான கௌரவ முதுகலைமாணிப் பட்டமானது அவரது இலக்கியப் பணியை கௌரவிக்கப் போதுமானதா? முதுகலைமாணிப் பட்டம் புலமைசார் பட்டமாக வழங்கப்பட்டு வருவதே மரபு. அதனைக் கௌரவப் பட்டமாக ஏற்றுக் கொள்ள முடியாதென ஜீவா கூறியிருப்பதும் அப்பட்டத்தினை ஏற்க மறுத்திருப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ். வளாகமாகத் தொடங்கப்பட்டபோது தினகரன் பத்திரிகை ஓர் ஆசிரியர் தலையங்கம் தீட்டியிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் அதிலிருந்து தற்போதைய சூழ்நிலைக்குப் பொருத்தமாக அமையும் ஓர் விடயத்தைச் சுட்டிக் காட்டலாம்.

யாழ்ப்பாணத்தில் அமையப் போகும் பல்கலைக் கழகமானது ஓர் பெயர்ப்பலகைப் பல்கலைக்கழகமாகவோ அல்லது தமிழ் மாணவர்களுக்கான ஓர் கல்வி முகாமாகவோ அல்லது அங்கு கடமை புரியும் ஆசிரியர்களின் ஓர் அரசியல் களமாகவோ அமையக் கூடாது எனத் தினகரன் எழுதியிருந்தது. உண்மையில் இன்றைய சூழ்நிலையில் இக்கருத்து பொருத்தமானவையாகவே அமைகின்றது.

ஆனால் பாவம் ஜீவா எந்த பேராசிரியரோடு கருத்து முரண்பட்டாரோ அல்லது தனது ஆளுமைக்கு எட்டிய வரையில் சுயமாக சிந்தித்தாரோ தெரியவில்லை, ஏனையயோருக்கு வழங்கப்படும் அளவுக்கு ஜீவா பழிவாங்கப்பட்டுள்ளார்.

ஜீவாவின் இலக்கியப் பணிக்கு வழங்கப்படும் கௌரவ முதுகலைமாணிப் பட்டமானது அவரது இலக்கியப் பணியை குறைத்து மதிப்பிடுவதாகவே அமைகின்றது. இலங்கைச் சிறுகதை வரலாற்றில் முதன் முதலாக 1961-இல் தனது 'தண்ணீரும் கண்ணீரும்' என்ற சிறுகதைத் தொகுதிக்காக இலங்கை சாகித்திய அக்கடமி பரிசினைப் பெற்றவர் ஜீவா. இவரது சிறுகதைக்ள பல ரஷ்ய, செக், ஆங்கில, சிங்கள மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஜீவாவின் பின்புல வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் தொழிலாளியின் குடும்பத்திலே பிறந்து தொழிலாளியாக வளர்ந்து துடிப்புள்ள ஆக்க இலக்கிய கர்த்தாவாக மாறி இலக்கியத் துறைக்காகவே தமது வாழ்நாளை அர்ப்பணித்து ஆக்கபூர்வமான பங்களிப்பினை ஈழத்து இலக்கியத் துறைக்கு ஆற்றிவரும் ஓர் மூத்த இலக்கிய வாதியாக இருப்பதைக் காணலாம். தனியே இலக்கியத்துறையில் மட்டுமன்றி பல சமூக மறுமலர்ச்சிப் பேராட்டங்களிலும் பங்கு பற்றியே ஜீவா இந்த நிலையை அடைந்துள்ளார். ஜீவாவின் படைப்புக்களையும், மல்லிகைச் சஞ்சிகையினையும் ஆய்வு செய்து பல பல்கலைக் கழக மாணவர்கள் ஆய்வுக் கட்டுரைகளை எழுதிப் பட்டங்களைப் பெற்றுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது. ஜீவாவின் பங்களிப்பினைச் சரியான முறையில் கணிப்பீடு செய்யத் தவறியதனாலோ அல்லது வேறு காரணங்களினாலோதான் ஜீவாவிற்கு கலாநிதிப் பட்டத்திற்குப் பதிலாக முதுகலை மாணிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இது யாழ் பல்கலைக் கழகம் இழைக்கும் முதலாவது தவறல்ல. இவ்வாறு உள்வாரி மாணவர்களாக கல்விப் பயின்ற பல்புல ஆளுமைமிக்க

எத்தனையோ மாணவர்கள் பல் கலைக் கழகப் பெருந்தகைகளால் கண்டுகொள்ளப்படவில்லை, அல்லது அடையாளம் காணப்பட்டும் தமது ஆளுமை பாதிக்கப் படலாம் என்ற நோக்கில் அங்கீகரிக்கப்படாமல் தூக்கி எறியப்பட்டுள்ளனர். அதே கதியே ஜீவாவின் விடயத்திலும் நடந்தேறியுள்ளது.

உண்மையில் பல்கலைக் கழகம் என்பது ஒரு சமுதாயச் சொத்தாகும். அது அங்கு கடமை புரியும் பேராசிரியர்களுக்கோ அல்லது விரிவுரையாளப் பெருந்தகைகளுக்கோ உரியதொரு தனியுடமையயல்ல. அப்படியான ஒரு மனநிலை மாற்றமடைய வேண்டும். பல்கலைக் கழகத்தில் தவறுகள் நடக்கும் போது அதனை சமூதாயத்தில் உள்ளவர்கள் தட்டிக் கேட்க வேண்டும் விமர்சிக்க வேண்டும், அப்போதுதான் நல்ல ஆளுமை கொண்ட ஒரு நல்ல பல்கலைக் கழகத்தைக் காணமுடியும்.

வழமையாகப் பல்கலைக் கழகத்தில் பயிலும் போது நடப்பவை தவறுகள் என்று தெரிந்திருந்தாலும் மாணவர்கள் பலர் அதனைத் தட்டிக் கேட்க முன்வருவதில்லை. தாம் 'அறுவைக்கு' உட்பட்டு 'கையில் வாங்க' வேண்டி வரும் என்பதே இதற்குக் காரணம். கையில் வாங்குதல் என்பது திட்டமிட்டே விரிவுரையாளர்களால் குறிக்கப்பட்ட பாடத்தில் சித்தியடையாமல் செய்தல் ஆகும். ஆனால் பல்கலைக் கழகத்தவரால் சிதைக்கப்பட்ட திறமையான மாணவர்கள் எங்கிருந்தாலும் தமது திறமையை நிரூபித்துக் கொண்டே இருக்கிறார்கள். அதே போல் ஜீவாவும் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்படாவிட்டாலும் கூட தமிழர்களாலும், ஏனைய இலக்கியவாதிகளாலும் அறியப்பட்டவராக, மதிக்கப்படுபவராக விளங்குகிறார்.

*தினகரன்*

*04 – 11 – 2001*

# யாழ் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு 'சாதி அடக்குமுறையின் உச்சக் கட்டம்'

*அ. இந்திரராசா*

தமிழ் சமுதாயத்தின் உயர் கல்வி நிறுவனமான யாழ் பல்கலைக் கழகம் சிறந்த தமிழ் இலக்கிய கர்த்தாவான டொமினிக் ஜீவாவை அவமதித்த செயல் சாதி அடக்கு முறையின் உச்சக் கட்டம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில், தாங்கள் செய்வது சரியா பிழையா என்பதைத் தீர்மானிக்க முடியாதவர்களல்லர். செனட்டிலும் கவுன்சிலிலும் இருப்பவர்கள்.

விஞ்ஞான ரீதியிலான விளக்கங்களுடன் விரிவுரையாற்றி பல்துறை விற்பனர்களை வெளிக் கொணரும் விவேகிகளுக்குத் தாங்கள் செய்வது என்ன என்பது தெரியாமலா போய்விடும்.

தமிழ் மக்களின் உயர்ந்த விழுமியங்களையும், பாரம்பரியமான பண்பாடுகளையும் பார்முழுதும் வளர்க்க வேண்டிய யாழ் பல்கலைக் கழகம் தமிழ் மக்களுக்கே ஓர் சாபக்கேடான சாதித் பாகுபாடு, ஒடுக்கு முறையை வளர்ப்பதில் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறது. இது தமிழ் கூறும் நல்லுலகம் வெட்கித் தலை குனியும் செயலாகும்.

ஓர் தொழிலதிபருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்க முடியுமென்றால் 'உலகம் அறிந்த இலக்கிய க்ர்த்தா'வுக்கு ஏன் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்க முடியாது? இதற்காக தொழிலதிபரைக் குறை கூறுகிறோமென்பதல்ல.

தமிழ் சமுதாயத்தில் சிறந்த யதார்த்த வாதியும் இலக்கியக் கர்த்தாவும், மூதறிஞருமான டொமினிக் ஜீவாவை அவமதித்த செயல் தமிழ் நெஞ்சங்களில் ஆறாதவடுக்களை ஏற்படுத்தி விட்டது.

அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக சிங்கள இன வெறியாளர்களால்

அடக்கி ஒடுக்கப் படும் தமிழ் இனம் தன் இன விடுதலைக்காக இரத்தம் சிந்தி உயிரைத் தியாகம் செய்து போராடுகின்ற இந்த வேளையிலும் கூட, சாதிப் பாகுபாடும் அடக்கு முறை மேலாதிக்கமும் தொடர்ந்தும் இருந்து கொண்டே வரவேண்டும் என்று கனவு காண்பவர்களின் இழிசெயலை நினைத்து தமிழ் அன்னை இரத்தக் கண்ணீர் வடிக்கின்றாள்.

தங்களின் பதவியும் அந்தஸ்தும் காப்பாற்றப் பட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக மேல் மட்டத்தில் உள்ளவர்களின் காலைக் கையைப் பிடித்து காரியமாற்றும் இவர்கள் தாங்கள் உயர்ந்தவர்கள்(?) என்பதைச் சாதிப்பதற்காக நினைத்ததை எல்லாம் செய்து முடிக்கின்றார்கள்.

இதே உயர்ந்தவர்கள் தங்களின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக, எழுபதாயிரத்திற்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்களையும், 17 ஆயிரத்திற்கும் அதிகமான போராளிகளையும் இழந்து தன் இனத்தின் விடியலுக்காக தொடர்ந்தும் போராடும் தமிழ் இனத்தின் உரிமைப் போராட்டத்திற்கே குழி பறிக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

இத்தகையவர்கள் ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ள வேண்டும். எந்த அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிராகத் தன் உயிரைத் துச்சமென நினைத்துப் போராடும் தமிழ் இனம், தங்கள் ஆதிக்க வெறியும் சாதித்திமிரும் இந்த மண்ணில் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்ற முனைப்போடு செயல்படும் சாதிவெறியர்களுக்குக் குடை, கொடி, ஆலவட்டம் பிடிக்குமா?

'சமநீதியோடு தான் சார்ந்த சமூகத்திற்கு சேவை புரிய வேண்டிய ஓர் பல்கலைக் கழகம் அநீதி விளைவிக்கின்றது' என்றால் தமிழ் இனம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய வரலாற்றுத் தேவை உருவாகி விட்டதென்பதை சமூக நலனில் அக்கறை கொண்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

*சுடர் ஒளி*

*11-11-2001*

# முற்றுந் தன்னை அர்ப்பணித்த மாமனிதன் ஜீவாவே

'ஜின்னாஹ்'

*கற்றதனால் கலாநிதியாய்க் கல்வியுயர்மை பெற்றவர்*
*பொற்புறு பேர் தமிழ்மொழிக்காம் பெருமை கொள்ளல்சாலுமே*
*முற்றுந்தம்மை மொழிக்களித்து மேன்மை காக்கும் பேர்களும்*
*கற்றவரால் போற்றிக் 'கலா நிதி' யளித்தல் மரபதாம்*

*மரபுபேணி யாழ். வளாகம் 'மல்லிகையின்' தலைவனை*
*சிரமுயர்த்தல் போலச் செய்த சீரழிவை நினைந்திடில்*
*அருகதைக்குத் தாழவொரு அவமதிப்பைச் செய்ததாய்*
*கருதமனம் செய்கிறதே காரணந்தான் என்னவோ!*

*தகுதிபேணின்ஜீவாவுக்கென் தகுதியில்லைத் தமிழினில்*
*மிகுதியாகப் படைத்தளித்தோன் மூபத்தாறு ஆண்டுகள்*
*செகம்புகழ 'மல்லிகை'யைத் தொடர்ந்து தந்து வென்றவர்*
*மிகையவர்தம் பணிகள் 'கலா நிதி'க்குடைமை யானவர்*

*வளர்ச்சியுறா மனங்களின்னும் வகைப்படுத்த மனிதரை*
*இழித்துயர்த்தி பாகுகாட்டும் ஈனச்செய்கை போலுமே*
*பிழைத்தநீதிக் குடந்தையானார் பல்கலையாழ் பதியிலே*
*அளித்ததுமேன் 'முதுகலை மணி'யெனுமோர் பட்டமே*

*தினகரன்*
*11-11-2001*

# முதுகலை மாணிப் பட்டமா? கலாநிதிப் பட்டமா?

*குழந்தை வடிவேலன்*

ஜீ ஜீவாவின் இலக்கியப் பணியை கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமானது கௌரவ முதுகலைமாணிப் பட்டத்தினை வழங்க முன் வந்திருந்தது. இதனை ஜீவா ஏற்க மறுத்திருந்தார்.

ஜீவாவின் நிலைப்பாட்டினை ஆதரித்தும் நிராகரித்தும் பல்வேறு கருத்துக்கள் பல்வேறு ஊடகங்களிலும் கௌரவ கலாநிதிப் பட்டம் எத்தகையவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது தெளிவுபடுத்தப்படும்போது ஜீவாவிற்கு முதுகலை மாணிப் பட்டம் ஏன் வழங்கப்பட்டது என்பது தெளிவுபடுத்தப்படும்.

28-10-2001 அன்றைய வீரகேசரி வாரவெளியீட்டில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் 'மல்லிகை ஜீவாவின் மறு புரட்சி' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் அறிவுலகோர் சார்பில் பல்கலைக் கழகம் நோக்கிப் பல கேள்விக் கணைகளைத் தொடுத்திருந்தார்.

உண்மையில் அக்கேள்விகள் சமூகத்தில் உள்ள பல்வேறுபட்டவர்களினது ஆதங்கத்தினைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன. பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் சிலரின் செயற்பாடுகளை கண்டித்துக் குரல் எழுப்பி அவர்களின் எதிர்ப்பினை சந்தித்தாலும் கொடுமை கண்டு பொங்கும் நெஞ்சம் கொண்ட ஜெயராஜ் அவர்கள் அறிவுலகோர் சார்பில் தொடுத்த அக்கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியது யார் பொறுப்பு?

பல்கலைக் கழகத்தவர்கள் உள்வாரி மாணவர்களுக்குப் பல்வேறு அநீதிகளை இழைத்தாலும் அது அம்மாணவர்களை விட வெளியாருக்குத் தெரிய வரநியாயமில்லை. ஆனால் ஜீவாவின் விடயத்தில் சமூகம் விழிப்படைந்துள்ளமையும் பல்கலைக் கழக பெருந்தகைகளை நோக்கிக் கேள்விகள் தொடுக்கத் துணிந்துள்ளமையும் பாராட்டப் பட வேண்டிய

விடயமாகும்.

ஒரு நிறுவனம் தொடர்பாக நிறுவனத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எழும் பிரச்சினைகளை கையாள்வது அந்த நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும். இதனை ஆங்கிலத்தில் Accountability என்று சொல்வார்கள்.

அந்த வகையில் ஜீவாவின் சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பாக எழுப்பப் படும் கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தரையே சாரும். துணைவேந்தர் மௌனம் சாதிப்பாராயின் ஜீவாவின் விடயத்தை மக்கள் மத்தியில் கொண்டு வந்துள்ள ஊடகத்துறையினரே பல்கலைக் கழகத்தவரிடமிருந்து உரிய பதிலைப் பெற்று மக்கள் முன் கொண்டுவர வேண்டிய கடப்பாடு உடையவர்கள்.

ஜீவாவின் சமகாலத்தவர்கள் மார்க்ஸிய சிந்தனை கொண்டவர்கள். ஈழத்தின் ஏன் தமிழ் உலகின் தலை சிறந்த இலக்கிய விமர்சகர்கள் என்று போற்றப்படுவோர் கூட - இலக்கியத் துறையினரின் இன்றைய முக்கிய பிரச்சினையாக மாறியுள்ள ஜீவா பல்கலைக் கழக விடயத்தில் ஏன் மௌனம் காட்டுகின்றனர்? நடுநிலை நின்று தமது நிலைப் பாட்டினைத் தெளிவுபடுத்த ஏன் தயங்குகின்றனர் என்ற நியாயமான கேள்விகளும் எழுகின்றன.

மற்றும் ஏனைய கலை இலக்கிய அமைப்புக்களில் உள்ள பெருந்தகைகளுக்கு ஜெயராஜ் கேட்டது போல் ஏன் தமது கருத்துக்களை பல்கலைக் கழகத்தினை நோக்கி அல்லது, ஜீவாவை நோக்கிக் கூறமுடியவில்லை.

உள்வாரி மாணவர்கள் பழிவாங்கப்படும் போது அதனை எதிர்த்து நிற்கும் மாணவர்களின் விடயத்தில் தமது கருத்துக்களை நியாயப் படுத்தல் அல்லது விடைகூறாது மௌனம் காட்டல் திறமையாகச் சித்தியடையும் மாணவர்களுக்குப் பல்கலைக் கழகத்தில் நியமனங்கள் வழங்கப்படும் போது இழைக்கப்பட்ட அநீதிகளைச் சுட்டிக் காட்டி முறைப்பாடு செய்த எத்தனையோ மாணவர்களுக்கு விடையளிக்காது விடல் போன்று சமூகத்தில் உள்ளவர்கள் விடயத்திலும் யாழ். பல்கலைக் கழகம் செயல்படுவதை அங்கீகரிக்கலாமா?

ஜீவாவின் விடையத்திலிருந்து தொடங்கியுள்ள சமூக விழிப்பணர்வு சிந்தனையை நல்ல முறையில் பயன்படுத்திச் சமூகத்தினை வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஊடகத்துறையினரையே சாரும்.

*வீரகேசரி*

*11-11-2001*

# முதுமாணிப் பட்டத்துக்கு ஜீவா தகுதியானவரா?

*சி. சிவபாலன்*

டொமினிக் ஜீவா தப்புத் தப்பாகக் கதைக்கிறார். யாழ் பல்கலைக் கழகம் அவருக்கு வழங்க இருந்தது இலக்கியத்திற்கான முதுமாணி (M.Lit) பட்டமே தவிர முதுகலை மாணி (M. A.) பட்டம் அல்லவே?

முதுமாணிப் பட்டம் வழங்க முயன்றதை அவமதிப்பாக எப்படிக் கொள்ளலாம்? வேண்டுமென்றால், இவரை விடவும் தகுதி வாய்ந்த எஸ். பொன்னுத்துரை, சொக்கன் போன்றவர்கள் தமக்குக் கௌரவப் பட்டம் வழங்கப் படாததை அவமதிப்பாகச் சொல்லலாம்.

இலக்கிய கலாநிதிப் பட்டமே தனக்கு வேண்டுமென்று 'தன்வாயாலேயே' சொல்ல ஜீவா வெட்கப்படவில்லை!

'ஈழத்து மார்க்சிம் கார்க்கி'

'ஈழத்துப் பாரதி' என்றெல்லாம் தன்னை நினைக்கும் பிரகிருதியிடம்(ஆதாரம்: பழைய மல்லிகை இதழ்கள்) வெட்கத்தையோ, தன்னடக்கத்தையோ எதிர்ப்பாக்க முடியாதுதான்!

முதுமாணிப் பட்டத்திற்கு (M. Lit) டொமினிக் ஜீவா தகுதியானவரா?

முதலாவது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இவரது 'ரிஷி மூலம்' இதோ!

'சென்னையிலிருந்து மீண்டதும், சில ஏதுக்களிலே தொற்றி, ஈராண்டு காலம் அஞ்ஞாத வாசம் இயற்றினான். அப்பொழுது அவன் சிலருடைய இயற் பெயர்களையே புனைப் பெயர்களாகக் கொண்டு கரந்துரைந்தான். அவனுடைய அக்காலப் படைப்புக்களைத் தமது சுய விந்துச் செழுமையென அச்சிலர் உரிமை கொண்டாடினர். அவ்வாறு அவனுடைய படைப்புக்களைத் தன்னுடைய பெயரில் வெயிட்ட வேறொருவன் புனைக்கதைக்கான

முதலாவது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற 'கூத்தும்' நடந்தேறியது.'

எஸ். பொன்னுத்துரை (தனது 'Ã' சிறுகதைத் தொகுதி முன்னுரையில் - 1966)

ii) இவர் சிறந்ததோர் சஞ்சிகை ஆசிரியரா? இதுவரை வெளிவந்துள்ள 274 மல்லிகை இதழ்களிலும் இடம்பெற்ற ஆக்கங்களில் தரமானவற்றின் விகிதாசாரத்தை விட பல பத்து மடங்கானவை தரங்குன்றியவையே.

நல்லவற்றைப் பிரித்து இனங்காணும் இரசனைத் தேர்ச்சியும், கூரிய நோக்கும் இவரிடம் இல்லவே இல்லை. இதைத் தவிர, வியாபார நோக்கையே' அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதால் ஏற்படும் 'குளறுபடிகள்' ஏராளம், ஏராளம்! உதாரணம்: மாஸ்கோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றபோது, மல்லிகையில் 'ஒலிம்பிக் சிறப்பிதழ்' வெளியிட்டுள்ளார்! இலக்கியத்திற்கும் விளையாட்டிற்கும் என்ன சம்பந்தம்? எவ்வளவு சிறுபிள்ளைத் தனம்!

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அமைக்கப் பட வேண்டுமென, 1960-களில் குழு அமைத்து டொமினிக் ஜீவா போராடினார் என்பது பெரிய 'டுப்'.

அக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகமொன்று (அதுவும் இந்துப் பல்கலைக் கழகம்) அமைக்கப் பட வேண்டுமெனக் கோரி வந்தவர் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் (சீனியர்) தான்.

ஆனால் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறக் கூடாது என 1974-ல் 'பெட்டிசம்' போட்ட குழுவில் இவரும் இணைந்திருந்தார் என்பதே வரலாறு.

யாழ் பல்கலைக் கழகத்தில் 'தில்லு முல்லுகள்' நிகழ்வதாகச் சொல்லும் டொமினிக் ஜீவாவுக்குப் பின்னால் விரிவுரையாளர் பதவிக்குப் 'பறதிப்பட்ட' அந்த 'புவியியல் துறை மூத்த அறிஞரே' நிற்பதாக இங்கு கதை அடிபடுகிறது. அவர் பல்கலைக் கழக நிர்வாகத்துறையில் இருந்தபோது புரிந்த ஊழல்களை விவரித்தால் 'காட்டாறாய்ப்' பெருகும்!

*சுடர் ஒளி*

*- 18 – 11 – 2001*

# ஜீவாவுக்குக் கௌரவப் பட்டம்~ பல்கலைக் கழகம் விட்ட பெரும் தவறு

***வவுனியா: சுபாஷினி***

இலங்கையில் எத்தனையோ அறிஞர்கள் இருக்க - எந்தத் தகுதியுமில்லாத ஜீவாவுக்குப் பட்டம் வழங்க முன் வந்ததே - யாழ் பல்கலைக் கழகம் செய்த மாபெரும் தவறாகும்.

யாருக்கு எந்தப் பட்டத்தை வழங்க வேண்டும் என்று தீர்மானிப்பது அதனை வழங்கும் நிறுவனந்தான். பட்டம், பெற விரும்புபவர் தீர்மானிக்கும் விஷயம் அல்ல.

எனக்கு இந்தப் பட்டம் தான் வேண்டும், அது வேண்டாம் என்று அடம் பிடிப்பதே அவரது முதிர்ச்சியின்மையையும் சின்னத் தனத்தையும் காட்டுகின்றன.

அவர் வெளியிடும் 'மல்லிகை' அப்படியொரு சாதனையையும் புரிந்துவிடவில்லை. பல்கலைக் கழகப் பேராசிரியர்களதும், விரிவுரையாளர்களதும் கட்டுரைகளைப் பிரசுரிப்பது மல்லிகைக்கு விளம்பரம் தேடத்தான். மல்லிகை விற்பனை மூலம் அவர் சீவியம் நடத்தினார். அவ்வளவு தான்.

மல்லிகை எந்தவொரு புதிய எழுத்தாளரையும் உருவாக்கவில்லை. மல்லிகைக்கு வரும் கட்டுரைகளின் தாரதம்மியத்தை எடை போடும் ஆற்றலும் அறிவும் அவருக்கு இல்லாததால் ஏற்கெனவே பிரபலமானவர்களதும், மல்லிகையை அச்சிடக் கடதாசி வாங்கிக் கொடுப்பவர்களதும், ஆக்கங்களைப் பிரசுரித்தார்.

ஜீவா இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்துக்கு பல்கலைக் கழகமே வந்திருக்காது என்று அவரின் வால்பிடிகள் வாதிடுகின்றனர். கல்விமான்களதும்

அன்றைய அமைச்சர் செல்லையா குமார சூரியரதும் பங்களிப்பை அவர்கள் அறியாதவர்கள் போலும்.

ஜீவாவுக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கவில்லை என்பதற்காகவே கம்பவாரிதி பல்கலைக் கழகத்தின் மேல் சேறு பூசுகின்றார். உண்மையில் பல்கலைக் கழக நிர்வாகத்தில் குறைபாடு இருந்திருந்தால் அதனை முன்பே அவர் சுட்டிக் காட்டியிருக்கலாம் தானே.

'எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம்' என்ற முற்போக்குக் கூடாரத்தைச் சேர்ந்தவர்கள் சாதியைக் காட்டிப் பட்டம் பெற விழைவது சந்தர்ப்பவாதம்.

யாழ்ப்பாணத்துக்கு வெளியேயும் தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்கள். முல்லைமணி, அகளங்கன் போன்றவர்களையும் கௌரவிக்கப் பல்கலைக் கழகம் முன் வர வேண்டும்.

யாழ்ப்பாணத்திலும் கூட, க.சி. குலரத்தினம், த. சண்முகசுந்தரம், சொக்கன், மகாகவி, டானியல் போன்றோருக்கும் கௌரவப் பட்டங்கள் வழங்கலாந்தானே!

*சுடர் ஒளி*

*25-11-2001.*

# டொமினிக் ஜீவாவுக்கு ஒரு கடிதம்

*கௌரி*

அன்புள்ள ஜீவா! நீங்கள் ஒரு மூத்த எழுத்தாளர், பத்திரிகையாளர், வெளியீட்டாளர் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

'ஈழத்து மார்க்சீம் கோர்க்கி', 'ஈழத்து பாரதி' என்றெல்லாம் தங்களைத் தாங்களே பெருமைப் படக் கூறிக் கொள்வதும் நீங்கள் தான்.

தங்களின் தகுதியை அறிந்துதான் தங்களை விட, பல அறிவிலும், ஆற்றலிலும் முதுமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்க இருந்தது.

தங்களின் சுய இலாபத்திற்காக..... உங்களுக்கு ஒரு கலாநிதிப் பட்டம் வேண்டும் என்பதற்காக........ முதுமாணிப் பட்டம் ஒரு கல்விசார் பட்டம் என்று போலிக் காரணங்களைக் கூறிப் பல்கலைக் கழகம் கட்டாயம் ஒரு எழுத்தாளனுக்குப் பட்டம் கொடுக்க வேண்டும் என்ற நியதியில்லாத வேளையிலும், ஒரு எழுத்தாளனைக் கௌரவிப்பதற்காகப் பட்டம் கொடுக்க முயன்ற குழுவினருக்கு முகத்தில் கரியைப் பூசினீர்கள்.

பட்டம் வேண்டாமென்று கூறுவது, பட்டத்தைக் கிழித்து எறிவது உங்களின் விருப்பம்.

செய்வதையும் செய்து விட்டு, யாழ் பல்கலைக் கழகம் எழுத்தாளர் சமூகத்திற்கே துரோகம் செய்து விட்டது..... தமிழுலகிற்கே துரோகம் இழைத்து விட்டது... என்று அறிக்கைகளும், பேட்டிகளும் கொடுப்பதனை எழுத்தாளர்களாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். வெட்கப்படுகின்றோம்.

எழுத்தாளர்களுக்காகக் குரல் கொடுப்பவன் என்று கூறும் ஜீவா, நெஞ்சில் கையை வைத்து மனச்சாட்சியைக் கொஞ்சம் தொட்டுப் பாருங்கள்.

அரச இலக்கிய நூல் தெரிவில் ஊழல்கள் இடம் பெற்றுப் பல எழுத்தாளர்கள் பாதிக்கப்பட்ட வேளையில் - இந்த ஊழல்கள் பற்றிய

கட்டுரைகள் பத்திரிகையில் பிரசுரமான வேளையில் - கலைக்குழுவில் எழுத்தாளர்களின் சார்பில் இருவரில் ஒருவராக இருக்கும் நீங்கள் கல்லின் மேல்........ பூனையாக இருப்பது நியாயந்தானா!

நீங்கள் உடனே குழுவிலிருந்து இராஜினாமாச் செய்து, அநீதியை வெளி உலகிற்குச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். அது உங்களால் முடியாது! நீங்கள் ஒரு விலாங்கு.

உங்களுக்குக் கலாநிதிப் பட்டம் கிடைக்கவில்லை என்பதற்காகப் பட்டத்தை வாங்க மறுத்து அறிக்கை விட்டு ஆவேசக் குரல் கொடுத்த உங்களால் ஏன் இதனைச் செய்ய முடியாமல் போனது?

இதில் உங்களுக்கு ஒரு துளியேனும் இலாபம் இல்லையே!

பேராசிரியர்களான தில்லைநாதன், நுஃமான், மௌனகுரு, சித்திரலேகா, நாகேஸ்வரன்..... போன்றோரை வெறுத்துக் கொண்டு அல்லது பகைத்துக் கொண்டு உங்களால் இலக்கிய உலகில் வாழ முடியாது என்பதுதான் காரணம்.

அது ஒரு புறமிருக்க......

தங்களுடைய மாதாந்தச் சஞ்சிகையில் மாதம் தோறும் ஒரு எழுத்தாளனுடைய அட்டைப் படத்தைப் போடும் நீங்கள் உங்களுடைய மண்ணைச் சேர்ந்த அவலங்களின் உண்மைகளை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டிய பத்திரிகையாளன், எழுத்தாளன் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு நிறைவெய்திய வேளையில் எத்தனை தடவைகள் அவருடைய படத்தை அட்டையாக்கிக் கட்டுரை பிரசுரித்தீர்கள்? அது உங்களால் முடியாது! நீங்கள் ஒரு விலாங்கு. அது போகட்டும்!

மூத்த பத்திரிகையாளர் பி. மாணிக்கவாசகம் கைது செய்யப்பட்டு, வெஞ்சிறையில் வாடும் போது உங்களுடைய பேனா எங்கே போனது?

கடந்த மாதம் வடக்குக் கிழக்கு மாகாணக் கலாசார அமைச்சினால் வழங்கப்படவிருந்த பத்திரிகையாளர் மாணிக்கவாசகத்திற்கான ஆளுனர் விருது இரத்துச் செய்யப்பட்ட போது..... எழுத்தாளர் ஜீ. நடேசனுக்கு இலக்கிய நூல் பரிசு மறுக்கப்பட்ட போது..... உங்களுடைய ஆவேசக் குரல் எங்கே.......? அது உங்களால் முடியாது! நீங்கள் ஒரு விலாங்கு.

இனியாவது உங்களுடைய சுய இலாபங்களுக்காக எழுத்தாளர்களைப் பயன்படத்தாதீர்கள். எழுத்தாளர்களின் மன உணர்வுகளை மதிக்காத உங்களுக்குப் பட்டமே இல்லாமல் செய்தது இறைவனின் தீர்ப்புத்தான்!

*ஆதவன் – 02–11–2001*

# ஒரு சிரித்திரனுக்குப் பிறகு.....?

*கலைவாதி கலீல்*

எமது நாட்டில் உள்ள மிகப் பழைய சஞ்சிகை 'மல்லிகை' ஆகும். பல சஞ்சிகைகள் காலத்துக்குக் காலம் தோன்றி மங்கி மடிந்து மறைந்துவிட்டன.

'மல்லிகை' இன்றும் நிலைத்து நிற்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. மல்லிகைக்கென்றே ஒரு வாசகர் வட்டம் இருக்கிறது. அது முதற்காரணம். வாசகர் வட்டம் மட்டும் இருந்துவிட்டால் போதுமா? மல்லிகையைத் தயாரித்து அச்சிட்டு, வெளிக் கொணர வேண்டும்! அதற்கான 'ஆட்பலம்' வேண்டுமே! இருக்கிறது. 'டொமினிக் ஜீவா' என்ற 'வன் மேன் ஆர்மி'ப் பலம் இருக்கிறது. எனவே மல்லிகை மாதாமாதம் நின்று விடாமல் வந்து கொண்டிருக்கிறது. அத்தோடுமட்டுமல்ல விசேட மலர்கள், சிறப்பு மலர்கள் வெளிநாட்டு மலர்கள் என்று வேறு வந்து கொண்டிருக்கின்றன. மல்லிகைப் பந்தலிலிருந்து நூல்கள்-தொகுதிகளும் கூட.

தனக்குப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட 'எம். ஏ.' 'கல்விக் கலாநிதிப் பட்டத்தைக் கூட, 'தனக்குப் பொருத்தப்பாடாயில்லை' என்ற காரணத்தால் உதறித் தள்ளிய டொமினிக் ஜீவா பழகுவதற்கு இனியவர். ஒரு குழந்தையைப் போல. அதனால் தான் திருவாளர் டொமினிக் ஜீவாவைப் பாராளுமன்றத்தில் புகழ்ந்து தள்ளியிருக்கிறார், ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், அவர் வேறு யாருமல்ல, அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் தான். அந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். 'கலைஞர்களின் காவலன்' என்று விதந்துரைக்கப்படும் அஸ்வரின் 'புகழுரை'மல்லிகை ஜீவாவைப் புளகாங்கிதமடைய வைத்திருக்கிறது. கண்களில் கண்ணீரை மல்க

வைத்திருக்கிறது. மெய் மறக்க வைத்திருக்கிறது. பாராளுமன்றத்திலே பிரஸ்தாபிக்கப்பட்ட ஓர் எழுத்தாளராகி விட்டார், டொமினிக் ஜீவா.

அத்தகைய டொமினிக் ஜீவாவின் மல்லிகை தோன்றிய காலகட்டத்தில் (சற்றேறக்குறைய) தோன்றிய ஒரு மாதாந்த சஞ்சிகையே சிரித்திரன். புதியவர்களுக்குத் தெரியாது. பழையவர்கள் மறந்திருப்பர்.)

சிவஞானசுந்தரம் என்ற, ஒரு வரைபடக் கலைஞர் உருவாக்கிய பத்திரிகை தான் சிரித்திரன். இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆனால் பத்திரிகை உருவான காலத்தில் கொழும்பில் வாழ்ந்து வந்தார். அரச மொழிக் கொள்கை காரணமாக அரச பதவியைத் துறந்தவர். இவரது பத்திரிகை வளர்ச்சியில் உற்ற, துணையாகவும், ஊன்று கோலாகவும் விளங்கியவர் இவரது துணைவியாரே.

நீண்ட காலமாகப் பத்திரிகை நடத்தி வந்தார். இறப்பதற்குச் சிறிது காலத்துக்கு முன்னர் பத்திரிகை நின்று விட்டது. காரணம் இவரது கடுமையான சுகவீனமே. அத்தோடு யாழ்ப்பாணத்தில் கலகமும் போராட்டமும் ஆரம்பமாகிவிட்டன. இவரது இறப்புக் காலத்தில் போராட்டம் உச்சக் கட்டத்தில் இருந்தது.

சிரித்திரன் சஞ்சிகையின் தனித்துவம் என்னவென்றால், அது முழுக்க முழுக்க நகைச்சுவை இதழாக வெளிவந்தமையே. சிவஞான சுந்தரம் ஒரு வரைபடக் கலைஞராக - அத்தோடு ஒரு கார்ட்டுனிஸ்டாகவும் இருந்தமையால் இத்தகைய ஒரு நகைச்சுவைப் பத்திரிகையை நடாத்துவது அவருக்கு இலகுவாக இருந்தது. சிரித்திரனில் வருகின்ற எல்லாச் சித்திரங்களையும் இவரே வரைந்து தள்ளினார். தனது பெயரைச் சுருக்கி வைத்துக் கொண்டார். அந்தப் பெயரிலேயே புகழ் பெற்ற கேலிச் சித்திரத் தொடர்களை வரைந்தார். சவாரித்தம்பர், மைனர் மச்சான், போன்றவை இவர் உருவாக்கிய கேலிச் சித்திரத் தொடர்களாகும். சவாரித் தம்பர் வருடக் கணக்கில் தொடர்ச்சியாக, 'வீரகேசரி' நாளேட்டில் வெளியாகியது. அவ்வாறே 'மைனர் மச்சான்' மித்திரன் நாளேட்டில் வெளியாகிக் கொண்டிருந்தது. இவை இரண்டும் தமிழ் கூறும் நல்லுலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இவை வெறும் கேலிக்கும் கிண்டலுக்கும் உரிய பாத்திரங்கள் மட்டும் அல்ல. பெரும் சிந்தனைக்கும் உரிய பாத்திரங்களாகும். தமிழர்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் பழக்க வழக்கங்களையும் நவீன போக்குகளையும் நாசூக்காகக் கிண்டல் செய்வதில் வல்லவர் சுந்தர். கிண்டல் செய்வதோடு விட்டு விடாமல் பெரும் போதனை ஒன்றையே தனது தொடர் மூலம் கூறி விடுவார். சவாரித் தம்பரோடு

சேர்ந்து வருகின்ற எத்தனையோ பாத்திரங்கள், தங்களது உரையாடல் மூலம் பெரும் சாதனைகளை நிகழ்த்தின. அவ்வாறே 'மிஸ்டர் அண்ட் மிஸிஸ் டாமோடிரன்' என்ற ஜோடியை உருவாக்கித் தமிழறியா அப்பெருமகனாரின் வாய்மொழி மூலம் (கொச்சைத் தமிழ் - கொஞ்சும் தமிழ்) தமிழ் கூறும் நல்லுலகிற்கு எவ்வளவோ விவகாரங்களைக் கூறி வைத்தார்.

சுந்தர் இறந்த பொழுது, ஏன் இறப்பதற்கு முன்னரே சுந்தருக்குப் பின்னர் யார்? என்ற ஒரு கேள்வி எழுந்தது. அது முற்றிலும் நிஜமாகிவிட்டது. சுந்தருக்குப் பின்னர் யார்?

உண்மையில் சுந்தருக்குப் பின்னர் எவருமே இல்லைத்தான். சுந்தர் உருவாக்கியதுபோல் ஒரு நகைச்சுவைத் தொடரை இப்போது யார் உருவாக்கியிருக்கிறார்கள். அங்கொன்றும் இங்கொன்றும் சிற்சில சித்திரக் கிண்டல்கள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளியாகத்தான் செய்கின்றன. ஆனால், சுந்தர் சாதித்ததைப் போல் குறிப்பிட்ட சில பாத்திரப்படைப்புக்கள் மூலம், ஒவ்வொரு நாளும் எந்தவித களைப்பும் சோர்வுமின்றித் தமிழ் மக்கள் அனைவரையும் சிந்தனை மயப்படுத்தியவர் யார்?

ஒரு சவாரித் தம்பரையோ, ஒரு மைனர் மச்சானையோ உருவாக்கி இந்த நாட்டில் நடமாடவிட்டவர்கள் வேறு யாவர்?

நமது நாட்டில் சித்திரக்காரர்களுக்குப் பஞ்சம். அதிலும் கேலிச்சிந்திரக்காரர்கள் என்றால் கேட்கவே வேண்டாம். பஞ்சமோ பஞ்சம்! மகா பஞ்சம்.

அவ்வாறு இருக்கையில் நம் மத்தியில் இருந்த ஒரேயொரு கேலிச்சித்திரக்காரரையும் இழந்து விட்டோம். சுந்தர் வெறுமனே கேலிச் சித்திரக்காரர் மட்டுமல்ல, Caricatcherist எனப்படும், கூடாரர்த்த சித்திரக்காரரும் கூட, இதனை மறந்து விடக் கூடாது நாம். அத்தோடு அவர் நல்ல ஓர் எழுத்தாளர் என்பதையும் மறுத்து விடுவதற்கில்லை. முற்போக்குப் பாசறையில் நின்று அவர் ஆதரித்தார். அவர்களது ஆக்கங்களையே பிரசுரித்தார். புதுக் கவிதைக்குப் பலத்த எதிர்ப்பு நிலவிய காலத்திலேயே புதுக் கவிதையை வளர்த்தெடுப்பதில் கணிசமான பங்கு வகித்தார். இன்றைய பிரபலமான எழுத்தாளர்களும் புதுக் கவிஞர்களும் புதுமைக் கவிஞர்களும் அவர் காலத்தில் உருவானவர்களே! ஆம் சிரித்திரனில் எழுதி வளர்ந்தவர்களே.

முற்போக்காளர்கள், புதிய சிந்தனாவதிகள், நகைச்சுவை உணர்வு

மிக்கோர், புதுக்கவிதை படைப்போர், கருத்தியல் கட்டுரை வடிப்போர் போன்ற புத்துலகச் சிற்பிகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தார் சுந்தர்.

நான் இப்பத்தியை எழுதுவதன் நோக்கம் தமிழர்களுக்கு இரண்டு சஞ்சிகைகள் (கண்கள்) இருந்தன. அவற்றுள் ஒன்று - சிரித்திரன் செயலிழந்து விட்டது. மீண்டும் அது தோன்ற வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டவே! சிரித்திரனின் நிலை மல்லிகைக்கும் வந்துவிடக் கூடாது. ஜீவாவுக்குப் பிறகும் மல்லிகை பூக்கவேண்டும் என்ற சிந்தனை மல்லிகை எழுத்தாளர்கள், வாசகர்கள் நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டும். சிரித்திரனை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும்.

சிரித்திரனில் எழுதியவர்கள், சிரித்திரன் மீது அதீதப் பற்றுக் கொண்டவர்கள் சிலர் ஒருங்கிணைந்து 'சுவைத்திரள்' என்ற பெயரில் ஒரு மாசிகையை வெளிக் கொணரத்தான் செய்தார்கள். அது சிரித்திரனின் தரத்தில் இல்லாவிட்டலும் ஓரளவு, நகைச்சுவைச் சஞ்சிகையில்லாக் குறையை ஈடுகட்டியதென்பது மிகையல்ல. தற்போது சுவைத்திரளும் நின்று விட்டது. இப்போது நாம் எதிர்பார்ப்பதெல்லாம் இதுதான் மற்றொரு சிரித்திரன் உருவாக வேண்டும்!

*நவமணி*

*25 – 11 – 01*

# ஜீவாவின் செருக்கு, பட்டத்தையே தூக்கி எறிய வைத்துவிட்டது.

*–தௌரி*

ஈழத்திலே சொக்கன், அகளங்கன், செங்கை ஆழியான், கே. ஆர். டேவிட், முல்லைமணி, தாமரைச் செல்வி, அருள் செல்வநாயகம், தெளிவத்தை ஜோசேப், புலவர் மணி செரிப்தீன், சில்லையூர் செல்வராஜன், சுபைர் இளங்கீரன் போன்ற தமிழறிஞர்கள் இருக்கும் பொழுது கௌரவப் பட்டத்துக்காக யாழ். பல்கலைக் கழகம் டொமினிக் ஜீவாவைத் தெரிவு செய்தது மடைத்தனம.

அப்படியிருந்தும் அந்தப் பட்டத்தை ஏற்க மறுத்தது ஜீவா விட்ட மகா மடைத்தனம்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் கடந்த வருடம் 200, 300 பக்கங்களைக் கொண்ட 120 நூல்களை எழுதிய செல்வராஜ கோபாலுக்குத்தான் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது என்பதனை ஜீவா அறிவாரா?

எமது விடுதலைப் போராட்டத்தில் சாதி ஒழிப்பும் ஓர் அங்கம். அதனால் சாதி ஒழிப்புக்காகவும் போராடி வருகின்றது. இந்த நிலையில் ஜீவா எதற்கெடுத்தாலும் கூட்டத்திலும் அறிக்கையிலும் சாதியைப் பயன் படுத்தித் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்வது வேதனைப் படவைக்கிறது. பேராட்டத்தைப் பின்னடையச் செய்கிறது.

மேலும், இச் செய்கையானது மறைந்து கொண்டு வரும் சாதிப் பிரச்சினையைக் கூட்டுமேயொழியக் குறைக்காது.

பல்கலைக் கழகம், சாதிக்காக ஜீவாவுக்குக் கலாநிதிப் பட்டம் கொடுக்கவில்லை என்று கூறுவது முற்றாக நிராகரிக்கப் பட வேண்டியது. இது ஒரு குழந்தைப் பிள்ளைத் தனமான பேச்சு.

ஏனெனில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் எத்தனை இழிசனர்கள் பேராசிரியர்களாகவும் கடமை புரிகின்றார்கள் என்பது ஜீவாவுக்குத் தெரியாதா என்ன! அவர்கள் இழிசனர்கள் என்பதற்காகப் பல்கலைக் கழகம் பட்டம் கொடுக்காமல் விடவில்லையே! வறுமைக் கோட்டில் வாழும் எழுத்தாளர்கள் மல்லிகைக்காக தபாலட்டைகளில் கவிதை எழுதி அனுப்பினால், மல்லிகையை அவமதிப்பதாகக் கூறி, அந்தக் கவிதைகளையே கிழித்து எறியும் ஜீவாவின் செருக்கு-

ஆரம்ப எழுத்தாளர் அல்லது சிறிய எழுத்தாளர்கள் சந்திப்பதற்காக வாசல் படி தேடிச் செல்லும் வேளைகளில், இப்பொழுது சந்திக்க முடியாது என்று எழுத்தாளர்களையே எடுத்து எறியும் ஜீவாவின் செருக்கு-

பல்கலைக் கழகப் பேராசிரியர்களாலும் கலாநிதிகளாலும் மல்லிகைக்கு எழுதப் படும் கட்டுரைகளில் பெயர்களை மட்டுமே பிரசுரித்து பட்டங்களைத் தூக்கி எறியும் ஜீவாவின் செருக்கு - இன்று கௌரவப் பட்டத்தையே தூக்கி எறிய வைத்துவிட்டது. வேறொன்றுமில்லை.

பல்கலைக் கழகங்களே ஒரு ஜீவாவுக்காக உங்கள் பணியை நிறுத்தி விடாதீர்கள். தொடருங்கள் பணியை.

*சுடர் ஒளி.*
*02 – 12 – 2001*

# ஜீவா கொள்கையுடன் வாழ்பவர் தன் நிலை மாறாதவர்

*காரை. சி. சிவா*

04-11-01 திகதிய சுடர் ஒளியில் வெளிவந்த கட்டுரையில் 'கட்டுரையாளரின் நோக்கம் நியாயம் கவிழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்வது தவிர, வேறொன்றுமில்லை' என்று குறிப்பிடப் பட்டிருந்தது. நானும் அவரின் நோக்கத்தையே கொண்டு கீழ்க்காணும் விடயங்களை எழுதுகிறேன்.

பட்டம் தானே தேடி வரவேண்டுமே தவிர, நாம் பட்டத்தைத் தேடிச் செல்லக் கூடாது என்று அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்டுரையாளரின் கருத்துப்படி ஜீவா தனக்குப் பட்டம் தரும்படி யாழ். பல்கலைக் கழகத்தைக் கேட்டது போலல்லவா இருக்கிறது? எவரிடம் எப்படிப்பட்ட பட்டத்தையும் தேடிப் போகாதவர் ஜீவா. அவருக்கு என அளிக்கப்படவிருந்த பட்டத்தினை மாத்திரம் ஏற்க மறுத்தது அதற்கான காரணத்தையும் அவரே விளக்கிக் கூறியுள்ளார். அவர் கூறியது சரியான காரணம். அவருக்குரிய பட்டம் கலாநிதிப் பட்டம் என்று புத்திஜீவிகள் கூறுகிறார்களே தவிர, ஜீவா கூறவில்லை. அது தான் வேண்டும் என்று எந்தக் கட்டத்திலும் அவர் கேட்டது கிடையாது.

ஜீவாவின் கூற்றினை அலசி ஆராய்ந்து கட்டுரையாளர்கள் பலர் அவருக்குரிய பட்டம் இதுவல்ல, அது கலாநிதிப் பட்டம் தான் என்று ஆணித்தரமாக எழுதியிருந்தார்கள். அவர்களின் காரணங்களை வெட்டி எழுதியிருந்தால் உண்மையில் கட்டுரையாளரின் குரலுக்கு மரியாதை இருந்திருக்கும்.

அவர் அதைப் பற்றி எதுவுதே எழுதாமல் வேண்டுமென்றே யாழ். பல்கலைக் கழகம் யாழ் மண்ணில் அமைந்த கதையை எழுதியுள்ளார்.

இப்பல்கலைக் கழகம் அமைவதற்கு இடதுசாரிகளின் உந்துதலே முக்கியக் காரணமாக இருந்த படியால் அவர்களில் டொமினிக் ஜீவாவும்

அடங்கி இருக்கலாம்.

திருகோணமலையில் பல்கலைக் கழகம் அமைந்திருந்தால் பல்கலைக் கழகத்துக்குச் சிங்கள மாணவரின் அனுமதியை சாட்டாக வைத்து இன்னம் சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்திருக்கும் என்றும் ஒருசாரார் கருத்துக் கூறுகின்றனர். இது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்று என்னால் கூறமுடியாது. என்றாலும் இப்போதாவது சிங்களக் குடியேற்றம் எப்போது நடந்தது என்பது கட்டுரையாளருக்கு புரிந்தால் மிக நல்லது.

ஜீவா யாழ் மண்ணையும், மக்களையும் மறந்து கொழும்பில் இருந்து செயற்படுகிறார் என கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். ஜீவா எந்த சூழ்நிலையில் கொழும்பு சென்றார் என்று இவருக்குத் தெரியாது. தனது அலுவலகத்தில் இருந்த அத்தனை ஆவணங்களும் அழிக்கப்பட்ட நிலையில் தான், ஜீவா யாழ்ப்பாணத்தை விட்டு வெறுங் கையோடு கொழும்பு சென்றார்.

அவரது விடா முயற்சியும், தெளிவான நோக்கமும் தான் அவரை இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது. முதலாளிகளைத் திட்டித் திட்டி அவர்களின் விளம்பரத்தில் தான் மல்லிகைப் பத்திரிகையை அவர் ஓட்டியதாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. எந்த வகையிலும் இக்கூற்றை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. மல்லிகை ஜீவாவின் தோளில் ஒரு கைப்பை. அதில் மணங்கொடுக்கும் மல்லிகைகள். அவற்றைத் தெருத் தெருவாகக் கொண்டு திரிந்து விற்றுத்தான் இப்பெரும் மல்லிகைப் பந்தலை அவர் உருவாக்கினார். அவருக்கு, அவருடைய கொள்கை, இலட்சியம் சார்ந்தவர்களின் ஆதரவுதான் பெரிதும் உதவியதே தவிர, முதலாளிகளின் விளம்பரங்கள் அல்ல. ஒருவரைக் குறை சொல்லும் போதும் அதற்கும் ஒரு தர்மம் இருக்கின்றது. மல்லிகைப் பத்திரிகை தமிழை வளர்த்தது. தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கியது. தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்தது. தமிழ் இலக்கியத்துக்குப் புத்துயிர் கொடுத்தது. தமிழ் சமூகத்தின் ஏற்றத் தாழ்வினை அகற்றியது என்றெல்லாம் உலகமெல்லாம் சொல்லும் போது, அதற்கு மாறாக, எந்தப் பாமர எழுத்தாளனையும் மல்லிகை உருவாக்கவில்லை என்று கூறுவதைத் தமிழ் எழுத்தாளர்களே தீர்மானிக்க வேண்டும். இந்திய அமைதி காக்கும் படை யாழ்ப்பாணத்தில் அதிகாரத்தில் இருந்த காலத்தில் என்ன, தமிழீழ விடுதலைப் புலிகள் அதிகாரத்தில் இருந்தபோது என்ன தன்னுடைய பத்திரிகையைத் தன் .............................. நிலையை மாற்றாமல் நடத்தி வந்துள்ளார் ஜீவா. எனவே ஜீவா ஒரு கொள்கையுடன் வாழ்பவர். அவரைப் பற்றி விமர்சிப்பவர்கள் தயவு செய்து அவருடைய கடந்த கால வாழ்க்கையை அலசி ஆராய்ந்த பின்னர் எழுதுவதே சாலச் சிறந்ததாகும்.

*சுடர் ஒளி -9-12-2001*

## படித்தவர்கள் பிழைத்ததேன்

–ஜின்னாஹ்
தெஹிவளை

ஜீவனுள்ள போதிலொருவர் திறனறிந்து போற்றுதல்
ஜீவனுள்ள செயலென்றாயின் சிறிதும் பொய்மை இல்லையே
ஜீவனுள்ள வரை தமிழைச் செகமறியச் செய்டொமினிக்
ஜீவாதனைப் போற்ற நினைந்த சேதியறிந்தோம் பூரித்தோம்

ஐம்பதாண்டு தொடர்ந்து தமிழ் அமிழ்தைமாந்தித் தானுமவ்
வைம்பதாண்டுந் தமிழைமாந்தி அனுபவிக்கப் பிறர்க்குமே
பைந்தமிழில் பற்பலவாய்ப் படைத்தளித்த ஜீவாவின்
கைங்கரியம் பிறரியற்றாக் காரியம்பூ அறியுமே

கற்றறிந்த பேர்களெனக் கூறுமாந்தர் தம்மிலும்
பெற்றமண்ணின் புகழ்விரியப் பகலிரவாய் முயன்றுமே
சற்று மோய்வு ஒளிச்சலின்றித் தமிழுயர நாட்டிலே
முற்றுந்தன்னை அர்ப்பணித்த மாமனிதன் ஜீவாவே.

கற்றதனால் கலாநிதியாய்க் கல்வியுயர்மை பெற்றவர்
பொற்புறுபேர் தமிழ்மொழிக்காம் பெருமை கொள்ளல் சாலுமே
முற்றுந் தம்மை மொழிக்களித்து மேன்மை காக்கும் பேர்களும்
கற்றவரால் போற்றிக்'கலா நிதி'யளித்தல் மரபதாம்.

மரபுபேணி யாழ்வளாகம் 'மல்லிகையின்' தலைவனை
சிரமுயர்த்தல் போலச்செய்த சீரழிவை நினைந்திடில்
அருகதைக்குத் தாழவொரு அவமதிப்பைச் செய்ததாய்
கருதமனம் செய்கிறதே காரணந்தான் என்னவோ!

தகுதிபேணின் ஜீவாவுக்கென் தகுதியில்லைத் தமிழினில்
மிகுதியாகப் படைத்தளித்தோன் மூபத்தாறு ஆண்டுகள்
செகம்புகழ 'மல்லிகை'யைத் தொடர்ந்து தந்து வென்றவர்
மிகையவர்தம் பணிகள் 'கலா நிதிக்'குடைமை யானவர்.

வளர்ச்சியுறா மனங்களின்னும் வகைப்படுத்த மனிதரை
இழித்துயர்த்தி பாகுகாட்டும் ஈனச் செய்கை போலுமே
பிழைத்தநீதிக் குடந்தையானார் பல்கலையாழ் பதியிலே
அளித்தது மேன் 'முதுகலை மாணி'யெனுமோர் பட்டமே.

பட்டமொன்று தந்து 'ஜீவா' புகழடைய வேண்டுமோ
பட்டம் சேர்ந்து ஜீவாவினால் பெருமைகொள்ளும் சற்றுமே
இட்டமிலார் ஏன் கொடுத்தார் ஏற்கப்பொருந்தா தொன்றினைத்
திட்டமிட்ட சதியதுவென் றோதில் என்ன குற்றமோ.

தானுயர்ந்து 'மல்லிகை'யால் தலைநிமிரப் பிறரையும்
வானுயர்த்த வழிசமைத்த வள்ளலவர் அல்லவே
ஏனுணராப் பழிசுமந்தார் எச்சில்வீச எண்ணினார்
பேனாமுனையின் புகழறியாப் படித்தவர்கள் பிழைத்தனர்

செய்தபிழை பிராயச்சித்தம் செய்வதனால் மாறலாம்
செய்தபிழை ஏற்று மாற்றம் செய்வதனால் தீரலாம்
வைதமனங்கள் மாறிவாழ்த்தும், வழங்கியவர் தம்மையும்
கைகுவித்து நன்றிகூறும் காலம்பதில் கூறுமோ

# எந்தப் பட்டம் பெறும் தகுதியும் ஜீவாவுக்குக் கிடையாது

*முல்லைமணி*
*வவுனியா*

டொமினிக் ஜீவா முதுகலைமாணிப் பட்டத்தை நிராகரித்தது பற்றிய சர்ச்சையைச் 'சுடர் ஒளி' இதழ்களில் வாசித்தேன். முறக் கொட்டாஞ்சேனை க. குணா எழுதிய கட்டுரை (சுடர் ஒளி வாரமலர் நவம்பர் 04) அட்சர லட்சம் பெறும். சரியான விதத்தில் ஜீவாவை எடைபோட்டுள்ளார்.

இது தொடர்பான எனது கருத்துக்களையும் முன் வைக்க விரும்புகிறேன். பேராசிரியர்கள் மல்லிகையில் எழுதித்தான் பதவி உயர்வு பெற்றார்கள் என்ற வாதம் காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதைதான். மல்லிகையில் எழுதாத எவருக்கும் பல்கலைக் கழகத்தில் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று அடித்துச் சொல்ல முடியுமா? நிலைமை எதிர்மாறானது என்பது தான் உண்மை. பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் - கலாநிதிகள் பெயரைச் சொல்லித்தான் மல்லிகையை விற்பனை செய்து ஜீவா தன் சீவியத்தை நடத்தி வருகிறார் என்பது தான் உண்மை. மல்லிகை காத்திரமான கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. இது படித்துவிட்டு வீசி எறிந்துவிடும் ஏடல்ல. இதனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிச் சொல்லித்தான் மல்லிகையை விற்பனை செய்கிறார்.

வேடிக்கை என்னவென்றால் கட்டுரை எழுதியவர்களின் பெயரின் முன் பேராசிரியர் என்றோ கலாநிதி என்றோ போடுவதில்லை. ஜீவாவுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கியிருந்தால் மல்லிகை முன் அட்டையில் கொட்டை எழுத்தில் போட்டிருப்பார்.

குணா சுட்டிக்காட்டியது போல இளைய தலைமுறை எழுத்தாளர்களின் ஆக்கங்களை அவர் பிரசுரிக்கத் தயங்கினார். வேறு பத்திரிகைகளில் - எழுதி ஓரளவேனும் பிரபலம் அடைந்தவர்களின் - அவர்களுள்ளும் முற்போக்கு அணி என்று முத்திரை குத்திக் கொள்பவர்களின் - ஆக்கங்களையே வெளியிட்டார். ஒரு புதிய எழுத்தாளரின் ஆக்கத்தை எடைபோட்டு அதன் தாரதன்மியத்தை நிறுத்துப் பார்க்கக் கூடிய அடிப்படை அறிவு அவருக்கு இல்லை. மல்லிகையில் வெளிவரும் சில கட்டுரைகளும், கவிதைகளும் தனக்கே விளங்கவில்லை என ஜீவாவே ஒப்புக் கொண்டுள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களிலும் நவீன இலக்கியங்களிலும் பரிச்சியமுள்ள - தமிழை வரன்முறையாகப் படித்துப் பட்டம் பெற்ற யாப்பிலக்கணம் தெரிந்த - கவிஞர் முருகையன், மல்லிகையில் வெளியான சோலைக்கிளியின் கவிதை தனக்கு விளங்கவில்லையே அப்படியானால் இந்தக் கவிதை யாருக்காக எழுதப்பட்டது என்று கேள்வி எழுப்பி மல்லிகையில் கட்டுரை எழுதியிருந்தார். குறிப்பிட்ட பேராசிரியர் ஒருவரின் (பெயரைக் குறிப்பிடவிரும்பவில்லை) கட்டுரை விளங்கவில்லை. அச்சுக்கோர்ப்பது சிரமமாக இருக்கிறது என மல்லிகை உதவியாளர் முணுமுணுத்தபோது, சொல் விளங்காமல் விட்டால் பரவாயில்லை. ஒவ்வொரு எழுத்தையும் தனித் தனி பார்த்து அச்சுக் கோர்க்கலாந் தானே என ஆலோசனை கூறியதும் நினைவுக்கு வருகிறது. முடிவாகச் சொன்னால் எந்தவொரு எழுத்தாளரையும் மல்லிகை உருவாக்கவில்லை. கலாநிதிகளின் தயவில் மல்லிகை நடந்தது ஜீவாவின் பெரு முயற்சியால்தான், யாழ்ப்பாணத்திற்குப் பல்கலைக் கழகம் வந்ததாம். அரசினதும் அமைச்சர் ஒருவரதும், கல்விமான்களதும் பங்கு மிக மிக அற்பம் என்று கருதுகிறார்களா?

ஜீவாவின் கொள்கை வேறு செய்கை வேறு என்பதற்கு மேலும் சில உதாரணங்கள்.

இந்திய தமிழ் சஞ்சிகைகள் அனைத்தும் குப்பைகள். இலங்கைக்கு அவை வராமல் தடைசெய்யவேண்டும் என்னும் இயக்கத்தின் முக்கிய பங்காளியாகத் தொழிற்பட்டவர் ஜீவா. பின்னர் அதனை மறந்து குமுதத்திலும் இதயம் பேசுகிறதிலும் கெஞ்சி மன்றாடித் தனது கட்டுரைகளைப் பிரசுரிக்கச் செய்து பணம் பெற்றதை அவர் மறுக்க முடியுமா?

ஒடுக்கு முறைகளுக் கெதிரான தொழிலாளர் குரல் என மல்லிகையை வர்ணிக்கும் ஜீவா நிலமானிய சமுதாயத்தின் குரலாகத் திகழ்ந்த கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் ஜெயராஜிடம் சரணடைந்து தனது இலக்கியக் கொள்கையை விட்டு ‘மூதறிஞர்’ பட்டமும் பெற்றுவிட்டார்.

ஜீவாவின் சாதனை என்ன? பல்கலைக் கழகக் கௌரவப் பட்டம் பெறுவதற்கு ஜீவாவின் சாதனை என்ன? அவருக்கு அடிப்படைத் தமிழ் அறிவுகூட இல்லையே. ஒரு சிறு உதாரணம். 'அட்டைப்பட ஓவியங்கள்' என்பது அவர் வெளியிட்ட ஒரு நூலின் தலைப்பு. படம் என்றால் ஓவியம் என்பது ஐந்தாம் வகுப்பு மாணவனுக்குக் கூடத் தெரியும். பட ஓவியங்கள் என்றால் பட்டங்கள் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அடிப்படைத் தமிழ் அறிவு இருந்தால் இத்தவறு நேர்ந்திருக்காது.

ஜீவா சில சிறுகதைகளை எழுதினார். சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டார். தனது சுயபுராணம் பாடி நூலாக்கினார். மல்லிகை சஞ்சிகையை 36 - ஆண்டுகள் வெளிக் கொணர்ந்தார். மாதம் ஒன்று எனக் கணக்கிட்டால் 412 இதழ்கள் வந்திருக்க வேண்டும். அப்படி வரவில்லையே! ஓர் எழுத்தாளரைத் தானும் உருவாக்கவில்லையே, பழந்தமிழ் இலக்கியத்தில் அவருக்குப் பரிச்சயமில்லை. சமகால இலக்கியங்களின் தராதம்மியங்களை வகைப்படுத்திக் கூறும் ஆற்றல் அவருக்கு இருந்ததா? ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய தேடல் முயற்சி ஏதாவது செய்தாரா, இலக்கிய வளர்ச்சிக்காகத் தன் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்திருப்பதாக உரத்துக் கூறுவது வெறும் பம்மாத்து. அவர் வேறு தொழில் எதுவும் செய்யாததால் மல்லிகை இல்லாவிட்டால் அவர் பட்டினி கிடந்து சாகவேண்டும். மல்லிகை தொடர்ந்து வருவதன் இரகசியம் இதுதான்.

தேசியம் பேசிய கலாநிதிகள் அன்றைய அரசைத் திருப்திப் படுத்த யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைப் பகிஷ்கரித்தனர்.

அவர்களுக்கு மல்லிகை ஜீவா முண்டு கொடுத்தார். தமிழர் உரிமை என்று பேசுபவர்களும் போராடுபவர்களும் (சாத்வீகப் போராட்டம்) குறுகிய இனவாதிகள், நாம் அனைவரும் இலங்கையர் என்று தேசியம் பேசிய ஜீவா தற்போது அச்சத்தினாலோ என்னவோ மூச்சுவிடுவதில்லை.

'தாழ்ந்த சாதிக்காரனுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்குவதற்குப் பல்கலைக் கழகம் தயங்குகிறது' என ஒரு கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது. இனமத வேறு பாடின்றி உழைக்கும் வர்க்கத்துக்குக் குரல் கொடுக்கும் மார்க்ஸின் சித்தாந்தம் பேசுபவர்கள் தமக்குத் தேவையேற்படும் போது சாதிச்சாயத்தை வெளிக்காட்டுகின்றனர்.

என். கே. இரகுநாதனும், ஜீவாவும் முற்போக்கு விமர்சகரான உயர்குலப் பேராசிரியர் வீட்டிற்குச் சென்றனர். அவர்களை வீட்டினுள் அழைத்து இருத்தக் கூடியளவுக்கு அவர் குடும்பச் சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை. அதனை வெளிப்படையாகச் சொல்லவும் அவர் விரும்பவில்லை. ஆகா வெளியிலே

நல்ல நிலவு பொழிகிறது. 'நிலவில் இருந்து பேசுவம்' என்று தந்திரமாகச் சமாளித்தாராம். பின்னர் நிலவில் பேசும்வோம் என்னும் சிறுகதை வெளிவந்தது.

தாழ்த்தப் பட்ட சாதியைச் சேர்ந்த எத்தனையோ பேர் தமது கடும் உழைப்பால் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளனர். பேராசிரியர்களாகத் திகழ்கின்றனர். ஜீவாவின் சாதனை தனித்தன்மை வாய்ந்ததாக, தற்புதுமையானதாக, புதிய சிந்தனை வீச்சுடையதாக இருந்திருப்பின் நிச்சயம் அவருக்குக் கலாநிதிப் பட்டம் கிடைத்திருக்கும்.

ஜீவா பட்டத்தை ஏற்காமல் நிராகரித்தது சரியா தவறா என்ற வினாவுக்கே இடமில்லை. எந்தக் கௌரவப் பட்டத்திற்கும் அது முதுகலைமணியாக இருந்தால் கூட அவர் தகுதியானவர் அல்லர்.

எனவே யாழ் பல்கலைக் கழகம் (ஏனைய பல்கலைக் கழகங்களும் தான்) ஜீவா போன்றவர்களைக் கௌரவிக்க முன்வரக் கூடாது.

*சுடர் ஒளி*

*17-12-2001*

# கலாநிதிப் பட்டம் பெற எந்தவகையிலும் ஜீவா குறைந்தவர் அல்லர்!

*அளவையூர் தனசீலன்*
*வவுனியா*

பல்கலைக் கழகங்கள் சமூகத்துடன் ஒன்றி இயங்க வேண்டுமென்பதற்காக பல்கலைக் கழகங்கள் சமூகப் பெரியோர்களைத் தேர்ந்தெடுத்து கௌரவிப்பது வழக்கம். அந்த வகையில் யாழ். பல்கலைக் கழகமும் சில பெரியோருக்கு கௌரவம் அளிக்க முன் வந்தது. அந்த கௌரவம் எத்தகைய தகுதிகளைக் கொண்டு இனங்காணப்பட வேண்டும் என்பது முக்கியம். இவற்றை அந்தப் பல்கலைக் கழகத்தின் மூதவையே முடிவு செய்யும்.

சென்ற முறை சிலருக்கு யாழ் பல்கலைக் கழகம் கௌரவப் பட்டம் வழங்கி கௌரவித்திருந்தது. வீரமணி ஐயர், தங்கம்மா அப்பாக்குட்டி, மில்க்வைற் நிறுவன உரிமையாளர் கனகராசா போன்றோருக்குக் கலாநிதிப் பட்டங்களை அது வழங்கியிருந்தது.

இவர்களுடைய எத்தகைய செயல்களைக் கொண்டு பட்டம் வழங்கியிருந்தார்கள் என்பதை ஆராய்ந்தால் வீரமணி ஐயர் சமயத்திற்கும், இசைத்துறைக்கும் செய்த பங்களிப்பும் தங்கம்மா அப்பாக்குட்டி சமயத்திற்கு செய்த தொண்டும் கனகராசா சமூகத்திற்குச் செய்த தொண்டும் தான் பல்கலைக் கழகத்தால் கணக்கிடப்பட்டிருந்தது.

அப்படிப் பார்க்கையில் ஜீவாவுக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கி

கௌரவிக்க அவரது நான்கு தசாப்த கால எழுத்தின் வலிமையும், ஆழமும் தான் அவரைத் தள்ளியிருக்கும் என்பது உண்மை.

நான் முதலில் குறிப்பிட்ட மூவரும் ஜீவா அளவிற்கு ஆராயப்பட்டார்களா? என்பது சிந்திக்க வேண்டிய விடயம். உண்மையில் அந்த மூவருக்கும் ஜீவா எந்தளவும் குறைந்தவர் அல்லர். எனவே அவர்களுக்குக் கொடுத்த கலாநிதிப் பட்டம் ஜீவாவுக்கும் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

மனிதர்கள் தவறு விடுவது இயல்பு. ஜீவாவின் எழுத்தில் இருக்கும் நேர்மையும், எளிமையும், யதார்த்தமும் சில வேளைகளில் அவரது வாழ்க்கைப் போக்கில் இல்லை என்றும் கூற முடியும்.

அதே போல் யாழ் பல்கலைக் கழகமும் பல தவறுகளை விட்டிருக்கிறது. குறிப்பாக கொள்கை, எழுத்து, வாழ்வு மூன்றும் ஒன்றாகக் கொண்டு வாழ்ந்த அமரர் டானியலுக்கு - அமரத்துவம் அடைந்த பின்னரும் எந்த கௌரவப் பட்டமும் வழங்கப்படவில்லை. எனவே யாழ் பல்கலைக் கழகமும் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

சுடர் ஒளி
*23-12-2001*

# முற்போக்குவாதிகள் என்று கூறுவோர் சந்தர்ப்பவாதிகள்

*ச. இராமச்சந்திரன்*
*சிலாபம்*

ஒரு பட்டம் வழங்கப் படும் போது அதனைப் பெறுபவரின் அந்தஸ்திலேயே அந்தப் பட்டத்தின் பெருமை தங்கி இருக்கிறது. தகுதி இல்லாதவர்களுக்குப் பட்டம் வழங்கப் படும் போது பட்டமும் அதை வழங்கிய நிறுவனமும் மதிப்பை இழக்கின்றன. இதற்கு உதாரணம் ஜீவாவுக்கான பட்டம்.

முற்போக்காளர் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்கள், சந்தர்ப்பவாதிகள். தமிழக எழுத்தாளர் ஜெயகாந்தன் அதற்கு உதாரணம்.

ஜீவா தனது எழுத்தில் அடிக்கடி தான் எந்தக் கொம்பனுக்கும் தலை வணங்குவதில்லை என்று தெரிவிப்பதிலிருந்து அவரது தாழ்வு மனப்பான்மை வெளிப்படுகிறதேயன்றி அவரது பண்பட்ட அறிவு துலங்கவில்லை. அவர் போன்றவர்களது முற்போக்கு யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட ஒரு சாதியினரைக் குறிவைத்துத் தாக்குகிறதே தவிர வேறில்லை.

ஜீவாவின் கடின உழைப்பை நிச்சயம் பாராட்ட வேண்டும். ஆனால் அவரது எழுத்து, செயல், பேச்சு, இலட்சியம் என்றும் முற்போக்கானவை அல்ல. இதுவரை அவர் சமூக விழிப்புணர்வை எதுவித்திலும் ஏற்படுத்தவில்லை. இனிமேலும் அது அவரால் முடியாது.

இப்படியானவரைப் பட்டத்துக்காகத் தெரிவு செய்த பல்கலைக் கழக அறிவு ஜீவிகள் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. தகுதியானவர்களைத் தெரிந்தெடுக்கத் தவறுவதும் - எதற்கும் சண்டைச் சச்சரவை ஏற்படுத்துவதும் - தமிழ் சமூகத்துக்கே உரிய தனிப்பண்பு. காலம் தான் இந்தப் பண்பை மாற்ற வேண்டும்.

*சுடர் ஒளி 23-12-2001*

## யாழ் பல்கலைக் கழக நிர்வாகம் மௌனம் ஏன்?

க. நடேசு
கொக்குவில் மேற்கு

ஜீவாவுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்காதது பற்றிப் பலர் குறைகூறி எழுதிய போதிலும் இது பற்றி ஒரு வார்த்தையாவது கூறாதிருக்கும் யாழ் பல்கலைக் கழக நிர்வாகம் ஊமையா? நாங்கள் 'கப்சிப்' என்று இருப்போம். அவர்கள் எதையும் எழுதட்டும். எங்களை எவரும் ஒன்றும்செய்து விட முடியாது என்ற அகங்காரத்தினால் எழுந்த மௌனமா?

கௌரவப் பட்டங்களின் வரலாறு அறிந்தவர்கள், பெரிய பெரிய ஆராய்ச்சி செய்கிறவர்கள். அங்கு இருப்பார்கள். அவர்கள் இதைப் பற்றி ஒரு ஆராய்ச்சியே செய்து கட்டுரை எழுதினால் அவர்களின் பதவி உயர்வுக்கு உபயோகப்படுமல்லவா?

இந்தியாவில் இருப்பவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகிறது. இது ஒரு வகை வியாபாரம், என்றும் பேசப்படுகிறது.

எமது மண்ணில் தோன்றிய பெரியோர்களுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கினால் யாழ். பல்கலைக் கழகம் குறைந்து போகுமா?

யாழ். பல்கலைக் கழகத்தில் கௌரவப் பட்டம் வழங்கும் முறை புதிராக உள்ளது! இதைப் பற்றிக் குறிப்பிடுங்கள் அறிந்து கொள்ள ஆசையாக இருக்கிறது. மானங் கெட்டாலும் கையுண்டு பொத்துவதற்கு என்று இருக்க வேண்டாம்.

*சுடர் ஒளி*
*23–12–2001*

# சர்ச்சை முடிவு

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் நீண்ட கால இலக்கியப் பணிக்காக, அவருக்கு முதுகலை மாணிப் பட்டம் அளித்து அவரை கௌரவிக்க யாழ். பல்கலைக் கழகம் முன்வந்தது. ஆனால் வழக்கத்துக்கு மாறாக வழங்க முன் வந்த இந்த முதுகலைமாணிப் பட்டத்தைத் தம்மால் ஏற்க முடியாது என்று டொமினிக் ஜீவா பல்கலைக் கழகத்துக்கு அறிவித்தார். டொமினிக் ஜீவாவுக்கு அநீதி இழைக்கப்பட்டதா என்பது தொடர்பான வாசகர்களின் கருத்துக்கள் கடந்த சில வாரங்களாக சுடர் ஒளியில் இடம் பெற்று வந்தன. அந்தச் சர்ச்சை இந்த இதழுடன் முடிவடைகிறது.

*சுடர் ஒளி*

*23-12-2001*

# நூலற்ற 'பட்டம்'

*மா. பாலசிங்கம்*

இருபத்தோராம் நூற்றாண்டின் மிதி படியில் யாழ் பல்கலைக் கழகம் பெரும் அதிர்ச்சியொன்றைச் சந்தித்துள்ளது. இது, அதன் இயக்குநர்களாக இருக்ககும் இந்நாட்டின் உரத்த கல்விமான்களை மௌனிக்கச் செய்துள்ளது. இதற்கு நாற்றங்காலாக, இந்நூற்றாண்டுக்கான இப்பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா அமைந்து விட்டது. பல்கலைக் கழகப் பாரம்பரியத்தின் படி, அதன் மாணவர்கள் உரிய முறையில் தோச்சி பெற்ற பின், அவர்களோடு இணைத்து, மக்கள் நலன் சார் துறைகளில் மேன்மையுற்று, மக்களது ஏகோபித்த அபிமானத்தைப் பெற்றிருக்கும் பெரியோர்களுக்கும் குறிப்பிட்ட சில பட்டங்களை வழங்குவதுண்டு. இதற்கமைய, இவ்வாண்டு மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு இப்பல்கலைக் கழகம் 'முதுகலைமாணி' என்ற பட்டத்தை அறிவித்தது. ஆனால், இந்நாட்டின் கல்வி, இலக்கியம் சார் உலகோர் விக்கித்து, விறைத்து நிற்கும் படியாக ஜீவா இப்பட்டத்தை நிராகரித்து, ஏற்க மறுப்பதாக பகிரங்கமாக அறிவித்தி விட்டார். இதுவே, தற்போது பல்கலைக் கழகச் சமூகத்தவரை அதிர வைத்து, பெரிய தோர் சர்ச்சையாக தோற்றமிட்டுள்ளது.

இந்நாட்டின் அதி உயர் கல்விமான்களின் பாசறையென உரத்து வாசிக்கப்படும் யாழ்ப்பாண மண்ணில் கால் பரத்தி நிற்பது இப்பல்கலைக் கழகம். அறிவு ஜீவிகளை உற்பத்தி செய்யும் பட்டறை. இத்தகைய விழுமியங்கள் சார் இந்நிலையத்தின் பட்டத்தை டொமினிக் ஜீவா ஏற்காமைக்குக் காரணந்தானென்ன?

முதுகலைமாணிப் பட்டம் - நுழைவுப் பரீட்சை மூலம் பல்கலைக் கழகம் நுழைந்து, குருகுலம் ஓம்பி, நாடாளாவிய ரீதியில் தேறும் மாணவருக்குச் சூட்டும் பட்டமே இதுவென ஜீவா நிராகரிப்பை நியாயப் படுத்துகிறார். சமூகத் தொண்டன், எழுத்தாளர், சஞ்சிகை ஆசிரியர் என்ற துறைகளில் தனது இயக்கத்தை ஆற்றுப்படுத்தி இருக்கும் தனக்கு இது பொருந்தாதெனவும் வாதிடுகிறார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டுமே பெறும் பேற்றைப் பெற்றவறென்பது ஊரறிந்த உண்மை!

எனவே, டொமினிக் ஜீவாவை கௌரவிப்பதாகில் பல்கலைக் கழகம் அவரை எவ்வகையில் மரியாதை செய்திருக்க வேண்டுமென்ற கேள்வி எந்தவொரு அறிவுஜீவியினுள்ளும் வெடித்தெழுவது இயல்பே!

தொழிலாளியாக இருந்து, ஜீவா பிரமுகர் அந்தஸ்திற்குத் தன்னை உயர்த்திக் கொண்டவர். குறிப்பிடத்தக்க பேச்சாளர், எழுத்தாளர், இலக்கியவாதி. வெளியீட்டாளர். இந்த விஷயத்தில் இரு வேறு கருத்திற்கு இடமிருக்காது? இப்படியாக அவர் எப்பவோ அடையாளம் காணப்பட்டுள்ளார். ஓர் இலக்கியவாதியாக - சிறுகதை, கட்டுரை போன்ற கூறுகளில் தன் ஆளுமையைப் பதித்தவர். இதை அங்கீகரித்து ஆவணப் படுத்தும் முகமாக இலங்கை அரசு, சாகித்திய மண்டலத்தின் ஊடாக தமிழ் சிறுகதைக்கான தனது முதலாவது பரிசை டொமினிக் ஜீவாவிற்கு 1961-ல் வழங்கி அவரை மேன்மைப் படுத்தி இருக்கிறது.

வெளியீட்டளரான ஜீவா, தனது நூல்களோடு சேர்த்து, வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று, ஏனைய எழுத்தாளர்களது ஆக்கங்களையும் புத்தகங்களாக்கி இருக்கிறார். இதன் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டும்! இது அவரது இலக்கிய நேசிப்பிற்குக் கட்டியம் கூறும் பெரும் பங்களிப்பாகும்.

இலக்கியத்தை ஒட்டிய எந்தவொரு நிகழ்வையும் ஜீவாவும், அவரது மல்லிகைச் சஞ்சிகையும் விட்டு வைப்பதில்லை. தென்னிந்திய, இலக்கியக் கனவான்களால் ஈழத்து இலக்கியம் கொச்சைப் படுத்தப் படும் போதெல்லாம் - அடக்கி வாசிக்கப் படும் போதெல்லாம் ஜீவாவின் குரல் ஓங்கி ஒலித்திருக்கிறது. எதிரியின் கோட்டைக்குள் நுழைந்தே - தமிழகத்துள் - தனது இலக்கிய நேர்மையை நிறுவி இருக்கிறார். மல்லிகையின் தலையங்கங்கள் ஈழத்து இலக்கிய நேசிப்பிற்கான அசல் பதிவுகள். சிங்களக் கிராமத்துக்குள் சென்று கூட, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பரிணாமத்தை ஓங்கி உரைத்திருப்பவர், ஜீவா. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினராக, செயலாளராக இருந்து தனது சுவாசக் காற்று ஈழத்து இலக்கிமே என்பதை, அத்தாட்சிப் படுத்தி இருக்கிறார். மரபு வாதிகளின்

'காயடித்த' இலக்கியப் போக்கை மழுங்கடிப்பதில் பேருக்கம் காட்டி இருக்கிறார். இலக்கியவாதிகள் புதுக்கவிதையை விலக்கி வைக்க முயன்ற பொழுது தனது மல்லிகை சஞ்சிகை மூலமாகப் புதுக் கவிதையாளர்களை வளர்த்து அவர்களைக் கவிதை உலகில் தலை நிமிர வைத்திருக்கிறார்.

தனது பேச்சு, எழுத்து வல்லபங்களைத் தனது கேடயமாக்கி ஜீவா தவறான அரசியல் குழுக்களுள் பாய்ந்திருக்கலாம். ஆனால், தான் சார்ந்த - ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, பாட்டாளி - வர்க்கத்தினரை அவலங்களிலிருந்து, அவர்களை மீட்கக் கூடியது மார்க்சிய தத்துவமே எனத் தெளிந்த நிலை கொண்டு அதை ஆராதித்து பொதுவுடமைக் கட்சியோடு ஐக்கியமாகி அரசியல் சமூகப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர். மனித நேயன், மு.கார்த்திகேசன், மக்கள் தொண்டன். எம். சி. சுப்பிரமணியம், போன்ற மக்கள் தலைவர்களைத் தனது துரோணராக ஏற்றுத் தன்னுள் ஓர் முற்போக்கு இயக்கத்தைச் கண்டவர். இன்றும், பொதுவுடமைக் கட்சியின் மிக முக்கிய உறுப்பினராகத் தன்னைப் பிணைத்திருக்கும் பவள விழா மூப்பையுடைய மாமனிதர்! உழைப்பால் உயர்ந்தவர்களான ஆபிரகாம் லிங்கன், கர்மவீரர் காமராஜ் நாடார் போன்ற மனிதப் புனிதர்களோடு வைத்து எண்ணப்பட வேண்டியவர், டொமினிக் ஜீவா.

ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட பெருவாரியான இளைஞர்களுக்கு ஜீவா ஆதர்சமாக இருக்கிறார். இவரது இன்றைய வளர்ச்சி இவரது சலியாத உழைப்பிற்குக் கிடைத்த வெகுமானமென, வாழ்க்கையின் முன்னேறத் துடிக்கும் இளைஞர்கள் கருதுகின்றனர். சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைக்கும் இவரை உதாரணப் படுத்துகின்றனர். எனவே, ஜீவாவின் பாதை தமக்கு ஏற்றதென அதை ஆராதிக்கின்றனர்.

ஆக, டொமினிக் ஜீவாவின் வாழ்வை விலாவாரியாகப் பகுத்து நோக்கும் பொழுது 'முதுகலை மாணி'ப்பட்டத்தை விட, அவருக்குப் பொருத்தமானது 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டமே என ஏற்க முடிகிறது. முதுகலைப் மாணிப் பட்டம் நூலற்ற பட்டமென்ற ஜீவாவின் முடிவு சரியே!

இதிலிருந்து பல்கலைக் கழக நிருவாகம் விலத்திப் போனதற்குக் காரணந்தான் என்ன? சூட்சுமந்தானென்ன? ஓர் இலக்கிய ஊழியனுக்கு இப்பட்டம் ஏற்றதா............

இந்த அர்த்தமற்ற நடவடிக்கையின் மூலம், யாழ் பல்கலைக் கழகம் - யாழ் தமிழ்ச் சமூகம் தனக்கே நிலையானதெனக் கருதும் பரம்பரை

ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்ற முனைப்போடு இயங்கி இருப்பது தெரிகிறது. அத்தோடு, காலங்களும், களங்களும், மாறினாலும் தமிழனது குணம் மாறாதென்பதை மற்றுமொருமுறை நிரூபித்திருக்கின்றது.

ஈழத்து இலக்கியம் வீரியம் கொண்டு யதார்த்தம், மண்வாசனை என்ற புதிய பரிணாமங்களில் ஈழத்து இலக்கியத்தை மலர்த்திய பொழுது, அதன் தசையும் நகமுமாக உழைத்தவர்கள் ஜீவாவும், டானியலும். இதை உள்வாங்கிச் செரிக்க முடியாத மரபுத் தமிழர்கள், தங்களது குதர்க்கமான மொழியில் இழிசனர் வழக்கெனக் கொச்சைப் படுத்தினர். அந்தச் சாதிய விஷக் கொடுக்கே இன்று ஜீவாவின் பட்டத்திலும் அரங்கேறியுள்ளதென்பதை முற்போக்கு விசுவாசிகள் இனங்காண்கின்றனர். ஓர் உயர் கல்வி நிறுவனத்தில் கூட, இப்படியாகச் சாதி புகுந்து துடக்குக் காண்பது ஒரு இனத்தின் பன்பாட்டு, நாகரீக வறுமையைத்தான் சுட்டும்.

எனவே இந்தப் பட்டப் பிரச்சினை டொமினிக் ஜீவாவுக்கு மட்டுமானதாகக் கருதக் கூடாது. இது சக எழுத்தாளர்களுக்கும் உரித்தானதே. எழுத்தாளர் அமைப்புகள், சமூக அமைப்புகள் அனைத்தும், இனித் தொடரப் போகும் இலக்கியத் தலைமுறையின் நன்மைக்காகவேனும் ஒன்றிணைந்து யாழ் பல்கலைக் கழகத்தினது இந்த ஏற்றுக் கொள்ள இயலாத நடவடிக்கையை எதிர்த்து நீதியைக் கோர வேண்டும்.

நூலற்ற 'பட்டம்' ஓர் இலக்கியவாதிக்குத் தேவையற்றதே!

*கொழும்பு – 13.*

# உழைப்பாளிகளின் வியர்வைத் துளியில முகிழ்ந்தவர்

ப. ஆப்டீன்

இந்த மண்ணுக்குரியதல்லாத வேற்று மொழியான மலாய் மொழியைப் பரம்பரையாகப் பேசும் சமூகத்தில் தோன்றிய என்னைப் போன்றவர்களைத் தமிழ் எழுத்தாளர்களாகத் தமிழ் மக்களால் அங்கீகரிக்க வைத்த தீர்க்க தரிசனப் பார்வை ஜீவாவினுடையது.

உலகில் எந்தப் பல்கலைக் கழகமுமே இதனைச் சாதித்திருக்க முடியாது. சாதித்ததும் இல்லை.

அன்று மலையகத்தில் சேவையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்களே தமிழை கற்பித்தனர். அவர்கள் காட்டிய வழியில் எனக்குத் தமிழில் ஆர்வம் ஏற்பட்டது. ஆக்க இலக்கியத் துறையிலும் பிடிப்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தரமான சஞ்சிகைகளும், நூல்களும் எங்களைக் கவர்ந்தன. நண்பர் இர. சந்திரசேகரன் அவர்களின் 'கலைமகள் படிப்பகம்' கணிசமான அளவு தமிழ் நூல்களைக் கொண்டிருந்தது.

சுயமாகத் தமிழில் சிறுகதைகள் எழுதிப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் பிறந்த கால கட்டத்தில் தான் அதிர்ஷ்ட வசமாக நாடறிந்த எழுத்தாளர் டாக்டர் நந்தி சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்ற நாவலப்பிட்டிக்கு வந்தார். எங்களைப் பொறுத்த வரையில் அந்தக் கால கட்டத்தில் எழுத்தாளரும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஒரு முக்கிய பிரமுகருமான டாக்டர் நந்தியின் வருகை, ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது. நானும் இலக்கிய நண்பர்களான இர. சந்திரசேகர சர்மா, பி. மகாலிங்கம், ச. சந்தனப் பிச்சை, வழுத்தூர் ஒளியேந்தி (நூர் முஹம்மது) சு. பிரேமசம்பு, பெ. ராமானுஜம் ஆகியோர்

அடிக்கடி டாக்டர் நந்தி அவர்களுடன் நிகழ்த்திய இலக்கியச் சந்திப்புகள் பசுமையாகவே இருக்கின்றன. நம் நாட்டு எழுத்தாளர்களையும் அவர்களது ஆக்கங்களையும் அறிமுகப் படுத்தினார் நந்தி. அந்த வரிசையில் கே.டானியல், டொமினிக் ஜீவா, காவலூர் ராஜதுரை, ஈழத்துச் சோமு, அ.முத்துலிங்கம் போன்றோரது படைப்புகள் பற்றி கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

எங்களது முழுக்கவனத்தையும் ரசனையையும் ஈழத்து இலக்கியத்தின் பக்கம் திசைத் திருப்பி விட்டவர் டாக்டர் நந்தி. அவர் மூலம் 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதியின் ஆசிரியர் டொமினிக் ஜீவா, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரேம்ஜி, ஞானசுந்தரம் ஆகியோரது தொடர்புகள் கிடைத்தன. 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுப்பை யாழ்ப்பாணத்திலிருந்து தபால் மூலம் அனுப்பி வைத்திருந்தார், டொமினிக் ஜீவா. இத் தொகுதியில் அடங்கியிருந்த சிறுகதைகளை ஆழ்ந்து படித்துவிட்டு கருத்துக்களை எழுதுமாறு ஊக்குவித்தார், நந்தி. எங்களுக்கும் ஜீவா அவர்களுக்கும் உள்ள கடிதத் தொடர்பு இப்படியே வளர்ந்து வந்தது.

'கலைஞர்' என்ற தலைப்பில் ஒரு மாத சஞ்சிகை வெளியிடப் போவதாக ஜீவா எழுதியிருந்தார். மிக விரைவிலேயே சஞ்சிகை தபாலில் வந்தது. பிரித்துப் பார்த்தால் அதற்கு 'மல்லிகை' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. மாதா மாதம் 'மல்லிகை' அஞ்சலில் வர ஒழுங்குகளைச் செய்து கொண்டோம். எனது கதைகள் மல்லிகையில் பிரசுரமாகின. மறைந்த நண்பர் நாவல் நகர் பி. மகாலிங்கம் (மாலி) மல்லிகையில் 'மலையகத் தபால்' என்ற தலைப்பில் பல இலக்கியத் தகவல்களை உள்ளடக்கித் தொடர்ச்சியாக இலக்கியக் கடிதங்கள் எழுதினார்.

'இன்சான்' என்ற பத்திரிகையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் எழுதியது போல, 'மல்லகை' இதழும் களம் அமைத்துக் கொடுத்ததன் பலனாக நாடளாவிய ரீதியில் பல முஸ்லிம் எழுத்தாளர்கள் வளர்ச்சியடைந்தார்கள்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வெளியாகிக் கொண்டிருக்கும் 'மல்லிகையை ஒருவர் ஆய்வு செய்தால், நிச்சயமாக அது இன, மத, மொழி, பிராந்திய வேறுபாடின்றி, ஒரு தேசிய இலக்கிய சஞ்சிகையாக வெளிவருவதை அவதானிக்கலாம். அதுவே அதன் சிறப்பம்சமாகும். மலையகத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பம் முதல் இன்று வரை கலை இலக்கியத் துறைக்குக் கணிசமான பங்களிப்புச் செய்த இலக்கியக் கர்த்தாக்களின் புகைப்படங்கள் மல்லிகையின் அட்டைப்பட கௌரவத்தைப் பெற்றிருக்கின்றன. பொதுவாக நோக்கினால் மல்லிகையின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முரண்பட்டவர்களும் இலக்கியத் துறைக்குப் பங்களிப்புச் செய்தவர்களின் புகைப்படங்கள் மல்லிகையின்

அட்டையில் பிரசுரம் பெறத் தவறவில்லை.

மல்லிகையை நான் எப்பொழுதும் ஒரு 'சிறு சஞ்சிகை' என்ற அடைமொழிக்குள் வைத்து நோக்குவதில்லை. மல்லிகை எமது நாட்டின் தலை சிறந்த மூத்த இலக்கிய சஞ்சிகை என்பதே எனது கணிப்பீடாகும்.

மல்லிகை நீண்ட காலமாக தமிழ் நாட்டின் தரமான எழுத்தாளர்களுக்குப் போய்ச் சேருகிறது என்பதில் புதுமையில்லை. ஆனால் அண்மைக் காலமாக மல்லிகை பல வெளிநாடுகளுக்கும் செல்வதால் அதற்கு ஒரு தனி சர்வதேசப் புகழாரம் வந்து கொண்டிருக்கிறது என்று கூறுவதில் மிகையில்லை என்றே நினைக்கின்றேன். ஆசிரியரது ஐரோப்பியப் பயணமும் அதைத்தான் நிரூபிக்கின்றது.

இனி, 'இரவின் ராகங்கள்' என்னும் எனது சிறுகதைத் தொகுதி மல்லிகைப் பந்தல் வெளியீடாக 1987ம் ஆண்டு வெளியாகியது. அந்த ஆண்டின் யாழ் இலக்கிய வட்டத்தின் பரிசும் கிடைத்தது. இதன் இரண்டாம் பதிப்பு மல்லிகையின் ஊடாக 1990ம் ஆண்டு தமிழ் நாட்டில் நியூ செஞ்சரி புக் ஹவுஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

மீண்டும் 1960-களைச் சிந்தித்துப் பார்க்கும் போது, மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, டாக்டர் நந்தி ஆகியோரின் விருப்பத்திற்கு இணங்க, நாவல் நகரில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கிளையொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ்வைபவம் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மண்டபத்தில் வெகு விமரிசையாக, நடைபெற்றது. மறைந்த 'ஆத்மஜோதி' ஆசிரியர் நா. முத்தையா அவர்கள் இவ்வைபவத்தை நடாத்துவதற்குப் பெரிதும் உதவினார். பெருந் திரளான இலக்கிய நெஞ்சங்களின் மத்தியில், மல்லிகை ஆசிரியரின், இளம் இலக்கிய ஆர்வலர்களுக்காக நிகழ்த்திய ஊக்குவிப்பு உரை, ஒரு புதிய இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. அதுவே மல்லிகை ஆசிரியரின் முதல் மலையக விஜயம். முதன் முதலாகத் தேயிலைச் செடிகளைக் கண்ணுற்று அதற்குள் முடங்கிக் கிடக்கும் தோட்டத் தொழிலாளர்களின் அவல வாழ்க்கையை நேரடியா தரிசித்தார்.

''ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்''

என்ற மல்லிகையின் இலட்சிய வரிகளே அப்பொழுது எனது ஞாபகத்திற்கு வந்தது.

மல்லிகை ஆசிரியரின் உலகளாவிய பார்வையில் சாதி, மத, இன, மொழி, பிராந்திய வேறுபாடுகள் அனைத்தும் தவிடுபொடியாகின்றன

என்பதை நான் நேரடியாகவே கண்டிருக்கின்றேன்.

நாம் 1960 தொடக்கம் 1987 வரை மானுடநேய பூர்வமாகவே பழகி வந்திருக்கிறோம். 1987ம் ஆண்டு எனது 'இரவின் ராகங்கள்' சிறுகதைத் தொகுப்பு வேலைகள் ஆரம்பித்த போதுதான் எனது தாய் மொழி மலாய் என்பதை அறிந்து பிரமித்துப் போனார், அவர்.

இலங்கை நாட்டின் இலக்கிய உயற்சிக்காக மல்லிகை ஆசிரியர் என்னும் தனிமனிதனின் பல தஸாப்த அர்ப்பணிப்பின் பரிணாம வளர்ச்சியே மல்லிகையும் மல்லிகைப் பந்தலும். இதுவே யதார்த்தமாகும். ஈழத்தைப் பொறுத்தவரை இதுவொரு அரிய இலக்கியப் பங்களிப்பு.

மல்லிகை என்னும் வாசனைப் பூ ஒரு முக்கிய வானவரின் வியர்வையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டதென்று அதற்கு ஓர் இஸ்லாமிய ஐதீகம் உண்டு.

மலையகத்தவர்களான எங்களை எதுவிதமான குறுகிய நோக்கமும் பார்க்காது அரவணைத்து, எங்களுக்கு ஓர் இலக்கிய ஆசானாகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர் ஜீவா. மல்லிகையின் ஆஸ்தான எழுத்தாளராக மலையக எழுத்தாளர்களை மதிப்பவர் இவர். இத்தகைய ஒரு இலக்கிய நெஞ்சத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலக்கிய கலாநிதி என்ற பட்டத்தை தவிர்த்து முதுகலை மாணிப் பட்டத்தை வழங்கியது என் போன்றவர்களின் நெஞ்சை பினையச் செய்து நோக வைத்து விட்டது. அவரது தகுதிக்கும் தகைமைக்கும் அமைய இலக்கிய கலாநிதிப் பட்டமே அவருக்குப் பொருந்தும். எனவே ஜீவா யாழ்பாணப் பல்கலைக் கழகம் கொடுத்த பட்டத்தை நிராகரித்ததை ஆதிரிப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

*கொழும்பு - 9.*

# மல்லிகை ஜீவாவின் தனித்துவம்

*சுதாராஜ்*

மல்லிகை 275 வது இதழ் தலையங்கக் கட்டுரையில், கௌரவப் பட்டம் நிராகரிப்பு சம்பந்தமான சில மனப் பதிவுகளை மல்லிகை ஆசிரியர் எழுதியிருக்கிறார். யாழ் பல்கலைக் கழகம் வழங்க முன் வந்த இலக்கிய முதுமாணிப் பட்டத்தைத் தான் ஏற்காமல் விட்டதற்குரிய காரணங்களை நிதானமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். இது தொடர்பாக பத்திரிகைகள் மற்றும் வானொலி போன்ற ஊடகங்களில் பலரது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் ஏற்கனவே வெளிவந்தன. அவற்றையொட்டித்தான் தனது தரப்பு நியாயத்தை இன்னொருமுறை தெளிவுபடுத்தும் முகமாக அவர் இக் கட்டுரையை எழுதியிருக்கக்கூடும்.

இச் சர்ச்சையில் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன. பல புதிய செய்திகள் வெளிவந்தன.

இலக்கிய சேவையை கௌரவிக்க வழங்கப்பட்ட முதுமாணிப் பட்டம் ஒரு கல்வித் தகைமை சார் பட்டமெனவும், ஆனால் இலக்கிய கலாநிதிப் பட்டமே வழங்குவது வழக்கம் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. முதுகலை மாணிப் பட்டம் வழங்க எடுத்த முடிவுக்கு பல்கலைக் கழகத்தினரின் பக்கத்தில் ஏதாவது நியாயம் இருக்குமாயின், அதற்கு அவர்களிடமிருந்து சரியான விளக்கம் கிடைக்கவில்லை. இதற்கெல்லாம் தாங்கள் பதில் சொல்லத் தேவையில்லை என அவர்கள் கருதியிருக்கலாம். ஆனால் இந்தச் செய்திகள் குழப்பத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. பல்கலைக் கழகத்தைக் குறை கூறுவதற்காக இப்படி எழுதவில்லை. யாழ் பல்கலைக் கழகம் தமிழ் மக்களின் தலைநிமிர் கல்விக் கழகமாகும். இதற்குக் களங்கம் ஏதேனும் ஏற்படக்கூடாது.

இலக்கியகாரருக்கு அல்லது வேறு தொண்டு செய்பவர்களுக்கு

வழங்கப்படும் கௌரவப் பட்டம் என்ன அடிப்படையிற் தீர்மானிக்கப்படுகிறது என்று தெரியவில்லை. தகுதி அல்லது தரத்தின் அடிப்படையிலானால், இவற்றை நிர்ணயிப்பது யார்? குறிப்பிட்ட ஒரு துறையில் ஒருவர் ஆற்றும் மேன்மையான பணியை அல்லது சாதனையைக் கௌரவித்து, பல்கலைக் கழகம் வழங்கும் பட்டங்களுக்கு முதுகலைமாணி எனவும் கலாநிதி எனவும் தரநிலை வித்தியாசம் செய்யப்படுமாயின் அதை நிர்ணயிப்பதற்கு ஏதோ ஒரு 'தகுதி' பார்க்கப்படுகிறது என்றே தோன்றுகிறது. யாழ் பல்கலைக்கழகம் ஏற்கனவே பலருக்கு கௌரவக் கலாநிதிப் பட்டம் வழங்கியிருக்கிறது. அவர்களிலிருந்து மல்லிகை ஆசிரியர் ஜீவா எந்த அளவில் தரத்திலும் தகுதியிலும் குறைவுடையவராயிருக்கிறார்?

தமிழ் இலக்கிய உலகில் (அது இலங்கை இந்தியா கடந்து உலகம் முழுதும் அடங்கலாக) மல்லிகை ஜீவாவை - அவரது இலக்கியப் பணியை அறியாதவர்கள் இல்லை. சமகாலத்து ஈழத்தமிழ் இலக்கியத்தின் அடையாளமாகக் கணிக்கப்படுபவர், அவர். ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர் ஓர் அத்தியாயம். எழுத்தாளர், இதழாசிரியர், பதிப்பாசிரியர், இலக்கியப் பேச்சாளர் என அந்த அத்தியாயத்திற்குப் பல பக்கங்கள் உண்டு. அவரது இலக்கிய சேவையை மதித்துக் கௌரவிக்க யாழ் பல்கலைக் கழகம் முன்வந்தது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்குமுரிய விஷயமெனினும், அது இலக்கியக் கலாநிதிப் பட்டமாக இருந்திருப்பின் பொருத்தமாயிருந்திருக்கும்.

அவர் தமிழ் இலக்கியத் துறைக்கு ஆற்றிய பணிகள் குறைத்து மதிப்பிடக்கூடியவையல்ல. இலக்கியத் தரமான ஒரு தமிழ் சஞ்சிகையை 275 வது இதழ்கள்வரை கொண்டு வருவது சாதாரணமான விஷயமல்ல. . பெரிய கல்விமான்கள், பொருளாதார வசதியுடைய இலக்கிய ஆர்வலர்கள் அல்லது பத்திரிகை நிறுவனங்களாற்கூட இதனைச் சாதிக்கமுடியவில்லை. ஆனால், ஜீவாவுக்குச் சாத்தியப்பட்டிருக்கிறது. 36 ஆண்டுகள் மனம் சோரா அர்ப்பணிப்பு உணர்வுடன் அவர் ஆற்றும் சேவையை தமிழ் உலகம் கௌரவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மல்லிகையின் பல ஆண்டு மலர்களை தயாரித்து வெளியிட்டிருக்கிறார், ஜீவா. அவ்வப்போது பிரதேச சிறப்பு மலர்களாகவும் மல்லிகை வெளிவந்திருக்கிறது. புலம்பெயர் தமிழர்களின் இலக்கியப் பணியை மதித்து ஆஸ்திரேலிய நாட்டுச் சிறப்பு மலரையும் அண்மையில் வெளியிட்டிருக்கிறார். உலகெங்குமுள்ள ஈழத்தமிழ் இலக்கியகாரர்களுக்கும் அவர்களது கருத்துக்களுக்கும் தளமாகவும், களமாகவும் மல்லிகையில் இடமளித்து அவர்களை ஊக்குவிப்பதில் தனி ஆர்வம் கொண்டவர், ஜீவா. தனது கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக் கொண்ட விஷயங்களுக்கும் மல்லிகையில் இடமளிக்கும் பண்பு அவரிடமுண்டு. இலக்கியத்திற்குப் பங்களிப்பு செய்த பேர் பெற்ற எழுத்தாளர்களையும் மற்றும்

கலைஞர்களையும் ஒவ்வொரு மல்லிகையிலும் அட்டைப் படத்துடன் அறிமுகம் செய்து கெளரவித்திருக்கிறார். மல்லிகைக்கு விஷயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, பேராசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்கள் முதற்கொண்டு இளம் எழுத்தாளர்வரை தேடித் தேடிச் சென்று அணுகுவது அவர் வழக்கம். இது எந்தச் சுயநல நோக்கும் கொண்டு அவர் செய்யும் காரியமல்ல. இதற்காக அவர் மனோ ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆற்றியிருக்கக் கூடிய உழைப்பு சும்மா கொச்சைப்படுத்திப் பேசிவிட்டுப் போகக்கூடியதல்ல. அட்டைப் படம் முதல் மல்லிகையில் இடம் பெறும் விஷயங்கள் அனைத்தும் இலக்கிய ஆர்வலர் முதல் பல்கலைக் கழக மாணவர் வரை சகல தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது.

டொமினிக் ஜீவா அவர்கள் மல்லிகைப் பந்தல் மூலம் பல நல்ல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு தமிழுக்குப் பெருமை சேர்க்கும் பணிகளை ஆற்றும் ஜீவா அவர்கள் மதிப்புக்குரியவர் என்பதை ஏளனம் செய்வது கவலைக்குரியது. 'கலாநிதிப் பட்டம்தான் தனக்கு வேண்டும்' என டொமினிக் ஜீவா அவர்கள் வலிந்து கேட்டது போல அவரது பணிகளைக் கொச்சைப் படுத்தி இழிவு செய்து சிலர் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். அபிப்பிராயம் தெரிவிப்பது வேறு, காழ்ப்புணர்ச்சிகளைத் துப்புவது வேறு. சகல கோணங்களிலுமிருந்து கருத்துக்களைத் தெரிவிப்பது ஆரோக்கியமான விஷயம்தான். ஆனால், இது ஆரோக்கியமானதாகத் தென்படவில்லை. தங்களது காழ்ப்புணர்வை வெளிப்படுத்துவதற்கு சிலர் இந்தச் சர்ச்சையை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் போலத் தோன்றுகிறது. இது சரியல்ல.

இது ஓர் இலக்கியகாரனுக்கு வழங்கப்பட்ட கெளரவப் பட்டம் பற்றிய தனிப்பட்ட சர்ச்சை எனக் கொள்ளாமல், இவ் விஷயம் சம்பந்தமாக பேராசிரியர்கள், இலக்கிய விமர்சகர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் ஆகியோர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் பயனுள்ளதாயிருக்கும்.

# காழ்ப்புணர்ச்சி இல்லாது இதைப் பார்க்க வேண்டும்!

*மொஹிடீன் ராஜா*

அண்மையிலே மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களுக்கு யாழ் பல்கலைக் கழகம் முதுகலைமாணிப் பட்டம் வழங்குவதற்கு அறிவித்தும் அதனை உரிய காரணங்களால் ஏற்க முடியாது என டொமினிக் ஜீவா அவர்கள் மறுத்ததும் அனைவரும் அறிந்த விஷயம் தான். இதனைத் தொடர்ந்து ஜீவா அவர்களை 'ஸ்கேன்' பண்ணிப் பார்த்து, அவருடைய பலவீனங்கள் யாவற்றையும் கண்டு பிடித்து, அவர் பட்டம் பெறத் தகுதியற்றவர் என்று நிறுவி விடும் தீர்மானத்தில் ஒரு சிலர் இறங்கியுள்ளனர். (இதிலே பெரும்பாலானவை ஒரே நபர் பல்வேறு பெயர்களிலே எழுதிய கட்டுரைகள் என்பது எனது அபிப்பிராயம்) இது இலங்கையில் மட்டுமல்ல தமிழகத்தில் கூட அடிக்கடி நிகழும் செயலாகிவிட்டது. ஒருவருக்கு ஒரு பட்டம் கொடுபடப் போவதாக அறிவித்து - விட்டாலோ கொடுத்துவிட்டாலோ இவ்வாறு அவரைப் பற்றிக் 'கதறித் திரிபவர்கள்' புறப்பட்டு விடுகிறார்கள். அண்மையில் தி. க. சி. அவர்கள் சாஹித்ய அக்காடமி விருது பெற்ற வேளை அவருக்கு எதிராக எழுத்துப் போராட்டம் தொடுத்த பேனா மன்னர்களைப் பற்றி நாம் அறிவோம்.

அட்டைப் படத்தில் தனது உருவம் பதியப் படவில்லை என்ற ஆதங்கம் ஒருவருக்கு. இவையெல்லாம் இலக்கிய உலகில் தெரிந்த சங்கதிகள்! தான்.

டொமினிக் ஜீவா அவர்களது 'மனிதம்' பற்றி பாரபட்சமற்ற முறையில் நோக்குவோம். இதற்கு நான் என்னையே உதாரணமாக எடுத்துக் கொள்கின்றேன். நான் டொமினிக் ஜீவா அவர்களைச் சந்திக்கும்

பொழுதெல்லாம் ஏதாவது புத்தாக்கத்துக்கான ஆலோசனைகளைக் கூறத் தவறமாட்டார். அவரது தெண்டிப்பின் பேரிலே எழுந்ததுதான் எனது 'நேற்றைய சுகந்தம்' என்ற நாவலாகும். அப்பொழுது வலுக்கட்டாயமாக யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப் பட்ட முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவன், நான். பல சிரமங்களுக்கு மத்தியில் அகதிகளாகப் புத்தளம் மாவட்டத்தில் நெருக்கடிகள் மத்தியில் குடியேறினோம். இடையே சொல்ல வொண்ணாத துயரங்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான் அகதியாகிப் பல்வேறு இன்னல்களின் மத்தியிலும் ஒரு பட்டதாரிகளாகியது பற்றிச் சிலாகித்துக் கூறுவார். நான் எழுதும் பாட உசாத்துணை நூலாக்க முயற்சியைப் பாராட்டுவதோடு, ''பாடசாலை நூல் எழுத்தாளன், இலக்கியப் படைப்பாளியை விழுங்கிவிடுவான். கவனமாய் இருக்க வேண்டும்" என்ற எச்சரிக்கையையும் செய்வார்.

டொமினிக் ஜீவா அவர்கள் புத்தளம் வந்தபோது இங்குள்ள இளம் எழுத்தாளர்கள் யாவரும் அவரை மொய்த்தனர். அப்பொழுது அனைவருக்கும் ''எழுதுங்கள், எழுதுங்கள், நிறைய எழுதுங்கள். எழுத எழுதத்தான் படைப்புச் சிறக்கும்" என்று கூறி உற்சாகப் படுத்தினார். இவ்வாறான பண்பு எத்தனை பேருக்கு வரும்? 'எழுதினேன், பிரசுரித்தேன்' என்ற முறையில் அவர் இருந்திருந்தால் இன்று பல நூறு சிறுகதைகளை எழுதிக் குவித்திருப்பார். ஆயினும் படைப்பாளிகளை உருவாக்க வேண்டும், ரசனையான சுவைஞர்களை பெருக்க வேண்டும், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கட்டுரைகள், தொடர்கள் கூட விரும்பிச் சுவைக்கப் படல் வேண்டும் என்ற நோக்கிலேதான் 'மல்லிகை' மாசிகையைத் தொடங்கினார். தனது நோக்கத்தில் வெற்றியும் பெற்றுள்ளார்.

எழுத்தாளர் சுதாராஜ் அவர்கள் அடிக்கடி தனக்கும் டொமினிக் ஜீவா அவர்களுக்கும் இடையில் அறிமுகம் ஏற்பட்ட விதத்தைப் பற்றிக் கூறுவார். தன் வீடு தேடி வந்த ஜீவா தன்னைப் பாராட்டி, மல்லிகையில் எழுதுமாறு ஊக்குவித்ததாகக் குறிப்பிடுவார். இத்தகைய பெருந்தன்மை கொண்டவர் மல்லிகை ஜீவா அவர்கள்.

தி. க. சி. அவர்கள் இளம் எழுத்தாளர்களுக்குத் தபால் அட்டை மூலமாகப் பாராட்டுத் தெரிவிப்பார் என்று குறிப்பிடுவார்கள். டொமினிக் ஜீவா அவர்களும் அத்தகைய 'மனிதம்' கொண்டவர்தான். கடித மூலமும் நேரில் சென்றும் மற்றைய படைப்பாளிகளை வாழ்த்தவும் உற்சாகப்படுத்தவும் தவறுவதில்லை. இதனை நான் என்னை அடிப்படையாக வைத்தே கூறுகின்றேன். ஒரு வாரத்துக்கு முன்பு கூட ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். டொமினிக் ஜீவா அவர்களைப் பற்றிக் குறை கூறித் திரியும் புனைப் பெயர் மன்னர்களிடமும் மற்றவர்களிடமும் இத்தயை பண்பைக் காண முடியுமா?

பிற எழுத்தாளரைப் பாராட்டுதலும் இலக்கிய ஆர்வமுள்ள சுவைஞர்களை உருவாக்குதலும், படைப்பிலக்கியவாதிகளை உருவாக்குவதும் ஓர் உன்னத இலக்கியவ்வாதியின் இலட்சியங்களாய் இருக்கும். டொமினிக் ஜீவா அவர்களிடம் இப்பண்புகள் நிறைந்துள்ளன.

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த, பல சமயங்களையும் சேர்ந்த இலக்கிய வாதிகளின் புகைப் படத்தை மல்லிகை அட்டையில் தாங்கி, அவர்களது இலக்கியச் சேவை பற்றிய குறிப்புகளையும் கொடுத்து அவர்களைக் கௌரவிக்கும் டொமினிக் ஜீவா அவர்களின் பண்பு இருக்கின்றதே அது ஒன்றே போதுமே பட்டம் பெறும் தகுதியாகக் கணிக்கப்படுவதற்கு.

இத்தகைய ஜீவா அவர்களின் உயர்வுகளை விட்டு விட்டு அவருடைய குறைகளை மட்டும் ஏன் அலசப் புறப்படுகிறார்கள்? குறை யாரிடம் தான் இல்லை? மகாத்மா காந்தி கூட, தனது ‘சத்திய சோதனை’ யில் தனது குறைகளைப் பற்றிக் குறித்துள்ளார். இதனைப் புரிந்து கொள்ளாமல் குறை பிடிக்கப் புறப்படுவதில் என்ன நியாயம் இருக்கின்றது? குறைகள் அற்றவர்களுக்குத்தான் பட்டம் வழங்க வேண்டும் என்றால் இவ்வுலகில் யாருமே பட்டம் பெற்றிருக்க மாட்டார்கள்.!

எது எப்படியோ! டொமினிக் ஜீவா அவர்களுக்குக் கலாநிதிப் பட்டம் கிடைத்திருந்தால் பல்லாயிரம் உள்ளங்கள் மகிழ்ச்சியடையும் என்பதென்னவோ மறுக்க முடியாத உண்மை.

# கௌரவப் பட்டத்துக்கான அளவுகோல் என்ன?

மா. கருணாநிதி
கொழும்பு பல்கலைக் கழகம்

பல்கலைக் கழகங்கள் கௌரவப் பட்டங்களை வழங்கி வருதல் இன்று வழக்கமாகி விட்டது. சமூக, பொருளாதார கலை இலக்கியத் துறைகளில் சிறப்பானதும் பயனுள்ளதுமான பணிகளை ஆற்றியோர் இத்தகைய சிறப்புக் கௌரவங்களைப் பெற்று வருதல் போற்றுவதற்குரிய செயலாகும். ஒரு பல்கலைக் கழகம் சார்ந்துள்ள சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமையுமாகும்.

கடந்த பட்டமளிப்பின் போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலக்கிய வாதியும் மல்லிகை ஆசிரியருமாகிய டொமினிக் ஜீவா அவர்களுக்குக் கலை முதுமாணிப் பட்டம் வழங்கியது. இது வரவேற்கத்தக்க விடயமாக இருந்தது. ஆயினும் ஜீவா அவர்களின் இலக்கிய சேவையை நன்கு புரிந்தவர்கள் மத்தியில் கௌரவ கலைமுதுமாணிப் பட்டம் பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது. பல்கலைக் கழகம் வழங்கிய பட்டமொன்றினை ஜீவா ஏற்க மறுத்தமைக்குப் பலரும் பல்வேறு காரணங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவப் பட்டங்களை வழங்கும்போது அடிப்படையாகக் கொள்ளும் அளவுகோல்கள் எவை? டொமினிக் ஜீவாவுக்கு உயர் கௌரவப் பட்டத்தினை வழங்குவதற்கான பின்னணி மிகவும் விசாலமானது. இலக்கியத்தின் மூலம் முற்போக்குச் சிந்தனையை யாழ்ப்பாண மண்ணில் முன்னெடுத்துச் சென்றவர். மல்லிகையைத் தளமாகக்

கொண்டு பல எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு வித்திட்டவர். அவர்களை நாடறியச் செய்தவர். பல்வேறு இடையூறுகளின் மத்தியிலும் ஏறக்குறைய 35 ஆண்டுகளாக மல்லிகை மாதாந்த சஞ்சிகையை இலக்கிய உலகிற்குத் தந்து கொண்டிருப்பவர். இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமல்லாது, தமிழ் மக்கள் பரந்து வாழும் இடங்களிலெல்லாம் அறியப்பட்ட ஒருவர். இவ்வாறு பட்டியல் இன்னும் நீண்டுகொண்டு செல்லும் இந்தவகையில் அவருக்கு வழங்கப்பட்ட கௌரவப்பட்டமானது நிதானமான முடிவுகளுடன் கூடியதல்ல என்றே எண்ணத் தோன்றுகிறது.

இவ்விடயம் பற்றிய தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு, பல்கலைக் கழக உயரவைக்குப் பல சிரமங்கள் இருந்திருந்தால், அபிப்பிராயங்களை வழங்குவதற்குப் பல்கலைக் கழகத்தோடு தொடர்புடைய, இலக்கிய ஈடுபாடுள்ள மூதறிஞர்கள் பலர் பல்கலைக் கழகத்திற்கு வெளியே இருக்கின்றனர். அவர்களையும் கலந்தாலோசித்து நல்ல முடிவுக்கு வந்திருக்கலாம். அவசரப் பட்டதன் விளைவு இவ்வாறான அறுவடையைத் தந்துள்ளது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மறைந்த எழுத்தாளர் டானியலின் பங்களிப்பினை யாரும் மறந்திட முடியாது. தலித் இலக்கியத்தின் முன்னோடியென மதிக்கப்படுபவர் அவர். அவருடைய இலக்கியப் பணியினைக் கௌரவிப்பதற்கு யாழ்ப்பாணச் சமூகம் குறிப்பாக யாழப்பாணப் பல்கலைக் கழகம் மறந்து விட்டது. அவருக்குரிய சரியான கௌரவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வழங்கியிருக்குமாயின், டொமினிக் ஜீவாவுக்கு வழங்க வேண்டிய பட்டம் பற்றித் தெளிவான முடிவுக்கு வந்திருக்கலாம். இது அளவுகோல் பற்றிய தெளிவின்மையையே உணர்த்தி நிற்கிறது.

ஆயினும், ஜீவாவின் பட்ட ஏற்பு மறுப்பு ஒரு விடயத்தைத் தெளிவு படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் வழங்கப்படும் கௌரவப் பட்டங்கள் திட்டவட்டமான அளவுகோல்கள் இன்றி மேற்கொள்ள தீர்மானிக்க முடியாது என்ற உறுதிப்பாட்டினைத் தந்துள்ளது.

*23 – 12 – 2001*

# கடிதங்கள்

நண்பர் டொமினிக் ஜீவா அவர்களுக்கு;

மல்லிகையில் இவ்வளவு காலமும் வெளிவந்த ஆசிரியத் தலையங்களுள், கௌரவப் பட்டம் வழங்கப்பட்டமை தொடர்பாகச் சென்ற இதழில் வெளியான ஆக்கமே சிறப்பானதென்பதும் அது அறிவும் உணர்வும் தெளிவும், நியாயமும் தர்க்க ரீதியான முறைமையும் கொண்டுள்ளதென்பதும் எனது கருத்து மட்டுமல்ல சக நண்பர்களின் கருத்துமாகும்.

*செ. யோகராசா*
*மட்டக்களப்பு*

---

திரு. ஜீவாவுக்கு;

நலம். தொழில் ரீதியான அழுத்தங்கள் காரணமாக இப்போதெல்லாம் உங்களைச் சந்திப்பது அரிதாகிவிட்டது. அதனால் தான் இந்தக் கடிதம்.

யாழ் பல்கலைக் கழகம் ஜீவாவுக்குப் பட்டம் கொடுக்க இருக்கின்றதே என்று கேள்விப்பட்டதும் மனம் சந்தோஷத்தில் திளைத்தது. ஆனால், உண்மையில் பட்டம் அறிவிக்கப்பட்டபோது எஞ்சியது சந்தேகம் தான்.

ஜீவா, ஆக்க பூர்வமான படைப்பாளி, கொண்ட கருத்துக்களுக்காகக் களம் இறங்கியவர். அடுத்த தலைமுறைக்கும் இந்தத் தலை முறைக்கும் சேர்த்தே எழுதியவர் என்பதெல்லாம் யாழ் பல்கலைக் கழகப் பட்டத் தேர்வுக் குழுவுக்குப் புரியாததல்லவே.

எனவே இலக்கியக் கலாநிதிப் பட்டம் அளிப்பதற்கு இதையெல்லாம் கடந்த சில 'மகோன்னதங்கள்' தேவைப்படுகின்றனவோ என்று அச்சமாக

இருக்கின்றது. அதனால் தானோ யாழ் பல்கலைக் கழகம் திரு. டானியலையும் மறந்தது.

போகட்டும், இப்படியாவது சில முகமூடிகள் கிழிகின்றனவே என்று சந்தோஷப்படுவோம். ஆனால் மாற்றங்கள் தொடருமென்பது உலக நியதி. இதற்கு எவையுமே விதிவிலக்கல்ல.

*அன்புடன்*
*மு. தயாபரன்*
*வெள்ளவத்தை*

---

மதிப்பிற்குரிய திரு. டொமினிக் ஜீவா
வணக்கம்.

என் இருத்தலின் மையத்தை ஆட்டம் காணச் செய்தது தங்களது சுயசரிதை. தங்கள் M. A. பட்டம் சம்பந்தமாகத் தங்கள் முடிவு சரி என்பதே எனதும் அபிப்பிராயம். அதன் விளைவுதான் நவம்பர் 'ஞானம்' இதழில் எனது கவிதை.

*கண்டி*
*பெனி யே.ச.*

---

மல்லிகை ஆரம்ப காலத்தில் இருந்து இலங்கை எழுத்தாளர்கள் கௌரவிக்கப் படவேண்டும் - ஈழத்து எழுத்தாளர்களுக்குப் பல்கலைக் கழகங்கள் கௌரவம் தரவேண்டும் - இதுபோன்ற குரல் இடைவிடாது ஒலித்துக் கொண்டேயிருந்தது.

இப்படி அடிக்கடி கூறுபவருக்கு அவரின் வாயை அடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஜீவாவுக்கு முதுகலை மாணிப் பட்டம் வழங்க யாழ். பல்கலைக் கழகம் முடிவெடுத்திருக்க வேண்டும்!

இது பிள்ளையார் பிடிக்க குரங்காகிய கதையாய் முடிந்தது.

உண்மையில் மறைந்த டானியல் அவர்களுக்கு எழுத்தாளர் என்ற முறையில் கௌரவக் கலாநிதி அவர் உயிரோடிருந்த காலத்தில் வழங்கப்

பட்டிருக்க வேண்டும்! ஏன் இந்தத் தாமதம்?

கரிசல் காட்டு இலக்கியம் படைத்த கி. ராஜநாராயணனுக்குத் தமிழ் நாட்டில் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

டானியலும் அதே போன்று ஒவ்வொரு கிராமத்திலும் மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களில் ஒருவராகவே வாழ்ந்து இலக்கியம் படைத்தவர். இந்த விபரம் பல்கலைக் கழக கனவான்களுக்குத் தெரியாமலிருக்க நியாயமில்லை!

அது போகட்டும் உயிருடன் வாழும் ஜீவா ஏன் இவர்களின் கண்களுக்குத் தட்டுப் படவில்லை! தன் குடும்ப சுகங்களை இழந்து தாமரை இலைத் தண்ணீர் போல குடும்பப் பாரங்களில் மூழ்காமல் ‘இலக்கியம்! இலக்கியம்! இலக்கியம்!’ எனக் குரல் கொடுத்துத் தெருவில் மல்லிகை விற்கப் போகும் போது இளசுகளால் அவமானப் பட்டும், விடாப் பிடியாக மல்லிகையை 36-ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது சாதாரண விசயம் அல்ல.

பணம் உள்ளவர்கள் பொழுது போக்காகப் பத்திரிகை நடத்துவது வேறு விசயம்.

கையில் பணமின்றித் தன்னம்பிக்கையை மூலதனமாகக் கொண்டு, சாதி ஒடுக்கு முறைக்கு மத்தியில் ஜீவா போன்றவர்கள் வளர்ந்தது பாறாங்கற்களுக்கு மத்தியில் வேப்பங் கன்று ஒன்று வளர்ந்ததற்கு ஒப்பாகும்!

வாழும்போது கவுரவிக்கப் படுவது மனிதப் பண்பு. பாரதியார் இறக்கும் போது 11-பேர்தான் உடன் இருந்தனராம். இன்று மகாகவி பாரதியாகக் கொண்டாடுகின்றோம்.

தமிழின் பெருமையைக் கூட தமிழரல்லாத ஒரு பெரியார் சொன்னதற்குப் பிறகு தான் தமிழன் விழித்துக் கொண்டான்!

திருக்குறளின் மகிமையைக் கூட, வா. வே. சு. ஐயர், பெரியார் ஈ. வெ. ரா போன்றோர்தான் சாதாரண மக்களிடையே பிரச்சாரம் செய்து அறிமுகப் படுத்தினார்கள்.

அன்றுதான் இப்படி என்றால். இன்றும் இந்த நிலையா? வாழும்போதே ஜீவா போன்றோர் கௌரவிக்கப் பட வேண்டும்! அதற்காகப் பொருத்தமற்ற பட்டங்கள் மூலமல்ல அவை சிரிப்பிற்கு இடமளிக்கும்.

ஆகவே தகுதியானவர்களைத் தக்க சமயத்தில் கௌரவிக்கக் கற்றுக் கொள்வோம்.

*எஸ். வீ. தம்பையா*
*கொழும்பு - 11.*

மதிப்பிற்குரிய திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கு,

நலம் நலமறிய ஆவல். நீண்ட நாட்களாக எழுத எண்ணியிருந்த போதிலும், எனது உடல் நிலை சீரற்றிருந்ததன் காரணமாக எழுத முடியவில்லை.

யாழ் பல்கலைக் கழகம் உங்களுக்கு முதுமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்க இருந்ததையும், நீங்கள் அதை ஏற்க மறுத்ததையும் பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அறிந்தேன். உங்களது முடிவு மெத்தச் சரியானதே. கலைஞர்களுக்குக் கௌரவக் கலாநிதிப் பட்டம் வழங்குவதுதான் பல்கலைக் கழக மரபு. அந்த மரபை மீறி யாழ். பல்கலைக் கழகம் உங்களுக்கு முதுமாணிப் பட்டம் வழங்கத் தீர்மானித்ததை எண்ணும் போது ஆச்சர்யமாக இருக்கிறது. கலைஞர்களுக்கு முதுகலைமாணிப் பட்டம் வழங்கப் பட்டுள்ளதாக நான் இதுவரை அறிந்திருக்கக் கூடவில்லை.

ஈழத்தின் இலக்கியக் குரலை உலக அரங்குகளில் ஓங்கி ஒலிக்கச் செய்த உங்களது சேவை குறைவாக எடை போடப்பட்டு விட்டதா?

எப்படியிருப்பினும், இப்பட்டத்தை ஏற்க மறுத்ததன் மூலம் நீங்கள் வழக்கம் போல உங்களது சுயகௌரவத்தை உறுதியாக நிலை நாட்டியிருக்கிறீர்கள். பல்கலைக் கழகப் பட்டம் தருவதற்கு எண்ணுவதற்கு முன்பே மானுடப் பல்கலைக் கழகத்தில் கௌரவ கலாநிதிப் பட்டம் சூட்டி கௌரவிக்கப் பட்டவர் நீங்கள். உங்களுக்கு முதுகலை மாணிப் பட்டம் மிகச் சிறிதே.

*கெகிறாவ*

*ஸஹறானா*

# கௌரவப் பட்டமும் ஜீவாவும்

செங்கை ஆழியான்
க. குணராசா

அன்புள்ள தோழர் ஜீவாவுக்கு,

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தங்களுக்கு வழங்கிய இலக்கிய முது தத்துவ மாணி என்ற பட்டத்தையும், தாங்கள் அதனை ஏற்காது நிராகரித்தமையையும் காரணங்காட்டிப் பல்வேறு வாதப் பிரதி வாதங்கள் பேச்சிலும் எழுத்திலும் பரவலாக அடிபடுகின்ற நிலையில், தெரிந்தோ தெரியாமலோ என்னையும் அச்சர்ச்சையில் சிலர் இழுத்து விட்டிருப்பதனால் இக்கடிதத்தை எழுதுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. பல்கலைக் கழகப் பட்டங்கள் இருவகைகளில் வழங்கப் படுகின்றன. ஒன்று ஒரு துறைசார் ஆய்வின் மூலம் தம்மை அறிஞர்களாகக் காட்டி நிருபிப்பவர்களுக்கு வழங்கப்படும் கல்விசார் பட்டங்கள்; இரண்டு ஏதோ ஒரு துறையிலோ பல துறைகளிலோ ஆய்வுகள் செய்து, அல்லது சேவைகள் புரிந்து தம்மைச் சமூகத்திற்கு வெளிப்படுத்திய நிலையில் பல்கலைக் கழகத்தால் அடையாளம் காணப்பட்ட அறிஞர்களுக்கு வழங்கப்படும் கௌரவப் பட்டங்கள். முன்னதில் இனங் காண்பதில் சிக்கல்கள், பிரச்சினைகள் மிக மிக அரிது. பின்னதில் விருப்பு, வெறுப்பு, அறியாமை, அசூகை எனப் பல்வேறு குணவியல்புகள் குறுக்கிடுவதுண்டு. சந்தேகத்திற்கு இடமின்றிச் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் சச்சிதானந்தன் போன்றோருக்கு வழங்கப்பட்ட இலக்கியக் கலாநிதிப் பட்டங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளன. அதேவேளை பல கௌரவப் பட்டங்கள் சொந்த விருப்புக்கிணங்க வழங்கப்பட்டுள்ளன என்ற விடயத்தை மறைத்துவிட முடியாது. மூத்த ஒரு பேராசிரியரால் பீடக்குழு மட்டத்தில் பரிந்துரைக்கப்படும் ஒருவருக்கான கௌரவப் பட்டம், முதவையில்

பரிசீலனைக் குள்ளாகி பேரவைக்கு விதந்துரைக்கப்படுகின்றது. பேரவை அதனைப் பரிசீலித்து அங்கீகரிக்கின்றது. மூன்று மட்டத்தினலும் பரிந்துரைத்த மூத்த பேராசிரியரின் வாதத் திறனும், துணைவேந்தரின் சார்பு நிலையும் தாம் கௌரவப் பட்டத்தை நிர்ணயிக்கின்றன. யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரத்தின் நிர்வாகத்திறன், அரசியல் இராஜதந்திரம் வாய்ந்தது. தட்டவேண்டிய இடத்தில் தட்டி, வெட்ட வேண்டிய இடத்தில் வெட்டி, போற்ற வேண்டிய இடத்தில் போற்றித் தன் கருத்து நிலையை பேரவையிலோ, மூதவையிலோ நிலைநாட்டி விடும் திறன் அபாரமானது. ஈழத்துப் படைப்பாளிகளைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நன்கு அறிந்து வைத்திருக்கிறார். ஈழத்துப் படைப்புலகில் நீங்கள் சிறு கதைத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பு, மல்லிகை சஞ்சிகை மூலம் முப்பத்தாறு வருடங்களாக நீங்கள் ஈழத்து இலக்கியத்திற்கு ஆற்றி வரும் சேவை, மல்லிகைப் பந்தல் மூலம் நீங்கள் வெளியிட்டிருக்கும் நூல்கள் ஈழத்து இலக்கியத்தைத் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் எடுத்துப் பரப்பியிருக்கின்ற பணி இவ்வளவிற்கும் இலக்கிய முது தத்துவ மாணிப் பட்டம் பெருத்தமானதன்று. எந்தவொரு படைப்பாளிகளுக்கும் இப்பட்டம் பொருத்த முடையதன்று. கிழக்குப் பல்கலைக் கழகம் நாடகப் படைப்பாளி குழந்தை சண்முகலிங்கத்திற்கு வழங்கியது போன்ற இலக்கியக் கலாநிதிப் பட்டமே பொருத்தமானது.

பட்டங்களால் பலருக்குப் பெருமை, ஒரு சிலரால் தான் பட்டங்களுக்குப் பெருமை. அந்தப் பெருமையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இழந்து விட்டதெனக் கொள்வோம்.

உங்களுக்குக் கௌரவப் பட்டம் வழங்கப்படுவதிலோ, அதனை நீங்கள் நிராகரிப்பதிலோ என் பங்கு எதுவுமேயில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

*16-12-2001*

# யாழ் பல்கலைக் கழகம் + முதுகலைமாணிப் பட்டம் + டொமினிக் ஜீவா = சில கேள்விகள் சில தெரியாததுகள்!

*தெளிவத்தை ஜோசப்*

கிழக்குப் பல்கலைக் கழகம் - மண்சுமந்த மேனியர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுக்குக் கௌரவ இலக்கியக் கலாநிதிப் பட்டம் அளித்துள்ள செய்தி கேட்ட போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

யாழ் பல்கலைக் கழகத்தின் முதுகலைமாணிப் பட்டத்தை டொமினிக் ஜீவா அவர்கள் மறுத்ததால் ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்களின் பின் விளைவாகவும், இது இருக்கலாம்! கலை இலக்கியம் சாராத வேறு அரசியலாகவும் இருக்கலாம். என்றாலும் இந்த இலக்கியக் கௌரவிப்புச் செயற்பாட்டின் மூலமும், முழுமுதற் காரணமாக நான் கருதுவது கிழக்குப் பல்கலைக் கழகத்தினுள் திருவாளர்கள் மௌனகுரு, ம. செ. மூக்கையா, செ. யோகராஜா, பாலசுகுமார், சி. ஜெயசங்கர், திருமதி. சித்திரலேகா மௌனகுரு என்று இலக்கியம் தெரிந்தவர்கள், இலக்கியம் கற்றவர்கள் இருப்பதுதான்.

காரணம் எதுவாக இருப்பினும் நிகழ்த்தப்பட்டிருக்கும் காரியம் சிறப்பானதும் மகிழ்வுக்குரியதுமே!

கிழக்குப் பல்கலைக் கழகத்தினருக்குப் பாராட்டுக்கள் தெரிவிக்கும் அதே வேளை யாழ் பல்கலைக் கழகம் திரு டொமினிக் ஜீவா விஷயத்தில் ஏன் அப்படி நடந்து கொண்டது என்னும் கேள்வியும் எழவே செய்கிறது.

இலக்கியக் கலாநிதி என்கின்ற கௌரவப் பட்டம் யாழ் பல்கலைக் கழகத்தினால் இதுவரை யாருக்குமே வழங்கப் படவில்லை என்றால் இந்தப் பிரச்சினையே எழுந்திருக்காது.

பண்டித மணி மற்றும் பேராசிரியர் நா. வானமாமலை என்று தொடங்கி, மில்க்வைற் சோப் அதிபர், தங்கம்மா அப்பாக்குட்டி என்று இக் கௌரவப் பட்டம் யாழ் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்டே இருக்கிறது. அப்படி இருக்கையில் திருவாளர் டொமினிக் ஜீவா என்கின்ற ஈழத்தின் இலக்கிய முன்னோடியும், ஈழத்திலும் வெளிநாடுகளிலும் இலக்கியப் புகழ் பெற்றவரும், இலக்கியம் என்கின்ற ஒன்றுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவருமான ஒருவருக்கு இவ் விலக்கியக் கலாநிதிப் பட்டத்தை வழங்குவதில், கௌரவிப்பதில் என்ன சங்கடம் வந்தது யாழ் பல்கலைக் கழகத்தினருக்கு? திடீரென ஏன் இந்த முதுகலை மாணிப் பட்டம்?

1946-ல் தனது சிறுகதைகள் மூலம் எழுத்துலகப் பிரவேசம் செய்தவர் ஜீவா. சுதந்திரன் பத்திரிகையே ஜீவாவின் ஆரம்பகாலப் படைப்புக்களுக்குக் கூடுதலான இடமளித்தது. வீரகேசரி, தினகரன், அவருடைய படைப்புக்களை விரும்பி ஏற்றன.

தமிழகத்தின் சரஸ்வதியில் ஜெயகாந்தனுக்கு அடுத்தபடியாகக் கூடுதலான சிறுகதைகளை எழுதியவர் ஜீவா. 1958 நவம்பர் சரஸ்வதி ஜீவாவின் படத்தை அட்டையில் பிரசுரித்துக் கௌரவித்தது. 1960 ஜூலையில் சரஸ்வதி வெளியீடாக ஜீவாவின் முதல் சிறுகதைத் தொகுதியான 'தண்ணீரும் கண்ணீரும்' வெளிவந்தது. தமிழ்ப்படைப்புகளுக்கான இலங்கை அரசின் முதல் சாகித்திய விருதினைப் பெற்ற நூல் இதுவே!.

அதன் பிறகு 'பாதுகை', 'சாலையின் திருப்பம்', 'வாழ்வின் தரிசனங்கள்', 'டொமினிக் ஜீவாவின் 50 சிறுகதைகள் கொண்ட தொகுதி' என்று சிறுகதைத் தொகுதிகள் வந்தன.

தமிழகத்தின் இலக்கிய ஏடான 'தாமரை' ஜீவாவின் சிறுகதைகளைக் கூடுதலாக வெளியிட்டிருக்கிறது. ஆண்டுக்கொரு தடவை சிறுகதை மலர் வெளியிடும் தாமரை 1968 ஜூலையில் வெளியிட்ட சிறுகதை மலரின் அட்டையில் டொமினிக் ஜீவாவின் படத்தை வெளியிட்டுப் பெருமை செய்தது.

எழுத்தாளராக முகிழத் தொடங்கிய ஜீவா, எது விதமான பக்கத் துணைகளுமின்றித் தன்னுடைய எழுத்தின் பலத்தால் மட்டுமே தன்னை ஒரு படைப்பாளியாக அந்த ஆரம்ப காலங்களில் நிலை நிறுத்திக் காட்டியவர்.

1966 ஆகஸ்டில் மல்லிகை என்கின்ற சிற்றேடு உதயமானது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியினை முற்போக்குச் சிந்தனையுடன் அறிமுகப் படுத்துவதையும் அதற்காக உழைப்பதையுமே பிரதான நோக்கமாகக் கொண்டெழுந்த மல்லிகையின் ஆசிரியர் ஜீவா.

ஈழத்தின் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு நவீன கால எழுச்சியுடன் சின்னமாகத் திகழ்ந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின்

ஆரம்பக் காலத் தூண்களில் ஒன்றாகத் திகழ்ந்தவர் ஜீவா. ஏறத்தாழ 36 வருடங்களாக மல்லிகை என்கின்ற இலக்கியச் சிற்றேட்டின் மூலம் ஈழத்து இலக்கியத்தின் செழுமைக்கும், வளத்துக்கும், பரவலான அறிமுகத்துக்குமான பங்களிப்பினைச் செய்து வருகின்றவர் ஜீவா.

தன்னுடைய 75-வது வயதிலும் மல்லிகையின் 37-வது ஆண்டு மலருக்கான வெளியீட்டுப் பணிகளில் ஒரு இலக்கிய இளைஞனாக சுறுசுறுப்புடன் இயங்கி வருகின்றார்.

1946-லிருந்து 1964-வரை தன் படைப்பின் பலத்தாலும் 64-க்குப் பிறகு ஒரு படைப்பாளன் என்கின்ற தளத்திலிருந்து ஒரு பத்திரிகையாளன் என்கின்ற தளத்துக்கான முன் நகர்வின் மூலம் மல்லிகை ஜீவா என்கின்ற தமிழ் இலக்கியப் பலத்தினையும் பெற்றுக் கொண்டவர் இந்த ஜீவா.

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் மல்லிகை ஜீவா என்று கௌரவப்படுத்தப் படுகின்றவர் இந்த டொமினிக் ஜீவா. மல்லிகை என்கின்ற தளத்தின் மீது கட்டி எழுப்பப் பட்டிருக்கும் ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்கின்ற இலக்கியக் கோட்டை பிரமாண்டமானது. அழிக்க முடியாதது. காற்றுப் புக முடியாத இடமெல்லாம் கலைகள் புகுந்து வரும் என்பதற்கொப்ப இலங்கையின் தேசப்படம் காட்டாத சின்னஞ் சிறிய பிராந்தியங்களில் இருந்தெல்லாம் இலை மறைத்த காய்களாகக் கனிகளாகக் கிடந்த இலக்கியக்காரர்களை மல்லிகை என்கின்ற இலக்கியப் படிகளின் மூலம் உச்சத்துக்குக் கூட்டி வந்து காட்டுகின்ற இலக்கியப் பணியின் சிறப்பு எத்தனை மகத்தானது? மல்லிகை மூலமாக வெளி வந்த இலக்கிய முகங்கள் எத்தனை எத்தனை.

தமிழகத்துத் தாமரையும், சரஸ்வதியும் தன்னுடைய படத்தை அட்டையில் போட்டுக் கௌரவித்ததைப் போல ஈழத்தின் தமிழிலக்கியக் காரர்களைக் கௌரவிக்க வேண்டும், கனம் பண்ண வேண்டும் என்று விரும்பியவர் - ஆசைப்பட்டவர் ஜீவா. ஈழத்துப் படைப்பாளிகளையும் இருந்திருந்து தமிழகப் படைப்பாளர்களையும் மல்லிகையின் அட்டையில் பிரசுரித்துக் கனம் பண்ணத் தொடங்கினார்.

மல்லிகை இதழ்களின் அட்டைகளை ஈழத்து எழுத்தாளர்கள் அலங்கரிக்கத் தொடங்கினார்கள். அட்டையில் படம். உள்ளே அவரைப் பற்றியதொரு அறிமுகக் கட்டுரை!

இலங்கை எழுத்தாளர்களுக்கான இந்தக் கனம் பண்ணுதலை யார் செய்தார்கள்? ஜீவாவின் மல்லிகை தான் செய்யத் தொடங்கியது! செய்தது! செய்கிறது!

கடைசியாக வந்த மல்லிகையின் (அக்டோபர் 2001) அட்டையை அலங்கரிப்பவர் மலையகத்தின் மூத்த எழுத்தாளர் ஏ. பி. வி. கோமஸ் அவர்கள்.

படைப்பாளன், பத்திரிகையாசிரியன், என்னும் கட்டங்களில் இருந்து இன்னொரு கட்டம் நோக்கி நகர்கின்றார் ஜீவா. அதுதான் மல்லிகைப் பந்தல் நூல் வெளியீடுகள். 1986-ல் ஒரு நூல் வெளியீட்டாளர் ஆகின்றார்.

மல்லிகைப் பந்தலின் முதல் நூலாக 1986-ல் அட்டைப் பட ஓவியங்கள் என்னும் மல்லிகையின் அட்டைகளை அலங்கரித்த 35 எழுத்தாளர்களின் அறிமுகக் கட்டுரைத் தொகுப்பு வெளிவந்தது. பத்து வருடங்களின் பின் 1996-ல் மல்லிகை முகங்கள் என்னும் நூல் 65 எழுத்தாளர்களின் அறிமுகக் கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்தது. ஈழத்தின் 100 படைப்பாளர்கள் இந்த இரண்டு மல்லிகைப் பந்தல் வெளியீடுகள் மூலம் அறிமுகம் பெறுகின்றனர். மல்லிகைப் பந்தல் கடந்த 15 ஆண்டுகளில் 50க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு ஒரு சாதனை படைத்திருக்கின்றது.

டொமினிக் ஜீவா அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் ‘எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்’ என்னும் மல்லிகைப் பந்தல் வெளியீடு.

5 சிறுகதைத் தொகுதிகள், ஒரு வாழ்க்கை வரலாற்று நூல், அனுபவ முத்திரைகள், ஈழத்திலிருந்து ஒரு இலக்கியக் குரல், மல்லிகையின் கேள்வி பதில்கள் அடங்கிய ‘தூண்டில்’, ஜீவாவின் முன்னுரைகள், மல்லிகையின் தலையங்கங்கள் என்று ஜீவாவின் 10க்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

இத்தனை இலக்கியப் பங்களிப்புக்களை செய்துள்ள, செய்து கொண்டுள்ள திரு. டொமினிக் ஜீவாவுக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை மறைத்து விட்டு முதுகலைமாணிப் பட்டத்தை அளிக்க யாழ் பல்கலைக் கழகம் முன்வந்தது ஏன்?

இந்த முதுகலைமாணிப் பட்டம் என்கின்ற (M. A. Lit) எம். ஏ. லிட்றேச்சர் பட்டம் யாழ் பல்கலைக் கழகத்தினால் இதற்கு முன் வழங்கப்பட்டிருக்கின்றதா? இல்லை என்றால் இப்போது மட்டும், ஜீவாவுக்கு மட்டும் ஏன்? எனக்குத் தெரிந்தவரை இந்த முதுகலை மாணிப் பட்டம் நூற்றுக்கு நூறு கல்வி சார் பட்டம் மாத்திரமே அல்ல. கௌரவப் பட்டமும் கூடத்தான். ஆனாலும் உயர் விருதான இலக்கியக் கலாநிதி விருதினை விடக் குறைந்தது.

கலாநிதிப் பட்டத்தை விட குறைவான ஒரு பட்டத்தினை ஜீவாவுக்களித்து விட்ட யாழ் பல்கலைக் கழகம் ஜீவாவின் இலக்கியப் பணிகளைக் கௌரவித்துள்ளது என்று காட்டிக் கொள்ள வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது?

டொமினிக் ஜீவா என்கின்ற இலக்கியவாதிக்குப் பட்டமளித்து அவரைப் பல்கலைக் கழகம் கௌரவிக்க வேண்டும் என்கின்ற தீர்மானம் யாழ் பல்கலைக் கழக மூதவைக்கு யாரால் முன்மொழியப் பட்டது?

இலக்கியக் கலாநிதிப் பட்டம் அல்ல! கௌரவிக்க வேண்டுமென்றால் முதுகலை மாணிப் பட்டத்தைக் கொடுப்போம் என்கின்ற முடிவு யாரால் எடுக்கப் பட்டது? அதற்கான காரணங்கள் என்ன?

டானியல் என்கின்ற படைப்பாளிக்கும் இப்படியானதொரு கௌரவம் வழங்கப் பட வேண்டும் என்னும் கோரிக்கை முன்பும் யாழ் பல்கலைக் கழகத்தினால் நிராகரிக்கப் பட்டதான செய்திகள் உண்மையானவையா!

இக்கேள்விகளுக்கான பதில்களை யார் தருவார்? யாருமே தர முன்வரா விட்டால் எங்களைப் பொறுத்தவரை தெரியாததுகள் தான்!

இலக்கியக் கலாநிதி என்கின்ற பட்டம் வந்து தான் ஜீவாவுக்கு ஒரு கௌரவத்தைத் தரப் போகிறது என்பதில்லை. அவருடைய சில சின்னச் சின்ன பலவீனங்களை விடவும் ஈழத்து இலக்கியத்துக்காக அவர் ஆற்றியுள்ள பணிகள் பெரியவை. பிரமாண்டமானவை. ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு முக்கிய இடம் டொமினிக் ஜீவா என்கின்ற இந்த மல்லிகை ஜீவாவுக்குண்டு. அவருடைய பன்முகப் பட்ட இலக்கியப் பணிகளுக்குண்டு. இலக்கிய ஆளுமைக்குண்டு. அதை விட வேறு கௌரவம் என்ன இருக்கிறது. கௌரவப் பட்டம் என்ன இருக்கிறது?

*24-12-2001*

# எப்படித் துடைப்பர் இந்த வரலாற்றுக் கறையை.........?

*– திக்குவல்லை கமால்*

பல்கலைக் கழகங்கள் முறைசார் உயர்கல்வி நிலையங்களாகும். வருடா வருடம் பல்வேறு துறைகளில் பட்டம் பெற்று நூற்றுக் கணக்கானவர்கள் வெளியேறுகின்றனர். அதேவேளை ஆற்றலும் சுயமுயற்சியும் காரணமாக பல்கலைக் கழகங்களுக்கு வெளியேயும் பல்வேறு துறைகளில் சாதனை புரியும் பலரை நாம் பார்க்க முடியும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே அத்தகையவர்களை பல்கலைக் கழகங்கள் கௌரவித்துப் பட்டம் வழங்குவது உலக நடைமுறை.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நீண்ட காலப் போராட்டத்தின் விளைவாகக் கிடைத்த சொத்து. யாழ்ப்பாணச் சமூகத்துக்கு மாத்திரமன்றி, சகல தமிழ்ப் பேசும் மக்களதும் சாதனைகளைக் கண்டறிந்து கௌரவிக்கும் பொறுப்பு அதற்குண்டு. இத்தகைய கௌரவப் பட்டங்களை அது வழங்கி வருவதும் அறிந்ததே. அண்மையில் திரு. டொமினிக் ஜீவாவுக்கு முதுகலைமாணிப் பட்டமளிக்க முனைந்ததும், ஜீவா அதனை ஏற்க மறுத்ததும் இலக்கியவாதிகள் மத்தியிலும் அறிவு ஜீவிகளிடையேயும் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முதுகலைமாணி எனும் அறிவுசார் பட்டத்தையல்ல கலாநிதிப் பட்டத்தையே வழங்கியிருக்க வேண்டுமென்பதே அனைவரதும் குரலாகும். யாழ். பல்கலைக் கழகத்தின் நடவடிக்கையை நியாயப் படுத்தி எந்தவொரு குரலும் இதுவரை எழவில்லை.

திரு. டொமினிக் ஜீவா எழுத்தாளனாய்..... மல்லிகை ஆசிரியராய்..... மல்லிகைப் பந்தல் நூல்வெளியீட்டாளராய்..... முற்போக்கு எழுத்தாளர் சங்க முக்கியத்தராய்......... வேரூன்றிய பெரு விருட்சம். என்னதான் சாதனை செய்தாலும் டொமினிக் ஜீவா, டானியல் போன்றவர்களுக்கு யாழ்ப்பாணச்

சமூகம் என்ன இடம் வழங்கியதென்பதை எவரும் அறிவர். அந்த வைரஸ் யாழ் பல்கலைக் கழகத்தையும் தாக்கி நோய் வாய்ப்படுத்தியுள்ளதோ என்ற நியாயமான சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகும்.

திக்குவல்லை போன்ற சிங்களப் பிரதேச சின்னஞ் சிறு கிராமங்கள் தமிழ் சர்வதேசமெங்கும் பேசப்படுகிறதென்றால் அதைப் பேசவைத்தவர் யார்? அதற்கான பின்னணி என்னவென்று சிந்திக்கும் போது டொமினிக் ஜீவா போன்றவர்களின் ஆளுமையும் ஆற்றலும் புரியவரும்.

எழுபதுகளில் ஆர்வமேலீட்டால் எழுத முனைந்த திக்குவல்லை இளசுகளுக்கு, மல்லிகையின் தொடர்பு ஒரு திசைமார்க்கத்தை இனங்காட்டியது. அந்த வழி நின்று பத்துக்கு மேற்பட்ட எழுத்தாளர் - கவிஞர் - மொழியாக்கவாளர்கள் இன்றும் மல்லிகையோடு தொடர்பு வைத்து எழுதி வருகின்றனர்.

இவர்களை ஒன்று திரட்டி இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக திக்குவல்லைச் சிறப்பிதழை மல்லிகை வெளியிட்டமை முக்கியமானதொரு பதிவாகும்.

இத்தொடர்பு வெறும் தொலைத் தொடர்பாக அமைந்து விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஜீவா, அழைக்கும் போதெல்லாம் இங்கு வந்து போகத் தவறவில்லை. 1973-ல் தென்னிலங்கை இலக்கிய விழாவுக்கு வருகை தந்தவர், 1999-ல் சம்ஸின் நாவல் வெளியிட்டு விழாவுக்கும் வருகை தந்தார். இடையில் பல தடவைகள்.

எமது இலக்கியங்களை நூலாக்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கடி வலியுறுத்தி வந்ததோடு, தமிழ் நாடு என்.ஸீ.பீ.எச். மூலமாகவும், அவரது மல்லிகைப் பந்தல் வாயிலாகவும் திக்குவல்லை எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டுள்ளார்.

மல்லிகை அட்டைப்பட கௌரவத்தைக் கூட எமக்கு வழங்கியவர்.

பல்வேறு பிரதேசங்களிலும் இலக்கிய முனைப்புக்களை இனங்கண்டு அவற்றை வளர்த்தெடுப்பதன் மூலமாகவே ஒட்டு மொத்தமான தேசிய இலக்கியத்தை கட்டியெழுப்ப முடியுமென்று அடிக்கடி எடுத்துரைப்பவர், ஜீவா. அதற்கொரு நல்லுதாரணமாக திக்குவல்லை அமைகிறது.

தமிழும் இலக்கியமும் ஒரு சாராரின் தனிச் சொத்தல்ல. அது தமிழ் பேசும் இடமெங்கும் வளர வேண்டும், வளம் பெறவேண்டுமென்ற தீராத அவாக் கொண்டவர் ஜீவா. அதனால்தான் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்கழுக்கு அப்பாலிருந்தெல்லாம் அவர் அழைக்கப் படுகிறார். ஆர்வத்தோடு அவரும் கலந்து கொள்கிறார்.

மினுவாங்கொட, நீர்கொழும்பு, பாணந்துறை, அத்துலுகம, அநுராதபரம், கெக்கிராவ, மாத்தளை, பலாங்கொடை, ஹட்டன், எலபொட, புத்தளம்........ இங்கெல்லாம் ஜீவா, பேசியும், கலந்துரையாடியும் பட்டறைகளில் பங்கு கொண்டும் தன்பணியைத் தொடர்கிறாரென்றால் பாருங்களேன்.

மல்லிகை ஆரம்பித்ததிலிருந்தே சிங்களக் கலைஞர்களை கௌரவித்தும், அவர்தம் ஆக்கங்களை மொழிபெயர்ப்பு வாயிலாக தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தியும், சிங்கள இலக்கியச் சர்ச்சைகளையும் போக்குகளையும் தொட்டுக் காட்டியும், பரஸ்பர புரிந்துணர்வுக்கு வழிவகுத்தார். பல சிங்கள எழுத்தாளர்களினது உருவங்களை மல்லிகையில் அட்டைப் படங்களாகப் பதிப்பித்துத் தமிழ் எழுத்தாளருக்கு அறிமுகம் செய்து வைத்தவர். இது பின்நாளில் அவர்கள் மத்தியில் தனிமதிப்பு ஏற்பட வழி வகுத்தது. இன்று தேவை கருதி தேசிய ஒற்றுமை பேசப்படுகிறது. அதை அன்றே அறிந்து செயற்படுத்தியதன் மூலம் சிங்கள இலக்கிய உலகில் ஓர் இடத்தை சுவீகரித்துக் கொண்டவர், ஜீவா. மல்லிகைப் பந்தல் மூலமாக சிங்கப் புத்தகங்களை வெளிக் கொணர்வதும் விதந்துரைக்கத் தக்கதொரு பாய்ச்சலாகும்.


மிக அதிகமான கலை - இலக்கிய தமிழ் - சிங்கள அமைப்புக்களின் பாராட்டையும் விருதுகளையும் பெற்ற ஒரே எழுத்தாளர் டொமினிக் ஜீவாதான் என்றால் அது மிகையல்ல. பல வெளிநாட்டு இலக்கிய அமைப்புக்கள் கூட, சிறப்பு விருந்தினராக அழைத்து மதிக்கப்பட்டவர். இதன் உச்சக் கட்டமாகத்தான் பல்கலைக் கழக கௌரவம் அமைய வேண்டும். அந்த சந்தர்ப்பத்தை யாழ் பல்கலைக் கழகம் தவறவிட்டதன் மூலம் ஜீவாவுக்கு மட்டுமல்ல, எழுத்தாளர் குழாத்துக்கே பெரும் தலைக் குனிவை ஏற்படுத்திவிட்டது. இதை எந்தவகையில் மேற்படி பல்கலைக் கழகம் துடைத்தெறியப் போகிறதென்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்திலே கிழக்குப் பல்கலைக் கழகம் நாடக முயற்சிகளுக்காக குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுக்கும், தென்கிழக்குப் பல்கலைக் கழகம் கவிஞர் திலகம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களுக்கம் கௌரவக் கலாநிதிப் பட்டங்கள் வழங்க முனைந்துள்ளதை மகிழ்ச்சியோடு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

இப் பல்கலைக் கழகங்களும் நாட்டின் ஏனைய பிரதேச பல்கலைக் கழகங்களும் ஜீவாவுக்கு மட்டுமென்ன, ஏனைய கலை இலக்கிய சாதனையாளர்களுக்கும் எதிர் காலத்தில் உரிய கௌரவமளிக்குமென நிச்சயமாக நாம் நம்புகின்றோம்.

*30–12–2001*





எதிர்காலத் தலைமுறைக்கான
ஓர் ஆவணம்.

ஜீவாவுக்கு யாழ்.
பல்கலைக்கழகத்தால்
வழங்கப்பட்ட பட்டத்தை அவர்
மறுதலித்தது தொடர்பாகப்
பத்திரிகைகளும், இலக்கிய
ஆர்வலர்களும் வெளியிட்ட
கருத்துக்களும், சர்ச்சைகளும்,
எதிர்காலத் தலைமுறைக்கான
காலத்தின் பதிவுகளாக
இந்நூலில்
ஆவணமாக்கப்பட்டுள்ளன.

ISBN955825013-9
9799558250135